Registered as a News Paper

பொழிவு - 14
குவிப்பு - 12
பக்கங்கள்- 16
விலை ரூபா 40.00
டிசம்பர் 2011
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.

## கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவு

அன்னை தெரேசா சபையினர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை முற்றாக மறுக்கிறேன்

# ஊடகங்கள் பொய்யான தகவல்களை பொறுப்பின்றி வெளியிட்டுள்ளன!

## கர்தினால் மல்கம் ஆண்டகை கடுமையான கண்டனம்

அன்னை தெரேசா சபையினர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நான் முற்றாக மறுக்கிறேன். உண்மைகள் உரியவிதமாகக் கண்டறியப்படாமல் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எந்த ஆதாரமும் இன்றி வெளியிடப்பட்ட பொய்யான தகவல்களால் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அன்னை தெரேசா சபையினருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு எமது கடுமையான எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம் என கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.


கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாகத்தில் அன்னை தெரேசா துறவற சபையினரின் உதவியுடன் நடாத்தப்படும் பிறிம் நிவாச மடத்தில் குழந்தைகள் விற்பனை செய்யப்படுவதாகக் குற்றம்சாட்டி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிவுறுத்தலின் பேரில் அருட்சகோதரி மேரி எலிசா பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போதே கர்தினால் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார். கைதுசெய்யப்பட்ட அச்சகோதரி பின்னர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார். இச்செய்தி அறிந்த உயர் தலைவி அருட்சகோதரி பிறேமா கொழும்புக்கு விரைந்து வந்தார் (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

### அரச நிகழ்வுகளில் கலந்துகொள்ளமாட்டேன்

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை அன்னை தெரேசா சபையினர்மீது சுமத்தியதால் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும்வரை அரசு அல்லது அரச நிறுவனங்கள் இக்கிறிஸ்மஸ் காலத்தில் ஒழுங்குசெய்யும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளமாட்டேன் என கர்தினால் மல்கம் றஞ்சித் ஊடக மாநாட்டில் தெரிவித்துள்ளார். இதே நிலைப்பாட்டையே அநுராதபுர ஆயரும் எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



### நல்வாழ்த்துக்களை நவில்கின்றோம்



### வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார் (யோவான் 1: 14)

உங்கள் அனைவருக்கும் அன்பும் அருளும், அமைதியும் நிறைந்த கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

அருட்பணி. தமிழ் நேசன் (மன்னா ஆசிரியர்)
மற்றும்
மன்னா அலுவலகப் பணியாளர்கள்.

### உலகிலேயே பெரிய கிறிஸ்மஸ் மரம்! திருத்தந்தை ஒளிரவைத்தார்



உலகின் மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரத்தினை (Electronic Christmas Tree) திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் வத்திக்கான் மாளிகையில் இருந்தவாறே இணையத்தளம் மூலமாக ஒளிரவைத்தார். டிசம்பர் 7ஆம் திகதி அன்று திருத்தந்தை 2011ஆம் ஆண்டிற்கான உலகிலேயே மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரத்தினை நவீன தொழில்நுட்ப சாதனமான ஐ பாட்டைத் (Using i Pad) தொட்டு ஒளிரவைத்தார். (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)



கிறிஸ்மஸ் தொப்பி அணிந்தவராக திருத்தந்தை காட்சியளிக்கின்றார்

### பொன்விழா நாயகனே வாழி!



தங்கத் திருவுருவே தவிப்பவர்க்குத் தண்ணொளியே!
தாயாகித் தந்தையுமாய், யாதுமாகி நிற்பவரே!
வங்காலைப் பதிதந்த வித்தகரே உங்களது
வளமான இளம்பருவம் நானாட்டான் கண்டதல்லோ
எங்கும்நிறை பரமன் திருவடிக்குச் சேவைசெய்யும்
குருவாக நீரிருந்து ஆன்மீகம் தனைவளர்த்து
பங்கம் எதுவுமின்றி ஆண்டைம்பதைக் கடந்தீர்
பாசம் நிறைந்த நல்ல பெருங்குருவே நீர் வாழ்க!

பேசுகின்ற வார்த்தையிலே பண்பதனை நாமுணர்ந்தோம்
பேசாத போதுமுங்கள் மௌனம் நல்ல சேதிசொல்லும்
வீசுகின்ற தென்றலினால் உள்ளம் குளிர்வதுபோல்
வசைஎதுவுமில்லா உம் ஆசீரில் நாம் நனைந்தோம்!
ஆசையுடன் நாமும் நாடி உமைத் தேடுகையில்
ஆலவிருட்சம்போல் அரவணைத்து நிழலளித்தீர்
பாசமதைப் பொழிந்து, பாங்காய் எமை அணைத்து
பரமன் பணிசெய்த பொற்குருவே நீர் வாழ்க.

- கலாபூசணம் அ. அந்தோனிமுத்து

### கொழும்பு மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய துணை ஆயர்கள்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயர்களாக (Auxiliary Bishops) கொழும்பு மறைமாவட்டக் குருக்களான அருட்தந்தை இம்மானுவேல் பெனாண்டோ அடிகளாரையும், அருட்தந்தை மெக்ஸ்வல் சில்வா அடிளாரையும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் நியமித்துள்ளார். கடந்த கார்த்திகை மாதம் 28ஆம் திகதி திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி திருத்தந்தையின் இந்த நியமனங்களை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். அருட்தந்தை இம்மானுவேல் பெனாண்டோ ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டமை தமிழ் கத்தோலிக்கரிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



அருட்தந்தை
இம்மானுவேல் பெனாண்டோ



அருட்தந்தை
மெக்ஸ்வல் சில்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு

## இணைந்த முன்னெடுப்புக்கள் தொடர்ந்து செல்வது அவசியம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்று நமது ஈழத்தமிழர்களை நினைத்துத்தான் நம் தமிழ்ப் புலவன் பாரதி அன்று பாடினானோ தெரியவில்லை. இயல்பிலேயே ஒன்றுபட்டுச் செயற்படாத ஈழத்தமிழினத்தின் அரசியல் தலைவிதி எப்படியாயிற்று என்பது நமக்குத் தெரியும்.

மேய்ப்புப் பணி முயற்சிகளிலும், மக்களின் நலன் சார்ந்த முக்கிய அரசியல் நிலைப்பாடுகளிலும் தமிழ் மறைமாவட்டங்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு - திருகோணமலை, மன்னார் ஆகியவை இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற குரல் பன்னெடுங் - காலமாகவே ஈழத்துக் கத்தோலிக்க திருச்சபையில் ஒலித்துக்கொண்டே வந்துள்ளது.

### குரலற்ற தமிழ் மக்களின் குரல்

ஆனால் இவ்விடயத்தில் தமிழ் மறை மாவட்டங்களிடையே எதிர்பார்த்த ஒன்றிணைந்த செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்பது வருத்தத்திற்குரியது. இதனால் தமிழ் மக்களின் நலன் சார்ந்த - அரசியல் உரிமைகளுக்கான தமிழ் திருச்சபையின் குரல் உறுதியாக ஒலிக்கவில்லை என்பதே உண்மை. தனிப்பட்ட ஆயர்கள் தம் பங்கிற்கு சில கருத்துக்களை கூறியிருந்தாலும் மூன்று ஆயர்களும் ஒருமித்து ஒரு கருத்தை வலியுறுத்தும்போது அது ஆட்சியாளர்களிடமும், சர்வதேச சமூகத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உண்மையல்லவா?

### ஆயர் மன்றத்தின் நிலைப்பாடு

இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் தமிழ் ஆயர்கள் தனித்துவமாக ஒன்றிணைந்து செயற்படுவதை விரும்பியதே இல்லை. எந்தக் கருத்தையும் 'இலங்கை ஆயர்களின் நிலைப்பாடாகவே' வெளிக்கொணரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர்.

தமிழ் குருமட மாணவர்கள் கண்டி தேசிய குருமடத்தில் கல்விபயில முடியாத நெருக்கடியான காலகட்டத்தில் - இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரைக்கு அமைவாக - தமிழ் குருமட மாணவர்களுக்கான உயர் குருத்துவக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் நிறுவ அன்றைய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை எடுத்த முயற்சியைக்கூட அன்றைய ஆயர்கள் கடுமையாக எதிர்த்தனர் என்பதே வரலாறு. "நாடு பிரிவதற்கு முன்னர் திருச்சபையைப் பிரிக்க முயல்கிறீர்களா?" என்று தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் ஆயர் மன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. தற்துணிவும், நெஞ்சுரமும் கொண்ட தியோகுப்பிள்ளை ஆண்டகை தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து தன் நோக்கத்தை செயற்படுத்தினார்.

### இணைந்த மறைக்கல்வி ஆண்டு

எதிர்வரும் (2012) ஆண்டை மறைக்கல்வி ஆண்டாகக் கொண்டாட மூன்று தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்து தீர்மானித்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். என்றோ ஆரம்பித்திருக்க வேண்டிய இத்தகைய முயற்சிகள் இன்றுதான் ஆரம்பிக்கப்படுகின்றன. காலம் கடந்தாயினும் இத்தகைய முயற்சிகளின் முக்கியத்துவம் உணரப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதே.

### ஒன்றிணைந்து செயற்படுவோம்.

இதுபோன்ற இணைந்த செயற்பாடுகள் மேய்ப்புப்பணி அலுவல்களில் மட்டுமல்ல தமிழ் மக்களின் நலன் சார்ந்த உண்மைகளை உறுதியாக, உரக்கச் சொல்வதிலும் வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம்.

நடந்துமுடிந்த பேரழிவுகளுக்கு யாரை நொந்துகொள்வதென்று தெரியவில்லை! நமது 'ஆழ்ந்த மௌனமும்' காரணமாகாதா? எனவே தொடரும் காலங்களில் மேய்ப்புப்பணி அலுவல்களிலும், தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்த விடயத்திலும் ஒன்றிணைந்து செயற்படுவோம். நல்லதே நடக்கும் என நம்புவோம்.

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*

**அன்புடன் - அருட்பணியாளர் தமிழ் நேசன்.**

**பதிப்பாசிரியர் - மன்னா**



# வாசகர் எண்ணங்கள்

### வளங்கள் பெற்றிட வாழ்த்துகிறோம்!



மாதம் தோறும் மன்னவனாய் மாண்புடன் பவனிவரும்
மன்னாவே நாமுன்னை மகிழ்ந்தே படிக்கின்றோம்
சின்னஞ்சிறிய கவிதைகள், சிறப்புமிக்க கதைகள்,
அறிவுமிகு கட்டுரைகள், மாணவர் பகுதி என
பற்பல அம்சங்களுடன் பலவர்ணம் தாங்கி
பகலவனாய் நீயும் பண்புடன் ஒளிவீசுகின்றாய்.
வாழ்த்துகின்றோம் நாமுன்னை வளங்கள் பல பெற்றிட
வருவாய் எந்நாளும் வருவாய் வருவாயே!

*அ. சுதர்சினி, வா. பெ. கண்டல், அளவக்கை*

### வாசலில் காத்திருக்கின்றேன்!



உதிர்ந்த உன் மலரின் ஒவ்வொரு இதழும்
உரமாகப் போகிறது
உன்னுடைய அடுத்த இதழுக்காக
வாசலில் என்றும் காத்திருக்கின்றேன் - என்
வீட்டிற்கு எப்போது வருவாய்? மன்னாவே!

*ம. டிசாமினி, வ/ நெளுக்குளம் கலைமகள் ம.வி.*



### என்னுயிர் மன்னாவே!



வான் முகிலின் தோற்றமே வசந்தத்தின் வாசலே
வண்ணமயில் தோகையே அழகிய வதனமே மன்னாவே!
ஆசையாய் நான் சுவைத்து அனுதினமும் படித்திட
பல வகை அம்சங்களைத் தருவதென்ன மன்னாவே!

தடைகள் பல வந்தாலும் திடமுடன் தகர்த்தெறிந்து
இறைபுகழ் கூறி நிற்கும் சோலைவனப் பூவே!

உன் தன்னார்வப் பணிதான் என்ன?
உன் ஆர்வத்தின் அழகுதான் என்ன?
உலகத்தார் கைகளில் நீ தவழ்ந்திடாத இடம்தான் எங்கே?

உன் தொகுப்பினை படிக்காத இறைமக்கள் யாரும் இல்லை
உன் வரவினை எதிர்பார்க்காத மக்களும் இங்கு இல்லை
உன் வருகையினை பிறமத சகோதரர்களும்கூட
தினமும் எதிர்பார்த்து ஆர்வமுடன் காத்திருக்கின்றார்கள்.

*பி. அன்ரனிகுறுஸ் சரன்சலோமி,*
*இல 36, அரு. அன்னை தெரேசா ஆலயம், துட்டுவாகை.*



# உங்கள் அன்பான கவனத்திற்கு!

### வாசகர்களே!

மன்னா பத்திரிகையை ஆர்வத்தோடு வாங்கி வாசித்துப் பயன்பெறும் உங்கள் ஆர்வமும், உற்சாகமும்தான் நாம் இப்பணியில் தொடர்ந்து முன்னேறிச்செல்ல எம்மை உந்துகின்றது. இவ்வேளையில் இப்பத்திரிகைப் பணியில் முக்கிய சவாலாக உள்ள விடயம் நிதிப்பிரச்சினையே என்பதைச் சொல்லியாக வேண்டும். ஒவ்வொரு மாதமும் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான பணம் கட்டாயம் கையில் இருந்தே ஆகவேண்டும். இந்நிலையில் உங்கள் அன்பான ஒத்தழைப்பை எதிர்பார்க்கின்றோம். நீங்கள் பெறும் மன்னா பத்திரிகைக்குரிய பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகக் கொடுத்து மன்னா விநியோகஸ்தர்களுக்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குங்கள். ஒரு பத்திரிகைக்குரிய பணத்தை பெற விநியோகஸ்தர்கள் ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவைகூட சில வீடுகளுக்கு செல்லவேண்டி உள்ளது.

பல தடவைகளில் விநியோகஸ்தர்கள் தங்கள் சொந்த பணத்தை செலுத்தி எமக்கு கணக்கை முடிக்கின்ற நிலமைகளும் ஏற்படுகின்றன. எந்தவிதமான ஊதியமும் இன்றி இறைபணியாகக் கருதி இந்த பத்திரிகை விநியோகத்தை மேற்கொள்ளும் விநிகோகஸ்தர்களுக்கு உங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குங்கள்.

### சந்தாதாரர்களே!

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மன்னா பத்திரிகையை மிகுந்த ஆர்வத்தோடு தபால் மூலம் பெறும் சந்தாதாரரே உங்களின் ஆர்வம் எமக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தருகின்றது. ஆனால் பல சந்தாதாரர் தங்கள் சந்தாவை புதுப்பிப்பதுபற்றிய சிந்தனையற்று இருக்கின்றார்கள்.

நிதி நெருக்கடி காரணமாக நாம் தொடர்ந்து மன்னாவை அவர்களுக்கு அனுப்ப முடியாமல் இருக்கின்றோம்.

எனவே தங்கள் சந்தாவை புதுப்பிக்காத உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் அனைவருடைய பதத்திரிகைகளையும் எதுவித முன்னறிவித்தலும் இன்றி உடனடியாகவே நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் ஆண்டு, மாதம் உங்களுக்கு அனுப்பப்படும் பத்திரிகையின் முகவரிக்குக்கீழே தரப்படுகின்றது. எனவே அதைப்பார்த்து உடனடியாக உங்கள் சந்தாவைப் புதிப்பித்துக்கொள்ளுங்கள். சந்தா விபரம் இறுதிப்பக்கத்தில் உள்ளது.

### விநியோகஸ்தர்களே!

எமது பத்திரிகைப் பணியில் முக்கிய பங்காளிகள் நீங்களே. பலவித சிரமங்கள் மத்தியில் இப்பத்திரிகை விநியோகப் பணியை மாதாந்தம் செய்துவருகின்றீர்கள். உங்களுக்கு எமது நன்றிகள். இறைவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

அநேகமான விநியோகஸ்தர்கள் தமது கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் அன்றைய தினமே வீடுகளில் பத்திரிகையை விநியோகம் செய்கின்றார்கள். ஆனால் சிலர் பத்திரிகைளை தம்மோடு வைத்திருந்துவிட்டு காலம் தாழ்த்திக்கொடுப்பதாக அறியவருகின்றோம். எனவே அன்பான விநியோகஸ்தர்களே உங்கள் கைகளில் மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய குடும்பங்களுக்கு விநியோகம் செய்யுங்கள். திருச்சபை சார்ந்த செய்திகளாயினும் அவை 'சுடச் சுட' வாசகர்களைப் போய்ச் சேரவேண்டும் என்பதில் நாம் மிகவும் உறுதியாக இருக்கின்றோம். ஆறிய கஞ்சி பழங்கஞ்சி அல்லவா?

பத்திரிகைக்குரிய பணத்தையும் காலம் தாமதிக்காமல் பங்கு மட்டத்தில் பத்திரிகைக்கு பொறுப்பாக இருப்பவர்களிடம் ஒப்படையுங்கள்.

### பங்கு மட்ட பொறுப்பாளர்களே!

சில பங்குகளில் பங்குத்தந்தையர்களும், சில பங்குகளில் அருட்சகோதரிகளும், சில பங்குகளில் பொதுநிலைப் பணியாகர்களும் மன்னா பத்திரிகை விநியோகத்திற்கு பங்கு மட்டத்தில் பொறுப்பாக உள்ளனர். பங்கு மட்டத்தில் இந்த மன்னா பத்திரிகை விநியோகத்தை பொறுப்பேற்று நடத்தும் உங்களை நாம் மிகுந்த நன்றியோடு நினைக்கின்றோம். எமது பத்திரிகைப் பணிக்கு நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பு மிகப்பெரிது.

உங்கள் கைகளுக்கு பத்திரிகை கிடைத்ததும் குறிப்பிட்ட விநியோகஸ்தர்களிடம் அவர்களுக்குரிய பத்திரிகைகளை உடனடியாகக் கொடுத்துவிடுங்கள். சில இடங்களில் காலம் தாழ்த்தப்படுவதாக அறிகிறோம். அதேபோன்று எவ்வளவு விரைவாக பத்திரிகைப் பணத்தை செலுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக பணத்தை எமக்கு அனுப்பிவையுங்கள்.

புதிய வருடத்தில் ஒவ்வொரு பங்கும் எத்தனை சதவிகிதமான பத்திரிகைகளைப் பெறுகின்றன என்ற விபரத்தை வெளியிட உள்ளோம். குடும்பங்களின் எண்ணிக்கையையும் அங்கு விநியோகிக்கப்படும் பத்திரிகைகளின் எண்ணிக்கையையும் வைத்து இந்த விகிதாசாரம் கணிக்கப்படும். எனவே உங்கள் பங்கு எத்தனையாவது இடத்தில் இருக்கும் என்பதை நீங்களே தீர்மானித்து அதற்கு முன்னர் பத்திரிகை விநியோகத்தை அதிகரிக்க ஆவன செய்யுங்கள்.

நன்றி, இறையாசீர் - மன்னா நிர்வாகம்

### உண்மை உறைக்கும் கமிலஸ்




### சிரிக்க சிந்திக்க

*பங்குத்தந்தை :* இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள் மூன்று மாதத்தில் கட்டி எழுப்பிவிடுவேன்.

*பங்கு மக்கள் :* Very Good. ஆனால், காசு காசு என்று எங்களைக் கரைச்சல்படுத்தக்கூடாது!

........................

*பிச்சைக்காரன் :* சில்லறை இருக்கா சார்?

*கடைக்காரர் :* ஒன்றுமில்லை, போ.... போ... ஒரே கரைச்சல்!

*பிச்சைக்காரன் :* ஆயிரம் ரூபாய்க்கு சில்லறை இருக்கான்னு கேட்டா பெரிசா அலட்டிக்கொள்றீங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுத்திருத்தலப் பிரதேசத்தில் பாரிய நீர் விநியோகத் திட்டம்

## நீர்வழங்கல் அமைச்சர் தினேஸ் மடுவுக்கு வருகை தந்து ஆரம்பித்துவைத்தார்

மடுத்திருப்பதியில் பாரிய நீர்விநியோகத்திட்டம் கடந்த டிசம்பர் 10ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்டது. 110 மில்லியன் ரூபா பெறுமதியான இந்தப் பாரிய நீர் விநியோகத் திட்டம் 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் பூர்த்தியடைந்துவிடும் எனவும் அதன்பின்னர் மடுத்திருப்பதியில் 24 மணிநேர நீர்விநியோகம் இடம்பெற வாய்ப்புள்ளதாகவும் உதவிப் பரிபாலகர் ரூபன் பெனாண்டோ அடிகளார் மன்னாவுக்குத் தெரிவித்தார்.

நீர்வழங்கல் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அவர்களும் அமைச்சர் றிசாட் பதியுதீன், அமைச்சர் மில்றோய் பெனாண்டோ மற்றும் ஏனைய சில அதிகாரிகளும் இந்தத்திட்டத்தை ஆரம்பித்து வைக்க கொழும்பில் இருந்து மடுவுக்கு வருகை தந்திருந்தனர்.

மன்னார் ஆயர், குருமுதல்வர், மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை ஆகியோர் மடுவுக்கு வருகை தந்த அமைச்சர் குழுவினரை வரவேற்றனர். இத்திட்டத்தை ஆரம்பித்துவைக்க வருகை தந்த அமைச்சர் குழுவினருக்கான சிறப்பு நற்கருணை ஆசீர் வழிபாடு மன்னார் ஆயர் தலைமையில் இடம்பெற்றது. அமைச்சர்களின் இந்த வருகையின்போது இந்நீர்விநியோகத் திட்டம் தொடர்பாகவும், மடுத்திருப்பதியின் ஏனைய தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



மடுவுக்கு வருகை தந்த அமைச்சர் குழுவினர்

### மன்னார் ஆயரின் கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தி

மன்னா வாசகர்களுக்கு எனது இனிய கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்களை அன்போடு தெரிவிக்கின்றேன். *"உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் அமைதியும், அருளும் நிலைப்பதாக".*

கிறிஸ்துவின் பணியில்,
மேதகு. இரா. யோசேப்பு
ஆண்டகை, மன்னார் ஆயர்.



### நாவாந்துறை பங்கிலிருந்து செபமாலைத்தாசர் சபைக்கு நான்கு புதிய குருக்கள்




பாலேந்திரன் (செ.தா)



வீனஸ் செபஸ்ரின் (செ.தா)



ஜெபதாசன் (செ.தா)



பியோ மரிசுதன் (செ.தா)

வண. தோமஸ் அடிகளாரால் ஏற்படுத்தப்பட்ட சுதேசிய தியானயோக சபையான செபமாலைத்தாசர் சபைக்கு புதிய வருடத்தில் நான்கு குருக்கள் கிடைக்கவுள்ளனர். அருட்சகோதரர்கள் சந்தியாப்பிள்ளை பாலேந்திரன் (செ.தா), பாக்கியநாதன் வீனஸ் செபஸ்ரின் (செ.தா), செபமாலை ஜெபதாசன் (செ.தா), மரியதாஸ் பியோ மரிசுதன் (செ. தா) ஆகியோரே புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். இவர்கள் நால்வருமே யாழ் நாவாந்துறைப் பங்கைச் சார்ந்தவர்கள் என்பது சிறப்பு அம்சமாகும்.

எதிர்வரும் தைத்திங்கள் 12ஆம் நாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் இவர்கள் இறைவனின் குருக்களாக திருநிலைப்படுத்தப் படவுள்ளனர். பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய குருமணிகளை மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது. (புதிய குருக்கள் பற்றிய விரிவான குறிப்புக்களை 15ஆம் பக்கத்தில் காணலாம்)

### சேவியர் குரூஸ் அடிகளாரின் பொன்விழாத் திருப்பலி

அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளாரின் பொன்விழாத் திருப்பலி அவரது பிறந்தகமான வங்காலையில் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது. காலை 10.00 மணிக்கு பொன்விழா நன்றித் திருப்பலியும் தொடர்ந்து மதிய விருந்தும் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளை அடிகளாரின் குடும்ப உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ளனர். அருட்பணியாளர் ஜெயபாலன் குரூஸ் அடிகளாரைத் தலைவராகக் கொண்ட பொன்விழாக்குழுவினர் ஜனவரி மாதம் மன்னார் சிறிய குருமடத்தில் நன்றித் திருப்பலியையும், சிறப்பு மலர் வெளியீட்டையும் நடாத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மெதடிஸ்த திருச்சபையின் திருப்பணியாளர் அருள்ராஜ் குருவாக அருட்பொழிவு

கடந்த மூன்று வருடங்களாக (2007 - 2011) மன்னார் மெதடிஸ்த திருச்சபையில் திருப்பணியாளராகப் பணியாற்றிய பாக்கியராசா அருள்ராஜ் அவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த ஆலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அருட்திரு. அருள்ராஜ் அவர்கள் தனது குருப்பட்டத்திற்கு முன்னர் மன்னார் மெதடிஸ்த திருச்சபையில் பணியாற்றிய காலத்தில் வன்னி இறுதிக்கட்ட போரினால் பாதிப்படைந்து, காயங்களுக்கு உள்ளாகி மன்னாருக்கு வந்தவர்களுக்கு இவர் பல உதவிகளை தன் திருச்சபை சார்பாக செய்தார். அத்துடன் கத்தோலிக்க திருச்சபையினருடன் நெருக்கமான உறவுகளையும் பேணி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிகளாருக்கு மன்னாவின் செபம்நிறைந்த வாழ்த்துக்கள்.

### மன்னார் முன்னாள் பங்குத்தந்தையும் மன்னார் மறைக்கோட்டத்தின் முன்னாள் முதல்வரும் புதிய மன்னார் மறைமாவட்டம் உருவாக உழைத்த முன்னோடியுமான

## இம்மானுவேல் பயஸ் அடிகளார் இறைபதம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை மரியாம்பிள்ளை இம்மானுவேல் பயஸ் அடிகளார் கடந்த டிசம்பர் மாதம் 4ம் திகதி இறைபதமடைந்தார். இறக்கும்போது இவருக்கு வயது 74. இவரது இறுதிப் பயண நிகழ்வுகள் டிசம்பர் 7ஆம் திகதி யாழ் பேராலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.



இவரது பிரிவால் துயருறும் இவரது சகோதர குரு அருட்தந்தை பொஸ்கோ மதுரநாயகத்திற்கும், அவரது சகோதரர்களுக்கும் யாழ் மறைமாவட்ட சமூகத்திற்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா ஆழ்ந்த அனுதாபங்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

அருட்தந்தை பயஸ் அடிகளார் மன்னார் பங்குத்தந்தையாகவும், மன்னார் மறைக்கோட்ட முதல்வராகவும், மன்னார் மறைக்கோட்ட காணிப்பொறுப்பாளராகவும் பணியாற்றியதோடு புதிய மன்னார் மறைமாவட்டம் உதயமாக உழைத்த முன்னோடிகளில் முதன்மையானவராவார். இவர் அருட்தந்தை சேவியர் குருஸ், அருட்தந்தை மரிய சேவியர், மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆகியோரின் ஒரே வகுப்பு குருமட மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.


தன்னுடைய பணியில் உறுதியாகவும், பிரமாணிக்கமாகவும் இருந்த இவர், எந்த விடயத்தையும் பதட்டமின்றி அமைதியாக, அன்பாக பேசித்தீர்த்து வைப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். (அடிகளாரின் வாழ்வு மற்றும் பணி பற்றிய விரிவான குறிப்புகளை 15ஆம் பக்கத்தில் காணலாம்.)



பயஸ் அடிகளாரின் இறுதி நல்லடக்கத் திருப்பலியை யாழ் ஆயர் தலைமை தாங்கி ஒப்புக்கொடுப்பதையும், பயஸ் அடிகளாரின் சகோதரர் பொஸ்கோ அடிகளார், அருட்திரு. சேவியர் குருஸ், யாழ் குருமுதல்வர் ஆகியோர் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் படத்தில் காண்கின்றோம். (நன்றி - தமிழ் கத்தோலிக்க செய்தி இணையத்தளம்)

### குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும் கிங்சிலி ஆண்டகை

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் இவ்வருடம் தனது குருத்துவ வாழ்வில் பொன் விழாவைக் கொண்டாடுகின்றார். ஆயர் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்களின் பொன்விழா வாழ்த்துக்களை மன்னா மகிழ்வோடு தெரிவிக்கின்றது.



### இவ்வாண்டில் திருமண வாழ்வில் வெள்ளி விழா, பொன் விழாக் காணும் தம்பதியர்களின்

## குடும்ப விழா

### நூற்றுக்கும் அதிகமான விழா நாயகர்கள் பங்கேற்பு

மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இவ்வாண்டில் திருமண வாழ்வில் வெள்ளி விழா மற்றும் பொன்விழா காணும் தம்பதியர்களுக்கான குடும்ப விழா டிசம்பர் மாதம் 10ஆம் திகதி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து பொன்விழாக் கண்ட 20 தம்பதியரும் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளி விழாக்கண்ட 100 தம்பதியரும் பங்கேற்றிருந்தனர்.

முதல் நிகழ்வாக மன்னார் ஆயர் தலைமையில் யூபிலிவிழா நன்றித்திருப்பலி, கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில், யூபிலி தம்பதியர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. பின்னர் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மண்டபத்தை நோக்கி யூபிலி விழா தம்பதியர் பவனியாக அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து கல்லூரி மண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டதுடன், இவ்விழா இனிதே நிறைவுபெற்றது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அவர்கள் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

இல்லறம் என்னும் நல்லற வாழ்வில் யூபிலி விழாக் கண்ட அனைத்து தம்பதியருக்கும் மன்னாவின் மகிழ்வான வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புக் கட்டுரைகள்

## இறை மகனைத்தாங்கிய இனிய பேழை

# அன்னை மரியாள்

அருட்சகோதரர் பா. றொசான்,
இத்திக்கண்டல், அடம்பன்.

கிறிஸ்து பிறப்பு விழாவைக் குதூகலத்துடன் கொண்டாடும் இக்கிறிஸ்மஸ் காலத்தில் பாலகன் இயேசுவைப் பற்றி மட்டுமே நாம் அதிகம் பேசுவதுண்டு. பாலகன் இயேசு மண்ணில் உதிக்க காரண கர்த்தாவாக இருந்த அன்னை மரியை எம் சிந்தனைக்கு கொண்டுவருவது தேவையாக இருக்கின்றது. எனவே இக்கிறிஸ்மஸ் காலத்திலே அன்னை மரியாள் பற்றிய சில பக்கங்களை என்னுடன் சேர்ந்து புரட்டிப்பார்க்க உங்களை அழைக்கிறேன்.

அன்னை மரியாளைப்பற்றி பல பரிமாணங்களில் சொல்லிக்கொண்டே போகலாம். அதாவது மரியா - தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட முதல் சீடர், செபிக்கும் அன்னை, திருச்சபையின் தாய், உலகத்தோர்க்கு ஓர் எடுத்துக்காட்டு, எல்லாவற்றிற்கும் மேலாக இறைவார்த்தையை வாழ்ந்தவள். இதைத்தான் எமது தற்போதைய திருத்தந்தை இறுதியாக வெளியிட்ட 'ஆண்டவரின் அருள்வாக்கு' (VERBUM DOMINI) என்ற தனது திருமடலில் முதல் பகுதி எண் 15, 19, 29 இலும் இரண்டாம் பகுதி எண் 66, 79, 87, 124 போன்றவற்றிலும் எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்னை மரியாள் ஓர் அதிசயம். ஆயிரம் ஆண்டுகள் பழமையான உலக வரலாற்றில், அற்புதமான பக்கங்களை எழுதிவிட்ட ஓர் வீரப் பெண்ணரசி, கடவுளின் மகனுக்கு கருவறையிலேயே கோவில் கட்டிக் கும்பிட்ட நித்திய பக்தை. "உம்மைத் கருத்தாங்கிய உதரம் பேறுபெற்றது" என்று இயேசு ஆண்டவருக்கு இவளைப்பற்றித்தான் சொல்லப்பட்டது. மேலுமாக அன்னை மரியாளே முதல் நற்கருணைப்பேழை என்ற உண்மை இங்கு விபரித்துக்காட்டப்படுகின்றது.

"வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்" என்ற ஆதியிலே இருந்த இறைவார்த்தைக்கு உடலும் உயிரும் கொடுத்து, கடவுள் மனுவுருவாக கருப்பையிலே இடமும் கொடுத்தவள் இந்த அன்னை மரியா. இவள் இறைவார்த்தையை தன் உயிரோடு சேர்த்து முடிந்துவைத்திருந்தாள். வார்த்தையின் ஒவ்வொரு வரியையும் வாழ்ந்து முடித்தவள்.



பழைய ஏற்பாட்டின் பக்கங்களுக்குள் நாம் பயணித்துப் பார்க்கின்றபோது, "இதோ கன்னி கருத்தாங்கி ஓர் மகனைப் பெற்றெடுப்பாள்" (எசா 07:14) என்று மிக அழகாகச் சொல்லப்படுகின்றது. அன்னை தன் ஆசைகளை, பருவத்திற்கு முளைக்கும் உலகியல் போக்குகளை தியாகம் செய்து உடலை, கற்பை கடைசிவரை மாசணுகாது காத்து கன்னியாகவே இயேசுவையும் பெற்றெடுத்தாள்.

"இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயற்படுகின்றவரே என் தாயும், சகோதரரும், சகோதரியும் ஆவார்" என்று இயேசு கூறியதற்கு இணையாக, அன்னை மரியாள் இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தன்னை முற்றுமுழுதான அர்ப்பணிப்போடு செயற்பட்டவள்.

ஆகவே இறைவார்த்தையை தன் வாழ்வாக்கிய அன்னை மரியாளை இயேசுவின் தாய் என்று சொல்வதில் எவ்வித தவறும் இல்லை. புதிய ஏற்பாட்டிலே புதுப்பூவாய் மொட்டுடைந்து நிற்கும் கன்னி மரியாவிற்கு இறைவனின் வார்த்தைகள் வருகின்றன. லூக் 01:26-38 என்ற பகுதியில் எவ்வாறு மரியாள் இறைவார்த்தைக்கு தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தாள் என்பதனைக் கண்டுகொள்ளலாம்.

கபிரியேல் வானதூதர் மரியாளுக்கு தோன்றி "அருள் மிகப் பெற்றவளே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்" (லூக் 1:28) என வாழ்த்துக் கூறுகின்றார். மேலும் "மரியா, அஞ்சவேண்டாம், கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்" என திருமணமாகாத ஒரு கன்னிகையைப் பார்த்து கூறிய வேளையிலும், "நான் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று இறைவார்த்தைக்கு அவள் தன்னைத் தாழ்த்திக்கொண்டதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் இங்கு உலகத்தின் பார்வையில் அவள் இனி தவறிப்போன பெண்ணாகப் பார்க்கப்படுவாள். விபச்சாரி என்றுகூட அந்த சமூகம் அவளை விமர்சிக்கலாம், ஆனால் அன்னைமரி 'ஆம்' என்று பதில் சொன்னாள். இறுதிவரை எந்த ஒரு விதிவிலக்குத்தருமாறும் கடவுளோடு விவாதித்தவள் அல்ல. என் தலைமேல் விழுந்த விதி என்று விருப்பமின்றி விம்மியவளுமல்ல. இயேசுவுக்கு முன்னரே வலிக்கும் சிலுவைகளை வாழ்வில் சுமந்தவள்.

"உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்று லூக் 2:35இல் கூறப்படுகின்ற வார்த்தை உயிர்பெற்று அவளது உள்ளத்தில் இரத்தம் கசியச் செய்தது. இயேசுவின் கால்களில் புல்லுக்குத்தியபோதே உள்ளம் குத்துண்டவள். இரும்பு முள்கள் இயேசுவின் எலும்புகளையும், நரம்புகளையும், சதையையும் பிய்த்துக்கொண்டு போனபோதும், இயேசுவின் மரணக்கதறல் கேட்டபோது ஒருவாள் அல்ல ஒரு கோடி வாள்கள் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்த வலியை சுமந்திருப்பாள் அந்த அன்னை.

"எதை நினைக்கிறாயோ, அதுவாகவே மாறுகின்றாய்" என்ற இன்றைய தத்துவவியலின் வார்த்தைகளை அன்னை மரியாளின் வாழ்வில் பொருந்திப்பார்ப்போமானால் அவள் இறைவார்த்தைகளை எல்லாம் உள்ளத்தில் இருத்தித் தியானித்துக் கொண்டிருந்தாள் என்று லூக் 02:19 இல் கூறப்படுகின்றது. ஆகவே தனது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தவை அவளது வாழ்வாக மாறியிருக்கும் என்பது "உள்ளங் கை நெல்லிக்கனி" போன்றதாகும்.

ஆம் "இறந்தகாலம் என்பது ஒரு பயனற்ற தாள், நிகழ்காலம் என்பது ஒரு செய்தித்தாள், எதிர்காலம் என்பது ஒரு கேள்வித்தாள். வாழ்க்கை என்பது ஒரு விடைத்தாள். எனவே கவனமாக வாசிப்போம், கவனமாக விடை எழுதுவோம்" என்றார் அறிஞர் ஒருவர். இறைவார்த்தையைக் கேட்டு சிந்தித்துத் தன் வாழ்க்கை என்னும் விடைத்தாளைச் செவ்வனே எழுதிய அன்னை மரியாவின் வழிநின்று எமது வாழ்வைச் செம்மையாக்குவோம்.

# மாற்றுக் கலாச்சாரத்தை மண்ணில் விதைத்த இயேசுவின் பிறப்பு

சகோதரர் மோஸஸ்,
அசிசி இல்லம், மட்டக்களப்பு

*"வாக்கு மனிதன் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14)*

ஒருவர் ஓர் அழகான மயில் வளர்த்து வந்தார். அந்த மயிலை அளவுக்கதிகமாய் அன்பு செய்தார். அதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். ஆனால் இவ்வளவு செய்தாலும் அவருக்கு வருத்தம். மயில் தன்னை அன்பு செய்யவில்லையே என்று மிகவும் கலங்கினார். அவர் அதற்கு பக்கத்தில் சென்றாலே அது பறந்து ஓடிவிடுகிறது. இந்தக் கவலையோடு ஒரு பெரியவரை சந்தித்துக் கேட்டார். அவர் "மயிலை நீ அளவுக்கதிகமாய் அன்பு செய்கிறாய் உண்மைதான். ஆனால் நீ மனிதனாக இருந்துகொண்டு அந்த மயில் உன்னை அன்பு செய்யவில்லையே என்று வருந்துவது முட்டாள்தனம். அது உன்னை அன்புசெய்ய வேண்டுமென்றால், நீயும் ஒரு மயிலாக வேண்டும். மயிலாக மாறினால்தான் அது உன்னிடம் சமமாகப் பழகும், அன்பு செய்யும்" என்றாராம்.

எவ்வளவு பொருத்தமான உவமை! கடவுள் மனிதனை எவ்வளவோ அன்பு செய்தார். தேவையான எல்லாம் தந்தார். ஆனால் மனிதனோ பதிலன்பு செலுத்தவில்லை...! இங்கேதான் கடவுளின் மாற்றுக் கலாச்சாரத்தை நாம் பார்க்கின்றோம். மனிதனோடு நெருக்கமாக பழகவேண்டும் என்றால் கடவுள் மனிதனாக வேண்டும்... இறைமகன் மானுட மகனாக வேண்டும். ஆவியானவரால் ஊனுடலை ஏற்க வேண்டும்.

### முதல் அடி அவர்தான் எடுத்து வைத்தார்...

அவர்தான் முதலில் நம்மிடம் அன்பு செலுத்தினார் (1 யோவான் 4:19). நம் இதயங்களில் அன்பற்ற நிலையை கண்டபோது நம்மைத் தொடர்ந்து அன்பு செய்துகொண்டே இருப்பதன் வழியாக நம்மை அன்புள்ளம் கொண்டவர்களாக்கினார். நாமும் அவரை அன்பு செய்கிறோம். எப்படி இனிப்பற்ற தேநீரில் சக்கரை சேர்க்க அது இனிப்புள்ளதாக மாறுகிறதோ அதேபோல, அவர் அன்பைப் பெறத் தகுதியற்றவர்களாய் இருந்தபோதும் நம்மை அன்பு செய்வதன் மூலம் நம்மைத் தகுதி உள்ளவர்களாக மாற்றினார். அவர் பிறப்பின் மூலமாக மட்டுமல்ல தன் வாழ்க்கையின் வழியாகக்கூட எளியோரை, வறியோரை அடிமைப்படுத்தப்பட்டவர்களை அன்புக்காக ஏங்கிய இதயங்களைத்தேடி, அவர்களிடம் அன்பையும், பாசத்தையும் அளவில்லாமல் பொழிந்தார். அவர் அழைத்தது படிப்பறிவற்ற பாமரர்களை (மத்தேயு 4:18 தொ). அவர் நற்செய்தி அறிவித்தது எளியோர்க்கு (லூக்கா 4:18). அவர் உறவாடியது பாவிகளோடு (லூக்கா 7:37). அவர் அன்பு செய்தது வாழ்க்கையில் ஒதுக்கப்பட்டு, அன்பு செய்ய ஆட்களில்லாமல், துன்பத்தில் துவண்டுகொண்டிருந்த வரிதண்டுபவர்களை, பாவிகளை (மத்தேயு 9:10).

இவ்வாறு நம் ஆண்டவர் இயேசுவின் வாழ்வு ஒரு மாற்றுக் கலாச்சாரத்திற்கு வழிவகுத்திருக்கிறது. உலகாளும் மன்னவன் பிறக்க இடமில்லாமல் பிறந்தார் மாட்டுத் தொழுவத்திலே (லூக்கா 2:7). அவர் பிறப்பு முதலில் அறிவிக்கப்பட்டது கீழ்மட்ட தொழில் புரிபவராகிய இடையருக்கு (லூக்கா 2: 8 தொ). அதேபோல் அவருடைய இறப்பு இழிவான ஒன்று. கள்வருக்கும், துரோகிகளுக்கும் தரப்பட்ட சிலுவை மரணம். அந்த இழிவான சிலுவை மரணத்தின் வழியாக அவர் மாற்றுக் கலாச்சாரத்தை தருகின்றார். அவருடைய உயிர்ப்பின் நற்செய்தியானது முதலில் அறிவிக்கப்பட்டது யூதக் கலாச்சாரத்தில் அடிமட்டத்திலே இருந்த பெண்களுக்குத்தான் (மாற்கு 16:1 தொ). இவ்வாறு வாழ்வின் தொடக்க முதல் இறுதி வரையிலும் ஒரு மாற்றுக் கலாச்சாரத்திற்கு வழிவகுத்த நம் ஆண்டவரின் பிறப்பு விழாவை மிக ஆடம்பரத்தோடு புத்தாடை உடுத்தி, பலகாரம் செய்து புத்தம்புது பொலிவுடன் கொண்டாடுகின்றோம்.

ஆனால் நம் வாழ்க்கை முறைதான் அந்தச் சின்னஞ்சிறிய பாலன் இயேசு நமக்கு சொல்லித்தந்த மாற்றுக் காலச்சாரத்துக்கு முரண்பாடாக உள்ளது. என்ன அந்த முரண்பாடு? ஒருசில இனத்தை இன்றும் நாம் அடிமைகளாக நசுக்கப்பட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக வைத்திருக்கின்றோம். இதுவா இம்மாபெரும் விழா நமக்கு சொல்லும் பாடம்? இல்லையே!

உலகில் வாழும் மனிதர் யாவரும் கடவுளின் சாயலில்படைக்கப்பட்டவர்கள். நம்மில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இருத்தல் ஆகாது.




*அன்று கிறிஸ்து பிறப்பு விழா. குடிலில் பிறந்திருந்த இயேசு பாலனைத் தொட்டுக் கும்பிடும்படி தனது 5 வயது மகனைத் தாய் கேட்டுக்கொண்டாள்.*

*மகன் : "இது என்ன?" தாய் : "இதுதான் இயேசு"*

*மகன்: "இல்லை இது பொம்மை" தாய் : "மகன் அப்படியெல்லாம் சொல்லக்கூடாது" இயேசு பாலனை தாயும் மகனும் தொட்டுக் கும்பிட்டுவிட்டு கோவிலைவிட்டு வெளியே வந்தார்கள். அப்போது சிறுவனின் நண்பன் ஒருவன் ஓடி வந்து அவனது கைகளை அன்போடு பிடித்தான். தாய், "என் பிள்ளையைத் தொடாதே" என அதட்டினாள். கையைப் பிடித்த சிறுவன் சோகம் நிறைந்தவனாய் வந்த வழியே சென்றுவிட்டான்.*

***மீண்டும் உரையாடல்*** மகன் : "கோயிலுக்கு எதுக்கும்மா போனோம்" தாய் : "சாமிகும்பிட". மகன் : "அந்த மண்ணாலே செஞ்ச பொம்மைக்குள்ளே இயேசு இருக்கிறதா சொல்லி என்னைத் தொட்டுக் கும்பிடச் சொன்னீங்க. மண்ணுக்குள்ளே கடவுள் இருக்கிறதா நம்புற நீங்க, ஏன் நண்பனுக்குள்ளே கடவுள் இருக்கிறதா நம்பல?" தாய் : "இந்தச் சின்ன வயதிலே இதுபோல பெரிய கேள்வியெல்லாம் கேட்கக்கூடாது." (நன்றி : வந்தது வசந்தம்)

மனிதனை மனிதனாக ஏற்று அன்பு செய்து, பாசம் காட்டி ஒரு மாற்றுக் கலாச்சாரத்திற்கு வித்திட்ட இயேசுவின் வழிநின்று வாழ்வை வளமுள்ளதாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# முள்ளிக்குள மக்கள் மீள்குடியேறுவதற்கான நம்பிக்கை ஒளிக்கீற்று தெரிகிறது!

## கடற்படைத் தளபதி மன்னார் ஆயர் சந்திப்பு

வடமேல்மாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி றியல் அட்மிரல் றோகண பெரேரா அவர்கள் அண்மையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து, முள்ளிக்குள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடினார். முள்ளிக்குளம் கிராமத்திற்கு அண்மையான இடத்தில் முள்ளிக்குள மக்கள் குடியமர்வதற்கான அரசாங்கத்தின் இணக்கப்பாட்டைத் தெரிவிக்கும் சந்திப்பாகவே இது அமைந்திருந்தது என மன்னார் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் மன்னாவுக்கு தெரிவித்தார். மிக விரைவில் முள்ளிக்குள மக்கள் அங்கு சென்று குடியமர பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக குருமுதல்வர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை ஆயர் பேரவையினரை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச சந்தித்து ஆயர்கள் முன்வைத்த பல்வேறு விடயங்களுக்கு செவிமடுத்ததுடன் பல விடயங்களை உடனடியாகவே நடைமுறைப்படுத்தியும் இருந்தார். அதன் ஒரு கட்டமாகவே மன்னார் ஆயர் முன்வைத்த முள்ளிக்குள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைக்கு தான் சுமுகமான தீர்வை விரைவில் காண்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் இந்தக் குறிப்பிட்ட கடற்படை அதிகாரி மன்னார் ஆயரைச் சந்தித்தார்.

முள்ளிக்குள மக்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்துவந்த தாயக பூமியில் இருந்து கடந்த 2007ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆம் திகதி வெளியேற்றப்பட்டனர். இன்றளவும் அவர்கள் இடம்பெயர்ந்த மக்களாக பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து தமது சொந்தக் கிராமமான முள்ளிக்குளத்திற்கு திரும்பச் செல்லும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

*முள்ளிக்குளத்தில் உள்ள பரலோக மாதா ஆலயத்தின் முன்புறத் தோற்றம்*



## ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் மன்னார் ஆயருடன் சந்திப்பு



ஐரோப்பிய பாராளுமன்றத்தைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் இலங்கையில் உள்ள நிலவரங்களை மக்களிடம் கேட்டு நேரடியாக அறிந்துகொள்ளும் நோக்கோடு இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். மன்னாருக்கு வருகை தந்த இந்தத் தூதுக்குழுவினர், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர். மனித உரிமை மீறல்கள், வேலைவாய்ப்பில் இனவிகிதாசாரம் பேணப்படாமை மற்றும் யுத்தத்திற்கு பின்னர் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆயர் விளக்கமாக இவர்களிடம் எடுத்துரைத்தார்.

## அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளார் தேசிய குருமடத்தின் விரிவுரையாளராக நியமனம்



மன்னார் மறைமாவட்டக் குருவான அருட்பணியாளர் பி. கிறிஸ்துநாயகம் அவர்கள் கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் கண்டி தேசிய குருமடத்தின் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளராக 4 ஆண்டுகள் (2002 - 2006) பணிபுரிந்தார். பின்னர் கடந்த 5 வருடங்களாக 2006 - 2011) மன்னார் ஆயர் இல்லத்தில் நிதியாளராகவும் (Procurator General) திருவிவிலிய ஆணைக்குழு இயக்குனராகவும் பணிபுரிந்தார். இவ்வாண்டு யூன் மாதம் வவுனியா மறைக்கோட்ட முதல்வராகவும், வேப்பங்குளம் பங்குத்தந்தையாகவும் நியமிக்கப்பட்டார். தேசிய குருத்துவக் கல்லூரியில் ஒழுக்கவியல் பாட விரிவுரையாளராகப் பணியாற்றிய அருட்தந்தை றேமன் விக்கிரமசிங்க அவர்கள் ஆயர் நியமனம் பெற்று சென்றதை அடுத்து அந்த இடத்திற்கு கிறிஸ்துநாயகம் அடிகளார் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் ஒழுக்க இறையியல் (Moral Theology) விரிவுரையாளராகவும், ஞானப்பிரகாசியர் தமிழ் மன்றத்தின் மேலாளராகவும் பணியாற்றுகின்றார். எதிர்காலக் குருக்களை உருவாக்கும் பணி சிறப்புற அமைய மன்னார் மறைமாவட்டம் சார்பான வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

### இளைஞர் ஆண்டையொட்டி மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு நடாத்திய

# இளைஞர் கலைவிழா 2011

இளைஞர் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு ஏற்பாடு செய்த 'இளைஞர் கலைவிழா 2011' கடந்த புரட்டாதி மாதம் 25ஆம் திகதி நானாட்டான் ஆலய முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டார்.

பாடல்கள், நாடகம், கலைஞர் கௌரவிப்பு, பரிசளிப்பு, வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்துக்கள் எனப் பல்வகை நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன. மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பெருமளவில் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் அவர்கள் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிந்தார். மறைமாவட்ட இளைஞர் ஒன்றிய நிர்வாகம் இவ்விழாவிற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது. விடைபெறும் இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தில் இளைஞர் ஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

## பள்ளிமுனையில் புனித சிசிலியாவின் திருநாள் கலைநிகழ்வுகள்



பள்ளிமுனைப் பங்கானது கடந்த 22.11.2011 அன்று புனித சிசிலியாவின் திருநாளை சிறப்பாகக் கொண்டாடியது. அன்று சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து மாலை அருட்சகோதரி மற்றும் ஆலய அருட்பணிச்சபை உறுப்பினர்களுடன் பங்குத்தந்தையின் வழிநடத்துதலில் சிற்றுண்டி விருந்தும், கலை நிகழ்வுகளும், போட்டிகளும் இடம்பெற்றன. பள்ளிமுனைப் பங்கின் பாடகர் குழுவானது பெரிய பாடகர் குழு, சிறிய பாடகர் குழு, வளர்ந்து வரும் பாடகர் குழு என மூன்று குழுவாக இயங்குகின்றது.



இன்றுவரை அழியாமல் இருக்கும் புனித வின்சென்ட் டி போலின் திருவுடல்

## புனித வின்சென்ட் டி போல் மத்திய சபை பொதுத் திருவிழா



மன்னார் மறைமாவட்டத்தில் புனித வின்சென்ட் டி போல் சபையானது பிறரன்புப் பணியில் ஆர்வத்தோடு நடைபயின்று வருகின்றது. ஒவ்வொரு பங்கிலும் வளர்ந்தோர் பந்தி, பாடசாலைப் பந்தி என சபைகள் உருவாக்கப்பட்டு சிறந்த முறையில் பணிசெய்து வருகின்றது. பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆக்கமும், ஊக்கமும் தந்து சபையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள். மாதம் ஒருமுறை சபைகளின் தலைவர்கள், ஊக்குவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள் ஒன்றுகூடி மத்திய சபையின் நிர்வாக சபைக் கூட்டத்தினை நடத்திவருகின்றனர். இதற்கு குடும்பப் பணி ஆணைக்குழு தலைமைதாங்கி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

ஐப்பசித் திங்கள் 11ம் நாள் மன்னார் மறைமாவட்டத்தில் புனித வின்சென் டி போல் சபை பொதுத்திருவிழா மன்னார் குடும்பநல பணிமனையில் வெகு கோலாகலமாக நடைபெற்றது. குடும்பப்பணி ஆணைக்குழுவின் இயக்குனரும், புனித வின்சென் டி போல் சபையின் ஆன்ம இயக்குனருமான அருட்தந்தை S.K. தேவராஜா கொடுதோர் இந்தப் பொதுத் திருவிழாவை சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை பிரதம அதிதியாகவும், பள்ளிமுனையின் பங்குத்தந்தை அருட்பணி பீற்றர் மனோகரன் சிறப்பு விருந்தினராகவும் வருகை தந்திருந்தனர். குருமுதல்வரோடு அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். திருப்பலி முடிந்ததும் சிற்றுண்டி உபசாரமும் தொடர்ந்து கலை நிகழ்வும் நடந்தேறியது. மத்திய சபை தலைவி வரவேற்புரை கூறி அனைவரையும் வரவேற்றார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அளவக்கைப் பங்கில் செபமாலைப் பேரணி



அருட்பணி. சுரேஸ்

மரியன்னையின் மாதமாகிய ஐப்பசி மாதம் அளவக்கைப பங்கின் கிளை ஆலயங்களான அளவக்கை, மாவிலங்கேணி, பிடாரிகுளம், பொன்தீவுகண்டல், ஆத்திக்குளி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், மானங்கவெளி, மடுக்கரை ஆகிய எட்டு ஆலயங்களைச் சேர்ந்த மரியன்னையின் பக்தர்களால் மாதம் முழுவதும் தங்கள் ஆலயத்திலிருந்து வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட மரியன்னையின் திருச்சுரூபம், திருச்செபமாலை செபித்தவண்ணம் பங்கு ஆலயத்திற்கு பவனியாக ஐப்பசி மாதத்தின் இறுதிநாளில் கொண்டுவரப்பட்டது. பின்பு பங்குத்தந்தை அருட்பணி. சுரேந்திரன் றெவல் (சுரேஸ்) அடிகளாரால் 31.10.2011 மாலை 5.00 மணிக்கு சிறப்புத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் பக்தியுடன் பங்கேற்றனர். இறுதியில் அன்னையின் பிரியாவிடைச் செபம் இடம்பெற்றது. மரியன்னையின் ஆசீரை மக்கள் பெற்றுச்சென்றனர்.

*தகவல்: லூர்துநாயகி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சகோதரர் விஜயாவுக்கு வங்காலை மக்கள் நன்றி தெரிவிப்பு

வங்காலை மன்/ புனித ஆனாள் மகா வித்தியாலயத்தில் கடந்த 6 வருடங்களாக செயற்திறன் மிக்க அதிபராக இருந்து இப்பாடசாலையை வழிப்படுத்தி கல்வியின் உயர்வை மேம்படுத்திய அருட்சகோதரர் எஸ். சி. விஜயதாசன் (FSC) அவர்களுக்கு 18.10.2011 அன்று வங்காலை புனித ஆனாள் ஆலய முன்றலில் கிராம மக்களினால் சேவைநலன் பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு. ம. ஆபேல் றெவல், பங்குத் தந்தை, உதவிப் பங்குத்தந்தை, டிலாசால் அருட்சகோதரர்கள் ஆலய அருட்பணிப் பேரவையினர், சமாச உறுப்பினர்கள், கிராமமக்கள், மாணவர்கள் என யாவரும் கலந்து சிறப்பித்தனர்.

அருட்சகோதரரின் சேவையைப் பாராட்டி ஆலய அருட்பணிப் பேரவையினர், ஒன்றிணைக்கப்பட்ட சங்கங்களின் சமாசம், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோரால் சேவை நலன் பாராட்டு மடல்கள் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டன. அருட்சகோதரரின் கல்விச் சேவை வங்காலைச் சமூகத்தினதும், பாடசாலையினதும் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. வங்காலைச் கல்விச்சமூகம் டிலாசால் அருட்சகோதரர்களின் பணியைப் போற்றுவதுடன் அவர்களின் சேவையை என்றும் பாராட்டி நிற்கின்றது.

அருட்சகோதரர் எஸ். சந்தியோகு 24.10.2011 முதல் புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபராக பொறுப்பேற்று தம் பணியை சிறப்பாக செய்துவருகின்றார்.

தகவல் : தமிழன்



## மன்னார் மாவட்டத்திற்கு புதிய அதிபர்கள்

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3இற்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை 2006.07.22இல் சித்தியடைந்து 2009.11.13 தொடக்கம் மாவட்டத்தின் புதிய பாடசாலை அதிபர்களாக பொறுப்பேற்றுக்கொண்ட அதிபர் தரம் 3ஐக் கொண்ட அதிபர்கள் விபரம் வருமாறு :

| | |
|---|---|
| 01. அருட்சகோ. எஸ். சந்தியோகு | 02. திரு. ம. ஜெரால்ட் டயஸ் |
| 03. திரு. கி. யூ. பெர்னாண்டோ | 04. திரு. பி. தி. பெர்னாண்டோ |
| 05. திரு. ஏ. ஆர். அமலதாசன் | 06. திரு. ஜே. லியோன் |
| 07. திரு. நி. அனந்தன் | 08. திரு. கே. குணசேகரன் |
| 09. திரு. எஸ். ஆசைப்பிள்ளை | 10. திரு. ஏ. சி. பஸ்மி |

தகவல் - தமிழன்

## நீங்களும் பார்வையிடலாம்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத்தளமான *தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளம்* இலங்கை மறைமாவட்டங்களின் தமிழ் கத்தோலிக்க செய்திகளை அறிக்கையிடும் பணியை 26 நவம்பர் 2011 அன்று முதல் ஆரம்பித்துள்ளது.

இலங்கைச் செய்திகள், உலகச் செய்திகள், இணையத்தள இணைப்புக்கள், காணொளிகள், படங்கள் விளம்பரங்கள் எனப் பல அம்சங்களுடன் வெளிவரும் இவ்விணையத்தளத்தை tcnlnet.com முகவரியில் பார்வையிட முடியும்.

உங்கள் செய்திகள், படங்கள், காணொளிகளை infotcnl.com அல்லது பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இல. 891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# வாழ்க்கை!

அருட்சகோதரி மார்த்தா (CIC) எழுதும் தொடர் சிந்தனை

### வாழ்க்கை தொடர் நிறைவுபெறுகிறது!

கடந்த பல மாதங்களாக 'வாழ்க்கை' என்ற பெயரில் சிறப்பான ஒரு தொடர் கட்டுரையை எழுதி வந்த மன்னார் அமல உற்பவ (CIC) கன்னியர் இல்லத்தைச் சேர்ந்த அருட்சகோதரி மார்த்தா அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம். (மன்னா நிர்வாகம்)

## சங்கமிக்கும் மரண வாழ்வு .....!

மரணம் நம்மை கடவுளிடம் சங்கமிக்க வைக்கிறது என்பது சந்தோஷமான விடயம். இதனால் கடவுளை அடைய வாழும்போதே நன்றாக வாழ வேண்டும் என்ற முயற்சியிலும் மனிதன் ஈடுபடுகின்றான்.

அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டு, அதனால் பயன்படுத்தப்பட்ட நாம் மரணத்தைப் பற்றிய பயத்தை அறிந்தோ, அறியாமலோ உள்வாங்கி ஒரு கேள்விக்குறியுடன் ஒவ்வொரு நாளையும் எதிர் கொள்கிறோம்.

புகை காற்றில் கரைந்து போவதுபோல் மனிதர்களின் வாழ்வு ஒவ்வொரு நொடிப்பொழுதும் கரைந்து போய்க்கொண்டிருக்கிறது. ஆக மரணத்தால் தழுவப்படாமல் விடுபட்ட நபர் இவ்வுலகில் யாருமில்லை. பிறப்பு எவ்வாறு நம்மிடம் கேட்காமல் வழங்கப்பட்டதோ அதுபோன்று மரணமும், அறிவிக்கப்படாமலே நடக்கிறது.

மரணம் எப்போது வரும் என்று தெரியாத நிலையில் அது அனைவருக்கும் உரியது என்றாலும், அனைவரையும்போல் வயோதிப வயதில்தான் வருகிறது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகிறோம்.

நம் ஆன்மாவின் சொந்தக்காரர் நமது இதயத்தின் கதவருகே நின்று தட்டிக் கொண்டிருக்கிறார். மரணத்திற்காக உன்னை ஆயத்தமாக வைத்திருக்க வேண்டி.

மரணத்தை எவரும் நல்ல எண்ணத்துடன் அணுகுவது இல்லை அது வாழ்வுக்கு எதிர்மறையாக மாறிவிடுகிறது. இது நம்மை சந்திக்கும் கணத்தைவிட அது பற்றிய அவதானிப்போடு ஓட்டிக்கொண்டுவரும் பல உணர்வுகள் மரணத்தை விடக்கொடியது. அழியும் இந்த உடலிலிருந்து உயிர் பிரிந்து செல்லும் அந்தக் கணத்தை எவ்வளவு தூரம் தள்ளிப்போட முடியுமோ, அத்தனை சாத்தியங்களையும் பயன்படுத்த நாம் தயாராய் உள்ளோம்.

அன்னை தெரேசா வீதியோரம் அள்ளிக்கொண்டு வந்து சேர்த்தவர்க்கு விலை உயர்ந்த மருந்தை வரவழைத்து வைத்தியம் செய்தார். எனவே மருத்துவர் கேட்டார், "சாகப்போவது உறுதி என்று தெரிந்தும் விலை உயர்ந்த மருந்தை வீணாக்க வேண்டுமா?" இதற்கு அன்னை பதிலாக "வாழ்நாள் முழுவதும் அன்பை அறியாத இவர் சாகும்போதாவது அதை சுவைக்கட்டுமே" என்றவர், "இந்த மருந்துக்கு விலை உண்டு. ஆனால் ஓர் உயிருக்கு விலை உண்டா? ***மனித மாண்பின் உச்சக்கட்டம் மரியாதைமிக்க சாவுதான்"*** என்றார் அன்னை.

இறைவனின் பேரின்பத்தை அடைய வேண்டுமென வாழும் வாழ்க்கையில் வயதிற்கு ஏற்றாற்போன்று விழுந்து, விழுந்து எழுவதில் எதை இறைவன் புண்ணியமாக நினைத்து விண்ணகத்தில் ஏற்றுக் கொள்வார் என கடைசிக் காலத்தில் சிந்தித்து காலங்களைக் கழித்தவர்களும் உண்டு. தரிசனமாக சில செய்திகளை விட்டு அமைதியாக



இறந்தவர்களும் உண்டு. சிலர் எதையும் வெளிப்படுத்தாது அமைதியாக இறந்ததும் உண்டு. சிலர் பல ஆசைகளுடன் இருந்து அதை நிறைவேற்றாத ஏக்கத்துடன் இறந்தவர்களும் உண்டு. திடீர் என்று இறந்தவர்களும் உண்டு. தன்னைதானே மாய்த்துக்கொண்டவர்களும் உண்டு.

மரணம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வருவதில்லை என்ற நிலையில் வாழும் நாம் அடுத்தவரின் வாழ்க்கை இவ்வாறுதான் இருந்தது, இவர் கடவுளை அடைந்திருப்பாரா? என யோசித்து நமக்கு தெரியாமலே ஒரு வகையான பதட்டத்தையும், தெளிவின்மையையும் உருவாக்கிக்கொள்வது சமூகத்தின் இயல்பாய் மாறிவிட்டது.

என்னுடன் படித்த மாணவன் 11ஆம் ஆண்டு படிப்பைத் தொடர வசதி இல்லாத நிலையில், அப்பா இல்லாத குடும்பத்தை வழிநடத்த தினக் கூலிக்குச் செல்வது வழக்கம். ஒரு நாள் வேலையிலிருந்து திரும்பியதும் அவன் அம்மா, "இன்று சிவராத்திரி, சில சாமான்கள் தேவை" என்றாள். அதை வாங்க சென்றவன் வழியில் விபத்தில் இறந்து விடுகிறான். இது வேதனைக்குரிய ஏற்றுக் கொள்ளமுடியாத மரணம். என்றாலும் சில பெரியோர் இவனையும் இவனது இறப்பையும் பற்றி கூறும்போது, "இவன் உலகிற்கு வந்த வேலை முடிந்துவிட்டதால் இறைவன் இவனை தன்னிடம் அழைத்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டார். எனவே நோயின் வழியாக எடுத்தால் வசதியில்லாத வீட்டிற்கு சிரமம், எனவே திடீர் என எடுத்துவிட்டார்" என்று கூறினார்கள்.

இந்தக் கணிப்பானது உண்மையாக இருக்கலாம். இறப்பைப் பற்றிய கணிப்புக்கள் பலருக்கும் பலவாறு இருக்கலாம். ஆனால் மரணம் என்பது வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளிதான். முடிவுப்புள்ளி அல்ல. காரணம் ஆன்மா இறைவனில் சங்கமிக்கிறது.

நினைவுகள் மற்றும் எண்ணங்களே நமது வாழ்க்கையை வாழ்வதற்கான பாரமாக, சுமையாக அமைந்துவிடும். செய்து முடிக்கப்படாத கடமைகள் அழுத்துவதால், அன்றைய நாளை எதிர்கொள்ள சக்தி இல்லாது பலவகையான யோசனையுடனே நமது காலத்தை கழித்து விடுகின்றோம். வாழும்போது நமது சூழ்நிலை, பொருளாதார வசதி ஆகியவற்றைப் பொறுத்து அனைவரும் ஒரே நோக்கத்தை கொண்டவர்களாயினும் அதை அடைய முற்படும் நிலைகள் பல்வேறுபட்டதாக இருக்கிறது.

வாழ்க்கை வழியோரம் விழுந்த விதையல்ல, பண்பட்ட நிலத்தில் விழுந்த விதை. வறுமை, வளமை என்றாலும் வாழ்க்கை நமதே! வானமளவு உயர்ந்தவனாயினும் வலிக்கு மட்டுமே உதவக்கூடியது. இதை நாம் வலியப் பெற்றவர்கள் அல்ல. இறைவனால் கொடுக்கப்பட்டது. நம்பிக்கைக்குரிய ஒன்று தன்னிடம் நட்புடன் பழகினால் நண்பனாய் இருக்கும். உறவினனாக ஏற்றால் உறவை தரும். அன்பாக அணுகினால் அனுபவத்தையும், ஆறுதலையும், நிறைவையும், நிம்மதியையும் தரக்கூடியது.

மரணத்தைத் தழுவினாலும்கூட மனித மனங்களில் வாழ்பவர்கள் பலர். இவர்களில் ஒருவராக இருக்க, வரலாறு படைக்க, தடங்களை விட்டுச்செல்ல வேண்டும் என்ற நோக்குடன் இன்றே இப்போதே பயணித்தால் வாழ்க்கை வசப்படும். முடிவுவரை சொந்தமான ஒன்று நமது வாழ்க்கை மட்டுமே. இந்த சொந்தத்தை புகழின் உச்சியில் செல்லும்போது அனுபவிக்கலாம். ஆனால் அது முடிவில் நமது ஆன்மா இறைவனில் இளைப்பாற, சங்கமிக்க தடையாக இருப்பின் வாழ்க்கை அங்கே வாழப்படவில்லை என்றுதான் அர்த்தம்.

பலம், பலவீனம் இரண்டையும் பகுத்தறியும் நாம் நிச்சயம் வாழத் தெரியாதவர்கள் அல்ல, மண்ணிலே மின்மினியாய் நாம் சுற்றித்திரிந்தவர்கள். ஆனாலும் வானத்திலே வண்ணத்தாரகையாக மின்னிட வழியுண்டு. எனவே வாழ்வோம், வளர்வோம், வாழ்வோம் வாழ்விப்போம், வாழ்க்கை நம்மிடமே உள்ளது.

(முற்றும்)

## ஒளி பிறந்தது!

கஜேந்திரன், காவலூர்.

ஒரு மாலை நிறைவுறும் வேளை! எவ்வாறு அந்த நேரம் காட்சியளிக்கும்? கதிரவன் தன் கதிர்களை மெல்ல மெல்ல உள்வாங்கி உறைந்து போவான். இதையுணரும் பறவைகள் தமது கூடுகளுக்கும், விலங்குகள் தமது இடங்களுக்கும், மனிதர்கள் தமது இல்லங்களுக்கும் செல்வதுதானே இயல்பு. ஒளிதனை மெல்ல மெல்ல இருள் சூழ்ந்துகொள்ளும். அந்த இருளை அகற்றுவதற்கு விளக்கை ஏற்றுகிறோம். இவ் நவீன காலத்தில் மின்குமிழைப் போடுகிறோம். எதற்காக? ஒளியைப் பெறுவதற்காக. ஒளி அணைந்தாலோ மின்சாரம் இல்லாமல் போனாலோ மீண்டும் இருள் சூழ்ந்துகொள்ளும். இவ்வாறுதான் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வும் விசுவாச ஒளி இல்லாமல் போகும்போது இருளும் துன்ப துயரங்களும் நம்மைச் சூழ்ந்துகொள்ளும்.

நிரந்தரமான, நிலையான புனிதமான ஒளி யார்? என்ற கேள்வியை அனோஜன் சிந்திக்கின்றான். அவனது சிந்தையில் மனித வாழ்வும் மரணித்த இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்தாரே என்ற எண்ணமும் பொறியாகத் தெறித்தது. அவனது கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது. இதனுடைய விளக்கத்தை விரிவாகப் பெறுவதற்காக தனது தாத்தாவை நாடுகிறான். தாத்தா கோயில் கடமைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டு தொண்டாற்றி வருபவர். எந்நேரமும் விவிலியமும் இறைவார்த்தையை உச்சரித்த வண்ணமுமாய்த்தான் இருப்பார்.

"தாத்தா ஒளி பிறந்தது என்கிறார்களே, அது எவ்வாறு நடைமுறையில் இருக்கும்" என்று கேட்கின்றான். அவனைப் பார்த்து சிரித்த தாத்தா, "ஒளி பிறந்தது" என்றார். அனோஜனுக்கு ஒன்றும் புரியவில்லை. "இக்கேள்வி உனக்குள் எழுவதற்குக் காரணம் உனது இதயத்தில் இயேசுக் கிறிஸ்து ஒளியாக பிறந்து விட்டதே ஆகும். இனி இவ்வுலக மனிதரிடையே நீ கிறிஸ்துவின் ஒளியாய் வாழ்வாயாக" என்றார்.

எல்லோரும் உள்ளத்தில் இயேசுக்கிறிஸ்துவின் ஒளியைப்பெற வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

‘இறைவார்த்தை வழியாக விசுவாச மறுமலர்ச்சியை நோக்கி’

# கொழும்பு மறைமாவட்டத்தில் இறைவார்த்தை ஆண்டு பிரகடனம்

## கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அறிவிப்பு

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகை 2011 திருவருகைக் காலம் முதல் 2012 திருவருகைக் காலம் நிறைவு வரையான காலப்பகுதியை கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இறைவார்த்தை ஆண்டாக அறிவித்துள்ளார்.

இறைவர்த்தை ஆண்டின் முதல் தினமான திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு தினத்தன்று இவ்வாண்டை சிறப்பாக ஆரம்பித்துவைக்கும்படி கர்தினால் அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்ட பங்குத்தந்தையர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். “இறைவார்த்தை வழியாக விசுவாச மறுமலர்ச்சியை நோக்கி” என்ற வார்த்தைகள் இவ்வாண்டுக்கான மையப்பபொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கொழும்பு மறைமாவட்டத்தில் நற்கருணை ஆண்டாக கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## கொழும்பு ஜோசப்வாஸ் மன்றத்தின் புதிய தலைவர்

கொழும்பு ஜோசப்வாஸ் மன்றத்தின் புதிய தலைவராக திரு. அம்புரோஸ் பீட்டர் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
தமிழ் கத்தோலிக்க ஆன்மீக நலனிற்காக பல ஆண்டுகளாக அயராது தனது வாழ்வை அர்ப்பணித்துள்ள திரு. அம்புரோஸ் பீட்டர் அவர்கள் தமிழ் கத்தோலிக்க திருச்சபைக்கு தன் ஆற்றல் திறமைகள் மூலம் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார். திருப்பாடல்களை பாடல்களாக்கி அவற்றை ஒலி நாடாக்களாக வெளிக்கொணர்ந்துள்ளார்.
திரு. அம்புறோஸ் பீற்றர் அவர்களின் பணிவாழ்வு சிறக்கவும் அவர், உடல் உள நலத்துடன் தொடர்ந்து நற்பணி புரியவும் இறையருள் வேண்டி செபிக்கின்றோம். அவரது பணிசிறக்க வாழ்த்துகிறோம்.

## இளம் கிறிஸ்தவ மாணவர் வைர விழா

இளம் கிறிஸ்தவ மாணவர்களின் (Young Christian Students - YCS) வைர விழாக் கொண்டாட்டம் கார்த்திகை மாதம் 10ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இக்கொண்டாட்டத்தின்போது அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இத்திருப்பலியில் இளம் கிறிஸ்தவ மாணவர் சங்கத்தின் தலைவர் அருட்திரு. லோரன்ஸ் ராமநாயக்க அடிகளாரும் அவரோடு செயற்படும் வட்டாரக் குருக்களும் இணைந்துகொண்டனர். அத்தோடு இளம் கிறிஸ்தவ மாணவர் அமைப்பைச் சார்ந்தவர்களும் (YCS) இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண பொன்னான காலம் இதுவாகும்

### இலங்கை ஆயர்பேரவையில் தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகர்




தென்னாபிரிக்காவின் உயர் ஸ்தானிகர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினரையும், துறவற சபையினரின் உயர் தலைவர்களையும் சந்தித்த போது இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டினார்.

இவ்வாண்டு யூலை 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 1ஆம் திகதி வரை இலங்கை கத்தோலிக்க ஆயர்களான யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை, திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, கண்டி ஆயர் மேதகு வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை, குருநாகல் ஆயர் மேதகு கரல் அன்ரனி ஆண்டகை, அநுராதபுரம் ஆயர் மேதகு நோபேட் ஆன்ராடி ஆண்டகை, பதுளை ஆயர் மேதகு வின்சன் பெனாண்டோ ஆண்டகை, ஆகியோருடன் இலங்கை செடேக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் ஜோர்ச் சிகாமணி அடிகளாரும் தென்னாபிரிக்காவிற்குச் சென்று மேற்கொண்ட ஆய்வு பற்றிப் பேசினார். தென்னாபிரிக்காவின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் மேலும் கருத்துத் தெரிவித்தபோது இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வினைக் காண ஒரு பொன்னான காலம் இந்தக்காலமாகும். புரிந்துகொள்ளுதலும் ஒப்புரவாகுதலுமே இப்பிரச்சனைக்கான தீர்வின் அடிப்படைகளாகும். இலங்கை அரசானது சர்வதேச சமூகத்தினால் தனிமைப்படுத்தப்பட்டு கைவிடப்பட்ட ஒரு நிலையில் இருப்பதாக உணர்கிறது.

இலங்கை அரசு ஒற்றுமையையும், ஒப்புரவையும் இலங்கையில் எற்படுத்தி இலங்கைப் பிரச்சனைக்கு ஒரு தீர்வைக் காண விருப்பம் கொண்டிருக்கின்றது என்றே கருத வேண்டியுள்ளது. இந்தியா இனப்பிரச்சனைக்கான தீர்வினை விரைவாகக் காணும்படி வலியுறுத்தி வருகிறது.

இந்த வேளையில் தென்னாபிரிக்காவிற்கு வந்து நெல்சன் மண்டேலா என்ற மாபெரும் தலைவரின் கீழ் அந்த நாட்டில் பிரச்சினை தீர்க்கப்பட்ட விதத்தை ஆராய்ந்து அறிந்த ஆயர்கள் இப்பொழுது அந்த வழியில் இலங்கையிலும் ஒரு தீர்வைக்காண முற்பட வேண்டும். டாக்டர் நெல்சன் மண்டேலா போன்ற துடிப்பும் தூரநோக்கும் அர்ப்பணமும் கொண்ட ஒரு தலைவரை இங்கு தேடி உருவாக்கி அவரின் தலைமையின்கீழ் இப்பிரச்சனைக்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள் என்று அவர் மேலும் அழைப்பு விடுத்தார்.


## ஸ்ரலின் அடிகளாருக்கு சிறந்த நூலுக்கான விருது

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. இராசேந்திரம் ஸ்ரலின் அடிகள் வெளியிட்ட *‘ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்’* எனும் நூலானது சிறந்த நூலுக்கான விருதைப் பெற்றுள்ளது. வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது வருடாவருடம் பல்வேறு துறைசார்ந்த நூல்களுக்கு விருதுவழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் 2010ஆம் ஆண்டிற்கான நூல் தெரிவில் பொதுவான நூல்கள் என்ற வகைக்குள் அடிகளாரின் இந்நூலும் சிறந்த நூலாகத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மன்னாரில் இடம்பெற்ற வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவில் இவருக்கான விருதினை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறீ அவர்கள் வழங்கினார். ஆளுநர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க அமைச்சர் ரிசாத் பதியுதின் மாலை அணிவித்து கௌரவித்தார்.

ஸ்ரலின் அடிகளார் தற்போது யாழ் பல்கலைக்கழகத்தின் கத்தோலிக்க மாணவர்களுக்கான ஆன்மீகக் குருவாகப் பணியாற்றி வருகின்றார். இவர் உளவியல் சார்ந்த பல கட்டுரைகளை பல்வேறு பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதிவருகின்றார். சிறந்த ஆழுமைப் பண்புகள் நிறைந்த அடிகளாரின் எழுத்துப்பணி தொடர மன்னா வாழ்த்துகின்றது.

## யாழ் குருமுதல்வர் புதிய இணையத் தளத்தை ஆரம்பித்து வைக்கின்றார்



கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ‘தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா’ என்ற புதிய இணையத்தளத்தை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கிறார். அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் முயற்சியில் இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## யாழ் மறைமாவட்டத்தில் தமிழ் இறையியல் கல்லூரி

**Blessed Joseph Vaz Tamil Theological College**

யாழ் மறைமாவட்டத்தின் நீண்டகாலத் தேவையும், கனவுமான பொதுநிலையினருக்கான தமிழ் இறையியல் கல்லூரி அருளாளர் யோசவ்வாஸ் அவர்களின் விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டு நிறைவில் சாத்தியப்பட்டிருக்கின்றது. இக்கல்லூரி வருகின்ற வருடம் தைத்திங்களிலிருந்து, அருளாளர் யோசவ்வாஸ் அவர்களின் திருவிழாவையொட்டி (16.01.2012) இறையியல் சான்றிதழ் மற்றும் இளமானிப் பட்டத்திற்கான கற்கை நெறிகளை ஆரம்பிக்க இருக்கிறது. இந்தக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## தமிழ் இறையியல் கல்வியகத்தின் புதிய இயக்குனர்



அருட்தந்தை றெஜினோல்ட் லூசன் (அமதி) அடிகளார் தமிழ் இறையியல் கல்வியகமான முத். யோசவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் புதிய இயக்குனராக கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயரினால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் அருட்தந்தை அன்ரன் றஞ்சித் அடிகளார் இதற்குப் பொறுப்பாக இருந்தார்.

அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் தற்போது தெமட்டகொட பங்குத்தந்தையாக பணியாற்றுகின்றார். இவர் பல பங்குகளின் பங்குத்தந்தையாகவும், அமல மரித்தியாகிகளின் உயர் குருமட அதிபராகவும், அம்பிட்டிய தேசிய குருமடத்தின் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் திருச்சபை வரலாற்றில் பாண்டித்தியமும், இரு முதுமாணிப்பட்டங்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



பயஸ் அடிகளாரின் பூதவுடல் தாங்கிய பேழையை குருக்கள் தூக்கிச்செல்வதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கட்டுரைகள்

## மனுக்குல வேதனையும் கிறிஸ்துவின் மானுடவேற்பும்

அருட்பணியாளர்
செ. பிரான்சிஸ் அசிசி யூட்

"எங்களைப்போன்ற ஜென்மங்களை எல்லாம் ஏன்தான் கடவுள் படைத்தானோ? தினம் தினம் இப்படியே சாகிறதைவிட ஒரேயடியாக செத்துப்போனால் பரவாயில்லை" என்று 20 வயது மாத்திரமே நிரம்பிய ஒரு இளம் பெண் என்னிடம் மனம் உடைந்து அழுது கூறினாள்.

மனிதனின் அதி உச்ச வேதனையை சித்தரிப்பதாக வேதாகமத்தில் யோபு புத்தகம் விளங்குகின்றது. யோபு வேதனை மிகுதியால் அழுது கூறுவார், "ஐயோ ஒழிக நான் பிறந்த அந்த நாளே ..... ! அந்த நாள் இருளாகட்டும் ....! ஏனெனில் என் தாயின் கருப்பையை அவ்விரவு அடைக்காமற் போயிற்றே! என் கண்களினின்று வேதனையை அது மறைக்காமற் போயிற்றே! கருப்பையிலேயே நான் இறந்திருக்கலாகாதா? கருப்பையினின்று வெளிப்பட்டவுடனே நான் ஒழிந்திருக்கலாகாதா?" (யோபு 3:3). இதே வேதனையையும், வலிமையையும் துளியும் குறையாமல் மேற்சொன்ன பெண்ணினுடைய வாழ்விலும் என்னால் பார்க்கக்கூடியதாக இருந்தது.

இன்று யோபுவைப்போல உலகம் முழுவதும் மனமுடைந்து வேதனையில் அழுபவர்களும், அதன் காரணமாக சாகத் துடிப்பவர்களும் ஏராளம். குறிப்பாக கிறிஸ்மஸ் போன்ற பண்டிகைக் காலங்களில் இந்த வேதனையும், வலியும் அதிகம் உணரப்படுகிறது போலும்! ஏனெனில் ஏனைய காலங்கள் நேரங்களைவிட பண்டிகைக் காலங்களில்தான் தற்கொலைகளும், தற்கொலை முயற்சிகளும் இருமடங்கு அதிகம் இடம்பெறுவதாக ஒரு அதிர்ச்சி தருகின்ற செய்தி சொல்கின்றது.

மனித உள்ளம் அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்குவதாகவும், தங்களை அன்பு செய்யவும் ஆதரிக்கவும் யாருமே இல்லை என்கிற நிலை இக்காலங்களில்தான் அதிகம் உணரப்படுவதாகவும் இதன் காரணமாக தோற்றுவிக்கப்படுகின்ற தனிமையும், தனிமையின் வேதனையும் வாழ்வின்மீதான அவர்களுடைய நம்பிக்கையை செயல் இழக்கச் செய்வதாகவும், இறுதியாக தங்கள் உயிர்களைத் தாங்களே மாய்த்துக்கொள்கின்ற தற்கொலை முயற்சிகளுக்கு அவர்களை இட்டுச் செல்வதாகவும் அந்தச் செய்தி காரணம் கற்பிக்கின்றது.

இன்று வடக்கு கிழக்குப் பகுதிகளில், குறிப்பாக வன்னியில் வாழ்கின்ற மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் மிகவும் பரிதாபகரமான ஒரு சூழ்நிலையில் வாழ்கின்றார்கள்.



அவர்களும் வாழ்வில் நம்பிக்கையை தொலைக்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு வாழ்ந்து - கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் பிறப்பு விழா இவ்வாறான ஒரு சூழ்நிலையில் என்ன செய்தியை இந்த உலகத்திற்கு கொடுக்கமுடியும்? பல்வேறுபட்ட வாழ்வுப் பிரச்சினைகள் சிக்கல்களுக்கு மத்தியில் இதன் பொருத்தப்பாடுகள்தான் என்ன? இதைக் கொண்டாடுவது இக்காலச் சூழ்நிலைகளுக்குப் பொருந்துமா? போன்ற சிந்தனைகள் எழுகின்றன.

வேதாகமத்தைப் புரட்டிப் பார்க்கின்றபோது கிறிஸ்து பிறப்பு பற்றிய பகுதிகள் நமக்கு மிகவும் ஆறுதல் தருவதாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளன. மத்தேயு நற்செய்தியின்படி "மரியாள் கருவுற்று ஓர் ஆன்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்.... இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பது பொருள்," (மத் 1:23) என்று சொல்லப்படுகின்றது.

ஆம் நம் கடவுள் நம்முடன் இருக்கின்றார். ஏழ்மைக் கோலத்தில் ஏழையாக ஆதரவற்று அவர் பிறந்ததன் அர்த்தம், நம் கடவுள் நம் துன்பங்களில் பங்கெடுக்கின்றார் அவற்றை நமக்காகப் பகிர்ந்துகொள்ளுகின்றார். அவர் நம்மைத் தனித்து விடவில்லை. நம் கஸ்ரங்களில் நம்மோடுகூட நம் பக்கமாக இருந்து நமக்கு ஆதரவளிக்கின்றார். கிறிஸ்து பிறப்பு விழாவில் நாம் கட்டாயம் விளங்கிக்கொள்ள வேண்டியதும், அதிகம் நம்பிக்கை கொள்ளவேண்டியதுமான பேருண்மை இதுதான்.

கிறிஸ்துவின் பிறப்பின்போது வானதூதர் ஒருவர் இடையர்கள் வழியாக நமக்கு கூறவிழைவதும் இதே உண்மையைத்தான். "அஞ்சாதீர்கள் இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் **மீட்பர் உங்களுக்காகப்... பிறந்திருக்கின்றார்"** (லூக் 2:11).

நாம் அஞ்சத்தேவையில்லை. நம்பிக்கை தளர்ந்து, விரக்தி கொண்டு வாழ்வை மாய்த்துக்கொள்ளவும் தேவையில்லை. நமக்காக நம்மை மீட்பதற்காகவே நம் கடவுள் பிறந்திருக்கிறார். இறைவார்த்தை சொல்வதுபோன்று "இருளிலும் இறப்பின் பிடியிலும் இருக்கும் நமக்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் விண்ணிலிருந்து விடியலாக நம்மைத் தேடி நம் கடவுள் வந்திருக்கிறார்" (லூக் 1:79). யோவான் நற்செய்தி ஆசிரியர் கூறுவதுபோன்று "நாம் வாழ்வு பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டே அவர் வந்திருக்கின்றார்". (யோவா 10:10).

கிறிஸ்துவின் பிறப்பில் கடவுள் நம் மனுக்குலத்துடன் கொண்டுள்ள அதி உன்னதமான நெருக்கத்தையும், அருகாமையையும், உடனிருப்பையும் உணர்ந்துகொள்ள-வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அன்று பெத்லேகேம் நகரத்தில் விடுதிகள் அனைத்தும் நிரம்பியிருந்தன. ஆகவே கிறிஸ்துவுக்கு அங்கே இடம் கிடைக்கவில்லை. இன்று நம் வாழ்வும் பல்வேறு பிரச்சினைகள், கவலைகள், கஸ்ரங்கள், ஏக்கங்களால் நிரம்பியிருக்கின்றன. ஆனால் நம் கடவுள் நம்மிடம் வந்து நம் வாழ்வில் தமக்கொரு இடம் கேட்கின்றார். நம் கஸ்ரங்களில் துன்பங்களில் நம்மோடுகூட இருக்கவும், நமக்கு துணைசெய்யவும், நம்மை ஆதரிக்கவுமே நம் வாழ்வில் தமக்கொரு இடம் கேட்கின்றார்.

இரக்கம் நிறைந்த அந்தக் கடவுளை நம் வாழ்வில் ஏற்று அவர்மீது ஆழமான உறுதியான நம்பிக்கை கொள்ளவும், அவர் வழியாக நிறைவாழ்வு பெறவும் நாம் முயற்சி செய்வோம். கிறிஸ்து நம் வாழ்வை தம் அன்பாலும், அமைதியாலும், மகிழ்ச்சியாலும் நிரப்ப தம் ஒரே மகனென்றும் பாராமல் அந்த மகனையே நாம் வாழ்வு பெறும் பொருட்டு நமக்காக கையளித்த கடவுளுக்கு (யோவா 3:16) நன்றிகூறி மன்றாடுவோம்.

## நான்காம் ஞானி நாமாவோம்!

*பி. ஞானராஜ், ஆசிரியர்,*
*புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார்.*

இற்றைக்கு 20 நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆண்டவர் இயேசு இவ்வுலகில் மீட்பராக அவதரித்தார். கன்னி மரியாளிடம் வானதூதரால் கருவாக உருவாகி, மனிதனாக டிசம்பர் மாதம் 25ம் நாள் பிறந்தார். அந்த பிறப்பு விழாவையே முழு உலகும் 'கிறிஸ்மஸ்' தினமாக மகிழ்வுடன் கொண்டாடுகின்றது.

கிறிஸ்து பிறந்தார் என்பது வரலாறு. அவர் ஒரு முறையே பிறந்தார். அப்பிறப்பின் நினைவு ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது. சகல மனிதர்களும் ஒரு முறை பிறந்தாலும், தமது பிறப்பின் நாளை ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருவது யதார்த்தமாகும்.

இந்நிலையில் பாலன் பிறந்ததும் 3 (அரசர்கள்) ஞானிகள் சென்று அவரை வணங்கி தூபம், பொன், வெள்ளைப் போளம் என்று பரிசில்களை மகிழ்வுடன் வழங்கி வணங்கி விட்டு "அவரே மெசியா" என்பதை இவ்வுலகிற்கு உறுதிப்படுத்திச் சென்றனர் என்பது வேதாகம வரலாறு. இன்றும் மக்கள் உலகம் முழுவதும் பிள்ளை புதிதாகப் பிறந்ததும் அன்பளிப்புக்களை வழங்கி பிள்ளையை வாழ்த்திச் செல்வது வழமையாகிவிட்டது.

இவ்வாறு 3 ஞானிகள் சென்றது ஒரு முறை. ஒரு வரலாறு, ஒரு நிகழ்வு. வேதாகமத்தில் 4வது ஞானி சென்றது பற்றிக் குறிப்பிடவில்லை.

அப்படியெனில் 4வது ஞானியாக யார் சென்றிருப்பார்....? என்ன அன்பளிப்பு வழங்கியிருப்பார்....? என்ற யதார்த்த சிந்தனை எழுகின்றது.

பரம்பரை பரம்பரையாக, காலம் காலமாக ஒவ்வொரு டிசம்பர் 25ம் திகதியும் பாலன் குடில் சென்று வணங்கும் நாம் ஒவ்வொருவரும்தான் 4ம் ஞானி! ஆகவே 4ம் ஞானியாக நாம் எம்மை உருவகித்து, பாலன் குடில் அருகில் செல்வோமானால் எமது வாழ்வில் மாற்றமும் வரலாற்றில் திருப்பமும் உண்டாகும்.



2011ம் ஆண்டில் கிறிஸ்மஸ் தினத்தில் நாம் ஒவ்வொருவரும் பாலன் அருகில் செல்லும்போது எம்மை 4வது ஞானியாக நினைத்துக்கொள்வோம். அப்படி நினைத்தால் நாம் பாலனுக்கு என்ன பரிசில் கொடுக்கப்போகிறோம்? பாலன் என்ன பரிசலை என்னிடம் எதிர்பார்க்கிறார்? என்ற சிந்தனை எழுகின்றது. எம்மைச் சிந்திக்க வைக்கிறது?

காலம் கலியுகமாகிறது. வரலாறு மறைக்கப்படுகிறது. மனிதம் புதைகிறது. பாலன் பிறக்கிறார். எம்மருகில் உதிக்கிறார். ஆனால் நாம்.... எதைக் கொடுத்து ஆராதிக்கப் போகிறோம் ...?

எமது வாழ்வையும் வாழ்வின் செயல்களையும் பாலன் அன்பளிப்பாகக் கேட்கிறார். கொடுப்போமா? எப்படிக் கொடுப்போம்? அவர் விரும்பும்படி எம்மிடம் காணப்படும் தீய எண்ணங்கள், செயல்கள் கோபம், பகை, பழிவாங்கும் தன்மை, சுறண்டல், அடாவடித்தனம், கொலை, களவு, பொய் போன்றவற்றை பாலன் அருகில் செல்லும்போது களைந்து, குளித்த (Fresh) உடல்போல் செல்வோம்.

2011ம் ஆண்டில் நாம் செய்த ஏதாவதொரு நல்ல காரியத்தை எண்ணிப்பார்த்து அதை அவர் பாதத்தில் காணிக்கையாக வைப்போம். 2011ம் ஆண்டில் செய்த மிகவும் மோசமான தீய பழக்கத்தில் ஆகக் குறைந்தது ஒன்றையாவது 2012ம் ஆண்டில் செய்ய மாட்டேன் என்று சிந்தித்து, அந்த சிந்தனையை பாலனின் பாதத்தில் காணிக்கையாக வைப்போம்.

இதைத்தான் இறைமகன் தமது பிறப்பில் எம்மிடம் எதிர்பார்க்கிறார். அப்படிச் செய்யும்போது 3 ஞானிகளும் வந்த திசையால் செல்லாமல் வேறு திசையால் செல்ல வானதூதர்கள் வழிகாட்டியதுபோல் 4ம் ஞானியாக இவ்வருட கிறிஸ்மஸ் விழாவில் நுழையும் நம் ஒவ்வொருவரையும் வானதூதர்கள் எமது தவறான பழைய பாதையில் செல்லவிடாமல் ஒளியின் பாதையில், இறைவனின் பாதையில் அயலவருக்கு அன்புப் பணிபுரிந்து மனிதத்தை மதித்து வாழும் உண்மையை நோக்கி எம்மை அழைத்துச் செல்வார்கள்.

3 ஞானிகளும் வேறு திசையில் சென்றதால் பாலன் யேசுவை ஏரோது மன்னனால் கொல்ல முடியவில்லை. அதேபோல் நாமும் ஒளியின் பாதையில் புதிய சிந்தனையுடன் செல்லும் 4வது ஞானி என்பதால், பிறந்துள்ள பாலனை அவர் சாயலில் காணப்படும் பல மனிதர்களை சாத்தானின் இவ்வுலக தூதுவர்களிடமிருந்து, பல ஏரோதுக்களிலிருந்து காப்பாற்ற முடியும் என்ற சிந்தனையுடன் பாலன் யேசுவை வணங்குவோம்.

நிச்சயம் ஒளி உதிக்கும். வழி பிறக்கும். பாதை சீர் செய்யப்படும். முன் செல்வோம். "நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது. வாரும் வணங்குவோம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# ஆபிரிக்காவை வெறும் பிரச்சினைகளின் கண்டமாக மட்டும் நோக்கக்கூடாது

## பெனின் நாட்டில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற்

ஆபிரிக்கா வெறும் பிரச்சினைகளின் கண்டமாக மட்டும் நோக்கப்படக்கூடாது. ஆபிரிக்காவின் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. ஆயினும் அக்கண்டத்தில் வாழ்க்கையை நேர்மறையாகப்பார்க்கும் புத்துணர்வு இருக்கிறது. நம்பிக்கை நிறைந்த இளமைத்துவம் இருக்கிறது. அத்துடன் நகைச்சுவை உணர்வும், மகிழ்ச்சி உணர்வும் இருக்கின்றன. அன்றாட வாழ்க்கையில் கடவுள் பிரசன்னமாய் இருக்கிறார், என்ற ஓர் விழிப்புணர்வு இன்னும் ஆபிரிக்கர்களிடம் இருக்கிறது என்று அண்மையில் பெனின் என்னும் ஆபிரிக்க நாட்டிற்குத் திருப்பயணம் மேற்கொண்ட திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கூறினார். இது திருத்தந்தையின் 22வது வெளிநாட்டுப் பயணமாகும்.



அல்பேனியத் தலைநகர் திரானாவில் இடம்பெற்ற ஐரோப்பிய ஆயர் பேரவைகள் அவையின் (சி.சி.இ.இ) நான்கு நாள் அமர்வுக் கூட்டத்தில் ஆயர்கள் பங்கெடுப்பதை படத்தில் காணலாம்.

ஆபிரிக்க கண்டத்தில் திருச்சபையின் எதிர்காலம் குறித்து அப்போஸ்தலிக்க ஏட்டை வெளியிடுவதற்கு பெனின் நாடு தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணத்தை திருத்தந்தை முதலில் விளக்கினார். பெனின் அமைதியிலும், ஜனநாயகத்திலும் எனப் பல வகையில் மற்ற ஆபிரிக்க நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. இந்நாட்டில் பல்வேறு மதங்கள் நல்லிணக்கத்துடன் வாழ்கின்றன என்று கூறினார்.

53 நாடுகளைக்கொண்ட ஆபிரிக்க கண்டத்தில் அமைதி நிலவும் இந்த பெனின் நாட்டில் கத்தோலிக்கர் குறைவாக இருந்தாலும் பல மதத் தலைவர்களும் திருத்தந்தைக்கு அமோகமாக வரவேற்பளித்தனர்.

## பெனின் எனப்படும் ஆபிரிக்க நாட்டில் திருத்தந்தை




பெனின் நாட்டு அரசுத் தலைவர் திருத்தந்தையை வரவேற்று அழைத்துச்செல்கிறார்.

## இளையோரின் ஒருங்கிணைந்த வளர்ச்சியில் கவனம் செலுத்த திருத்தந்தை அழைப்பு

மனிதனின் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் கல்வியை நன்முறையில் வழங்குவதற்கு, பெற்றோர், ஆசிரியர், ஆயர்கள் மற்றும் அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்பை வேண்டுவதாக திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறினார்.

போலந்து நாட்டில் கல்வி வாரம் கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி இவ்வாறு கூறிய திருத்தந்தை, இளையோரின் இதயங்களிலும் உணர்வுகளிலும் நல்ல பயிற்சியை வழங்கும் பொறுப்பை இவ்வாரம் அனைவருக்கும் உணர்த்தட்டும் என்று வாழ்த்தினார்.

## நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு நவீன சமூகப் பன்வலை அமைப்பு



நவம்பர் மாதம் 14ஆம் திகதி - 19ஆம் திகதி வரை hualieny; நடைபெற்ற கருத்தரங்கில் ஆசிய நாடுகளின் ஆயர்கள் ஒன்றுகூடினர்.


இந்தியா, மியான்மார், மங்கோலியா, மலேசியா, கொரியா, சிங்கப்பூர், பூர்ணெய், தாய்வான், தாய்லாந்து, பிலிப்பீன்ஸ் ஆகிய நாடுகளின் சமூகத் தொடர்பு ஆணைக்குழுக்களின் 30ற்கு மேற்பட்ட ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு நவீன சமூக பல்வகை அமைப்புக்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டது. அதாவது face book, twitter, you tube போன்ற நவீன அமைப்புக்களைப் பயனபடுத்தும் முறைகள் கற்றுக்கொடுக்கப்பட்டது.

## பாகிஸ்தானில் மறைபரப்பு ஆண்டு

பாகிஸ்தானில் 'திருத்தந்தை மறைபரப்புக் கழகங்கள்' தொடங்கப்பட்டதன் 60ம் ஆண்டைக் கொண்டாடும் விதமாக 'படகை ஆழத்திற்குத் தள்ளிக் கொண்டு போங்கள்' என்ற தலைப்பில் அந்நாட்டுத் திருச்சபை, இவ்வாண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து 2012ம் ஆண்டு செப்டம்பர் 30 வரை மறைபரப்பு ஆண்டாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

## ஆபிரிக்க சிறுமியரின் நடனத்தின் மத்தியில் திருத்தந்தை



*பெனின் நாட்டிற்குப் பயணம் செய்த திருத்தந்தையை அந்நாட்டின் கறுப்பின சிறுமிகள் தமது பாரம்பரிய நடனத்துடன் திருத்தந்தையை வரவேற்று அழைத்து வருகின்றனர்.*

## பத்துக் கட்டளைகளின் அடிப்படையில் ஆட்சி நடாத்தத் திட்டம்!

ஆபிரிக்க நாடான ஸாம்பியாவில் முதன்முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கத்தோலிக்க அரசுத் தலைவர் மைக்கிள் சாட்டா, தனது ஆட்சியை பத்துக் கட்டளைகளின் அடிப்படையில் நடாத்தவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். வத்திக்கான் புள்ளிவிவரங்களின்படி, ஸாம்பியாவின் சுமார் 1.25



கோடி மக்களில் 33 விழுக்காட்டினர் கத்தோலிக்கர்.

## பெத்லகேமை உலக பாரம்பரியச் சொத்தாக அறிவிக்க பிரான்சிஸ்கன் துறவியர் தயக்கம்

பாலஸ்தீனிய நகர் பெத்லகேமை உலக பாரம்பரியச் சொத்தாக அறிவிக்க முயலும் யுனெஸ்கோ அமைப்பின் திட்டம் குறித்து அப்பகுதியின் பொறுப்பாளர்களாக செயல்படும் பிரான்சிஸ்கன் துறவியர் தங்கள் தயக்கத்தை வெளியிட்டுள்ளனர்.

திருத்தலங்கள் என்பன சுற்றுலாத்தலங்கள் அல்ல, மாறாக செபம் மற்றும் வழிபாட்டின் இடங்கள். இத்திருத்தலங்கள் உலகப் பாரம்பரியச் சொத்துக்களாக அங்கீகரிக்கப்படுவதன் மூலம் தேசிய உடமைகளாக அறிவிக்கப்படும் அபாயம் உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். யுனஸ்கோ நிறுவனத்தால் ஓர் திருத்தலம் உலகப் பாரம்பரியச் சொத்தாக அறுவிக்கப்படும்போது அரச நிர்வாகத்தின்கீழ் கொணரப்படும். இத்தகைய ஒரு சூழலில் அரசியல் ஆதாயங்களுக்காக திருத்தலங்கள் பயன்படுத்தப்படக்கூடிய ஆபத்தையும் சுட்டிக்காட்டினர்.

## 'மௌனமும் இறைவார்த்தையும் நற்செய்தி அறிவிப்புக்கான பாதை' 2012ம் ஆண்டு உலக சமூகத்தொடர்பு நாளுக்கான கருப்பொருள் அறிவிப்பு

'மௌனமும் இறைவார்த்தையும் நற்செய்தி அறிவிப்புக்கான பாதை' என்பதை, 2012ம் ஆண்டு மே 20 அன்று அனுசரிக்கப்படும் உலக சமூகத்தொடர்பு நாளுக்கான கருப்பொருளாக திருத்தந்தை தேர்ந்தெடுத்துள்ளார் என்று வத்திக்கான் சமூகத் தொடர்பு அவை அறிவித்தது.

தேர்ந்து தெளிதல் மற்றும் சிந்தனை செய்யும் பழக்கத்திற்கு, மௌனம் எப்போதும் உதவுவதால் இது இறைவார்த்தையை ஏற்பதற்கும் உதவுகின்றது என்று அந்த அவை கூறியது.

உலக சமூக நாளுக்கான திருத்தந்தையின் செய்தி ஒவ்வோர் ஆண்டும் எழுத்தாளர்களின் பாதுகாவலரான தூய பிரான்சிஸ் தெ சேல்ஸ் திருநாளாகிய ஜனவரி 24 அன்று வெளியிடப்படுகின்றது. தூய ஆவியானவரின் பெருவிழாவுக்கு முந்தைய ஞாயிறன்று உலக சமூகத்தொடர்பு நாள் திருச்சபையில் வழக்கமாகக் கொண்டாடப்படுகின்றது.



மௌன - தியான நிலையில் இயேசு

## சமய உரிமைகள் மறுக்கப்படுவதால் அதிகம் துன்புறுவது கிறிஸ்தவர்களே

### ஐரோப்பிய ஆயர் பேரவைத் தலைவர்

இன்றைய உலகில் சமய உரிமைகள் மறுக்கப்படுவதால் கிறிஸ்தவர்கள் அதிகம் துன்புறுவது கவலை தருவதாக உள்ளது என்று ஐரோப்பிய ஆயர் பேரவைத் தலைவராகிய புடாபெஸ்ட் பேராயர் கர்தினால் பீட்டர் எர்டோ தெரிவித்தார்.

அல்பேனியாவின் திரானாவில் நடைபெற்ற ஐரோப்பிய ஆயர் பேரவைகள் அவையின் நிறைவுக் கூட்டத்தில் உரையாற்றிய கர்தினால் எர்டோ, ஜனநாயக அரசுகளும் ஐரோப்பிய சமுதாய அவையும், சமய உரிமைகளை மதிக்காத நாடுகளை இவற்றை வழங்குமாறு வலியுறுத்த வேண்டுமெனக் கோரினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் ......!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

## சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 03

தந்தை ஒருவர் தன் ஒரே மகனின் ஆற்றலை இனம்கண்டு அத்துறையில் அவனை வளர்த்தெடுக்க வேண்டும் என எண்ணினார். அவன் அறையில் பத்து ஆயிரம் ரூபா பணத்தையும், ஒரு கூடை சுவையான அப்பிள் பழங்களையும், சிறந்த சில புத்தகங்களையும் வைத்தார். "பணத்தை இவன் எடுத்துக்கொண்டால் இவனைப் பெரிய முதலாளியாக்க வேண்டும், பழங்களை எடுத்துக்கொண்டால் விவசாயி ஆக்கலாம், புத்தகங்களை எடுத்துக்கொண்டால் அறிஞனாக்க வேண்டும்," எனத் தனக்குள்ளே நினைத்துக்கொண்டார்.

அறைக்குள் சென்ற மகன் பணத்தைப் பையில் போட்டுக் கொண்டான், பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டு புத்தகங்களை வாசித்துக்கொண்டிருந்தான். மகன், அரசியல்வாதியாக வருவதற்குரிய அறிகுறியும், அடிப்படைத் தகைமையும் இருப்பதை தந்தை அப்போதே உணர்ந்துகொண்டார்.

### விதையில்லாமல் விளைவது!

"விதை இல்லாமல் புல் முளைக்கிறது. வேரில்லாமல் ரோமம் முளைக்கிறது. விதையும், வேருமில்லாமல் அரசியல் முளைக்கிறது" என்கின்றார் கவியரசு கண்ணதாசன். அரசுகளைப் பற்றியும், அரசியல்வாதிகளைப் பற்றியும் இவர் கூறுகின்றபோது, "கிட்லரின் சிந்தனை அவனைப் போரில் இறக்கிற்று. நேருவின் சிந்தனை போரைத் தடுத்தது. சனநாயகத்தில் அரசியல்வாதிகளின் சிந்தனை முட்டாள்களை அதிகப்படுத்திற்று. முட்டாள்களின் சிந்தனை அவர்களை போன்றவர்களையே அரசாங்கத்திற்குக் கொண்டுவந்து வைத்தது. இவற்றையெல்லாம் பார்த்துத்தான் மனிதர்கள் சிந்திக்கத் தெரியாத நாய்க் குட்டிகளிடம் பிரியம் காட்டினார்கள்" என விமர்சிக்கிறார்.

### கொள்கை இல்லாத கோழைகளா?

ஒருசிலரைத் தவிர்த்து கொள்கையோ, கோட்பாடுகளோ இல்லாத அரசியல்வாதிகளைத்தான் பெரும்பாலும் காணக்கூடியதாக இருக்கிறது. பணம் வருகிறது, பதவி கிடைக்கிறது என்றால் 'அரசியல் சிற்றரசர்கள்', 'அரசியல் பேரரசர்'களிடம் சரணாகதி அடைநதுவிடுகின்றார்கள். 'எதிர்ப்பு அரசியலை'த் தவிர்த்து 'ஒத்துப்போகும் அரசியல்' 'இசைந்து போகும் அரசியல்' என தாங்களே தமக்கேற்றாற்போல் பெயர்களை வைத்துக்கொண்டு 'சரணாகதி அரசியல்' நடத்துகிறார்கள்!

### கல்லறை மட்டிலும் கவனமாயிருங்கள்!

அரசியல்வாதி ஒருவர் இறந்துபோனால் அவரது கல்லறையில் பின்வருமாறு எழுதிவைக்கலாம் என கவிஞர் மு. மேத்தா 'கல்லறை வரிகள்' என்ற கவிதையில் கூறுகிறார். "உண்மையைச் சொல்லப்போனால் இவரது புகழ்பெற்ற உண்ணாவிரதப் போராட்டம் இங்குதான் ஒழுங்காக நடக்கிறது," அல்லது "தயவுசெய்து அரசியல் பேசாதீர்கள் இவன் எழுந்தாலும் எழுந்துவிடுவான்," எனப் பொறித்து வைக்கலாம் என்பார். நம் முன்னோர்கள் அடக்கம் செய்யப்பட்ட துயிலும் இல்லத்தில் நின்றுகொண்டு ஒரு கல்லறையைப் பார்த்து வாசிப்பதாக வர்ணித்துக்கொண்டால் மேற்சொன்ன வார்த்தைகளின் அர்த்தங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளலாம்.

### சலுகைகளுக்காக சரணடையாதீர்!

நாட்டுத் தலைவர்களின், அமைச்சர்களின், அதிகாரிகளின் அற்ப சொற்ப சலுகைகளுக்காக – அவர்கள் தயவுக்காக எலும்புத் துண்டைப் கண்டதும் உடம்பையே வாலாக வளைத்து நிற்கும் நாயைப்போல அடிபணிந்துபோகும் குணநிலையில் இருந்து – மனநிலையில் இருந்து நம் அரசியல், நிர்வாக, சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள் முற்றாக விடுபடவேண்டி இருக்கிறது. 'மாற்றங்களை உருவாக்கக்கூடிய நல்லுள்ளம் படைத்தவர்கள் செயலற்று, மௌனமாய் இருப்பதால்தான் அநீதர்கள் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்,' அநீதிகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். சோ. இராமசாமி சொல்வதுபோல, "மிகச்சிறிய மனிதர்களை மிகப்பெரிய நாற்காலிகளில் அமர்த்திவிடுகிறோம்," என்பதால்தான் இந்நிலை ஏற்படுகிறது என்பதை எண்ணிப்பார்க்க இன்னும் எவ்வளவு காலம் நம்மவர்களுக்கு எடுக்குமோ!

சில அரசியல்வாதிகள், சமூக, சமய தலைவர்களின் ஆயுள் காலம், 'அறிக்கை' விடுவதிலும், அனுதாபம் தெரிவிப்பதிலும் முடிவடைந்துவிடும் போலிருக்கிறது! இப்பேர்ப்பட்டவர்களை நினைக்கிறபோது, "உழைப்பவர்கள் இந்தத் தேசத்தில் சிலையில்கூட உழைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். தலைவர்கள் சிலையில்கூட பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள்," என ஒரு கவிஞன் சொன்ன வரிகள் நினைவுக்கு வருகின்றன. கவிஞர் மு. மேத்தா பாடுவதுபோல, "கைதட்டலுக்குள் இவர்கள் காணமல்போகிறார்கள். இவர்களை முதுகில் தட்டும் வரை நாடு முன்னேறாது," என்பார்.

### 'அகிம்சை'க்கு 'ஆமி'ப் பாதுகாப்பு

இன்றைய நம் நாட்டு அரசியல்வாதிகளைப்பற்றிச் சிந்திக்கின்ற போது, "அகிம்சை பேசும் ஆளுனருக்கு ஆமிப் பாதுகாப்பு...!" என்று ஓரிடத்தில் நான் குறிப்பிட்ட ஞாபகம் இருக்கிறது. இன்றைய நிலமைகளைப் அவதானிக்கின்றபோது 'அரசியல் காய் நகர்த்தல்'கள் சமய, சமூக, நிர்வாக கட்டமைப்புகளுக்குள் மிக வேகமாக ஊடுருவி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தூய மறை வாழ்வுக்குள் அரசியல் தன்மையில் விளங்கும் ஆதிக்கம் ஆன்மீகம் வளர முட்டுக்கட்டையாக – பெருந்தடையாக இருந்துகொண்டே இருக்கும். இது எப்படிப்பட்டது என்றால், கவலைக்கிடமான நிலைதான். 'ஒப்பரேசன் சக்சஸ் (Operation success). ஆனா, ஆள்த் தப்பாது!' என்பதைப் போன்றது.

### கட்டெறும்புகளை இனியாவது கவனிப்போமா?

ஆகவேதான், "'உங்களுக்குச் சோறு போடுவேன்' என்று சொல்வதன் மூலமே, உங்கள் பசியைத் தீர்க்கக்கூடிய சக்தி அரசியல்வாதி ஒருவனுக்குத்தான் உண்டு," என்கின்ற கவியரசு கண்ணதாசன், "அரசியல் சட்டத்தை உருவாக்கும் பொறுப்பை மனிதர்களைக்கொண்ட அரசியல் நிர்ணய சபையிடம் ஒப்படைத்ததைவிட, கட்டெறும்புகளிடம் ஒப்படைத்திருந்தால் ஓர் ஒழுங்கு முறையை அவை கற்பித்திருக்கும்," என அரசியல் நடத்துவதற்கான ஆலோசனையும் கூறுவார்.
நம்முடைய மாநாடுகளை நடத்தமுன் கட்டெறும்புகளை இனியாவது கவனிப்போமா? அவை எமக்கு நல்ல அனிமேற்றராக (Animator) முடியும்.

(தொடர்ந்து அ...தி...ரு...ம்...)

## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும்

# நேரியோ ஏபிரகாம் அடிகளார்



யாழ் பாசையூர் மண்ணின் மைந்தனும் கண்டி மறைமாவட்டத்தை தன் பணித்தளமாகக் கொண்டவருமான அருட்பணியாளர் ஹேபட் நேரியோ ஏபிரகாம் கடந்த 29.08.2011 அன்று தனது குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாவைக் கொண்டாடினார். அருட்தந்தை அவர்களுக்கு மன்னாவின் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.
(ஆசிரியர் - மன்னா)

இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அருளாளர்களை உலகிற்கு அளித்த பேறுபெற்றவர்கள் வழியில், யாழ்நகரில் பதுவையந்தோனி உறையும் பொன்னூராம் பாசையூரில், விசுவாசத்தில் ஊன்றித் தழைத்த அமரர் சவிரிமுத்து பரம்பரையில் உதித்தவர் அருட்திரு நேரியோ ஏபிரகாம் அவர்கள்.

புலவரும், கலைஞருமான அமரர் ஆசிரியர் ஏபிரகாம் மற்றும் பிலோமினா தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக இவர் பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியைக் கொழும்புத்துறை புனித ஜோசப் வித்தியாலயத்தில் பெற்ற இவர் தொடர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றார். சிறு வயதிலிருந்தே அமைதியும், பணிவும் நிறைந்தவராக இருந்தார். இவரது சாந்தம் தவழும் அருள்மிகு வதனம் இவர் பிற்காலத்தில் ஒரு குருவாய் வருவார் என்பதை உணர்த்தியது.

'முத்து' என வீட்டில் செல்லப் பெயர் சொல்லி அழைத்ததற்கேற்ப குணத்தில் முத்தாகவே திகழ்ந்தார். உயர்தரத்தில் தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து இறையழைத்தலை ஏற்று, கண்டி புனித சூசையப்பர் குருமடத்தில் 1978ல் மாணவனாய் இணைந்தார். தனது குருத்துவக் கல்வியை அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் தொடர்ந்தார். இறைவனுக்குகந்த சிறந்த குருவாக உருவாகி 29.08.1986ல் கண்டி புனித அந்தோனியார் பேராலயத்தில், கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியான்னி பெர்னாண்டோ அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார். தனது முதல் திருப்பலியைத் தான் பிறந்த மண்ணில் நாவழியா வரத்தோனின் நற்றலத்தில் நிறைவேற்றினார். கண்டி மறைமாவட்டத்திற்கென்றே அர்ப்பணிக்கப்பட்ட இவர் அம்மாவட்டத்திலேயே தன் பணியைத் தொடர்ந்தார்.

கண்டி பேராலயத்திலும், நுவரேலியா புனித சவேரியார் ஆலயத்திலும் உதவிப் பங்குத்தந்தையாகத் தம் பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து ராகல, கம்பளை, ஹற்றன், தலவாக்கலை ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்தார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் ஆற்றல்மிக்கவராய் உள்ளார்.

மலையக மக்களின் மனங்கவர்ந்த குருவாக விளங்கினார். பாமர மக்களின் ஆன்மீகத் தேவையில் அர்ப்பணிப்புடன் உழைத்தார். தன்னலமற்ற தார்மீகத் தந்தையாய் அனைத்து மக்களையும் வழிநடத்தினார். இவரது சேவையைப் பாராட்ட வார்த்தைகள் போதாது. தொடர்ந்து நற்செய்தி அறிவிப்புப் பணியில் உயர் கல்விக்காக இத்தாலி சென்றார். உரோம் நகரத்தில் 1993 - 1995 வரை கல்வியை மேற்கொண்டார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# புனிதர்களின் பாதையில்

## புனித லூசியா (பிரகாசியம்மாள்)

### கன்னி, மறைசாட்சி – (கி.பி. 304)



இவர் கி.பி 304 ஆம் ஆண்டில் சிராக்யுஸ் நகரில் மறைசாட்சியாக மாண்டவர்.
தியோக்ளீசியன் காலத்தில் இ.்.து நிகழ்ந்திருக்கலாம். திருச்சபை முழுவதிலும் இவரது பக்தி விரைவில் பரவியது. தொடக்கத்

**மாதமொரு புனிதரை அறிந்து கொள்வோம்**

**டிசம்பர்**

திருச்சபையிலிருந்தே இந்தப் பக்திக்கு ஆதாரம் கிடைத்துள்ளது. உரோமை திருவழிபாட்டு முறையில் அமைந்துள்ளவை என்று சொல்லப்படும். "பூசையின் மாறாத செபங்களின் தொகுப்பில்" இவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கி.பி 1204 ஆம் ஆண்டிலிருந்து அவரது கல்லறை கண்டுபிடிக்கப்பட்டு புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது.

தகுந்த ஆதாரம் இல்லாவிடினும் சில தகவல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. லூசியாவின் தாய் இரத்தப் பெருக்கினால் வேதனைப்பட்டார். இதனால் தாயும் மகளுமாகக் கட்டோனியாவுக்குத் திருப்பயணம் சென்றனர். புனித ஆகத்தாவின் ஆலயம் அங்குள்ளது. இருவரும் அங்கு உருக்கமாக மன்றாடினர். லூசியாவுக்கு அன்றிரவு கனவில் ஆகத்தா தோன்றினார். "உன் தாய்க்குத் தேவையான உடல் நலனைப் பெற்றுக் கொடுக்க உன் மன்றாட்டே போதுமானதாய் இருக்கும்போது, என்னிடம் ஏன் கேட்கிறாய்? உன் கற்பென்னும் லீலிமலரைக் கொண்டு இறைவனுக்கேற்ற இல்லிடம் தயாரித்துள்ளாய். உனது விசுவாசமே உனக்கு இப்போது உதவுவதற்குப் போதுமானது" என்றார். தாயும் நலம் அடைந்தார்.

பின்னர், தம் உடமைகளை ஏழைகளுக்குத் தானமளிக்க லூசியா அத்தலத்திலேயே தாயிடம் விடைபெற்றார். மீண்டும் சிராக்யுசுக்குத் திரும்பினர். வாக்களித்ததுபோல் உடைமைகளைப் பகிர்ந்தளித்தார். இளைஞன் ஒருவன் ஏற்கனவே இவரை மணந்துகொள்ள முயற்சிகள் பல செய்திருந்தான். இவரது கற்பின் வாக்குறுதியைக் கேட்டுக் கலங்கினான். பழிவாங்கும் எண்ணத்துடன், "இவர் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்" என்று உயர் அலுவலரிடம் குற்றம் சாட்டினான்.

"உன்னை அடித்து நொறுக்கும்போது உனக்குப் பேசுவதற்குக்கூட நா எழாது" என்றான். "இறையடியாள் நான். சரியான சொற்களைச் சரியான நேரத்தில் சொல்லத் தூய ஆவியார் துணை நிற்பார். ஏனெனில் தூய வாழ்வு வாழ்வோர் யாவரும் தூய ஆவியின் ஆலயங்கள்" என்றார். "விலை மகளிர் நடுவே உன்னைத் தள்ளுவார்கள். அப்போது தூய ஆவி பறந்துவிடுவார்" என்றான். "எனது விருப்பத்திற்கு மாறாக நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் எனக்கு இரு மடங்கு வெற்றி உண்டு புரிந்துகொள்" என்றார்.

ஆவேசமடைந்தான் அலுவலன். ஆனால் அவரையோ அசைக்க இயலவில்லை. அவர்மேல் காய்ச்சிய தார் எண்ணையை ஊற்றினர். அவருக்கு தீங்கிழைக்கவில்லை. மேலும் ஆத்திரம் அடைந்தவர்களாய் அவரது தொண்டையில் ஒரு வாளைப் பாய்ச்சினார்கள். இவ்வாறு மறைசாட்சி முடிபெற்று நம் மங்கை தூய வாயிலை அடைந்தார்.

*சிந்தனைக்கு*

"பல வேளைகளில் துன்புறுத்துவோரிடமிருந்து நாம் அடைகின்ற வேதனைகளில்தான் கிறிஸ்துவை மிக உறுதியாகக் கண்டடைய முடிகிறது" கன்னிமையைப் பற்றிப் புனித அம்புரோஸ் கூறிய கூற்று இது.

# செய்திகள் சில வரிகளில்

- பாகிஸ்தானில் 1986 முதல் செயல்படுத்தப்படும் இறைநிந்தனைச் சட்டத்தின் கீழ் இதுவரை 1081 பேர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 138 பேர் கிறிஸ்தவர்கள்.
- புனித பூமியில் அமைதி நிலவ வேண்டுமெனில், அரசியல் செயல்பாடுகள் மட்டும் போதாது. அதைவிட செபங்கள் மிக அதிக அளவில் தேவைப்படுகின்றன என்று எருசலேம் துணை ஆயர் வில்லியம் ஷொமாலி விண்ணப்பித்துள்ளார்.
- இந்தியாவின் சீரோ மலங்கராத் திருச்சபை தனது உயர்மட்டக் கூட்டத்தில் பிறரன்பு நடவடிக்கைகளுக்கென 100 கோடி ரூபாய் திரட்டத் தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் பொழிவு

**கிறிஸ்மஸ் சிறுகதை**

## நத்தார் பரிசு

அ. ஜஸ்மின் ஷறோன்,
ஆவணம், நானாட்டான்

"ஐயோ எனக்கு சாப்பாடும் வேண்டாம், தண்ணியும் வேண்டாம். என்ர அம்மாவையும், அப்பாவையும் கூட்டிற்று வாங்க!" இது ஏழு வயது நிரம்பிய நித்தியா நாளாந்தம் கூறும் வார்த்தைகள். விடிந்தால் பொழுது சாயும் வரை ஓயாமல் இதையே கூறிக்கொண்டு இருப்பாள். "நித்தியா, அழாதைங்கடா, செல்லம் சாப்பிடுங்கடா" என்று அரவணைத்துக்கொள்வாள் நிரு.

நித்தியா ஒரு பணக்கார வீட்டுக் குழந்தை. தாய்க்கும் தந்தைக்கும் ஒரே ஒரு செல்லப்பிள்ளை. பணம் கொட்டிக்கிடந்தது அவர்கள் வீட்டில்.

நித்தியாவின் தகப்பனான செல்லையா ஏழைகளையும், வறியவரையும் நேசித்தார். எல்லோருடனும் அன்புடனும், கருணையுடனும் நடந்துகொள்வார். இல்லாத மக்களுக்கு வாரி வாரி வழங்குவார். இல்லை என்ற வார்த்தை அவரிடமோ, அவரின் குடும்பத்தாரிடமோ கிடையாது. தந்தையாரைப்போல் நித்தியாவும் ஏழைகள்மேல் பரிவு கொண்டவள். மகளின் விருப்பப்படி வீதியிலே உணவின்றி அல்லல்ப்பட்ட ஏழைகளை அழைத்து அவர்களுக்கென்று ஓர் விடுதிச்சாலை அமைத்து அவர்களுக்கு நாளாந்தம் உணவு கொடுத்து பராமரித்து வந்தார் செல்லையா. அதனால் அவர்கள் வாழ்ந்த ஊரில் செல்லையாவின் குடும்பத்திற்கு தனி மதிப்பும், மரியாதையும் உண்டு. அவர் கூறும் நீதி, நியாயங்களை மக்கள் தட்டிக் கழிப்பதில்லை. ஏதும் பிரச்சினை என்றால் உடனே செல்லையாவை அழைத்துவந்து அதற்குரிய தீர்வைப் பெற்றுவிடுவார்கள். இவ்வாறு மகிழ்ச்சியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்த சமூகம் அது.

இவ்வாறு அவர்கள் வாழ்ந்துவரும் காலத்தில்தான் இனப்பிரச்சினையும், திடீரென ஏற்பட்ட யுத்த சூழ்நிலையும் அவர்களின் வாழ்வில் பல திருப்புமுனைகளை ஏற்படுத்தியது. தொடர்ச்சியான எறிகணை வீச்சினாலும், விமானக் குண்டுத் தாக்குதலாலும் செல்லையா வாழ்ந்த ஊரும், வீடும் தரைமட்டமாகியது.

இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அன்று நடந்த நேரடிச் சமரில் செல்லையாவின் குடும்பம் சின்னாபின்னமாகியது. பிள்ளை ஒருபுறம், தாய் தந்தை மறுபுறம் என்று பிரிந்து ஓடினார்கள். எங்கு போவது? என்ன செய்வது? என்று மக்கள் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டு திக்குத் திசை தெரியாமல் ஓடினார்கள். காட்டுப் பாதை வழியாக ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் நடுக்காட்டிலே ஓர் பற்றையடியில் இருந்து "அம்மா, அம்மா" என்று ஓலமிட்டு அழும் சத்தம்கேட்டது. திரும்பிப் பார்த்த சுமனும் அவனின் மனைவி நிருவும், "இது செல்லையா ஐயாவின் மகள் நித்தியா போலல்லவா இருக்கிறது" என்று கூறி ஓடிச்சென்று அவளைத் தூக்கினான். சுமனின் மனைவி நிரு, "டேய் நித்தியாக் குட்டி இங்க தனிய இருந்து என்னம்மா செய்யிறா... அம்மா எங்கடா செல்லம்" என்று சொல்லி அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டாள். நித்தியா ஓ.. வென அழத்தொடங்கினாள். ஓலமிட்ட நித்தியா, "அம்மா வேணும், அப்பா வேணும்" என்று விம்மி, விம்மி அழுது கொண்டிருந்தாள்.

அவளின் அழுகையை நிறுத்த முடியாமல் அவளை தூக்கிக்கொண்டு நடந்தாள் நிரு. நடந்து வரும் வழியிலே எங்கிருந்தோ வந்த எறிகணை ஒன்று சுமனின் அருமைப் புதல்வன்மேல் பட்டு அந்த இடத்திலேயே அவன் உயிர் பிரிந்தது. வலியும், வேதனையும் தாங்காமல் துடித்த அவனின் பெற்றோர் ஆசை மகனை கட்டியணைத்து அழுது குளறி அருகில் இருந்த கிடங்கொன்றில் போட்டு மூடிவிட்டு நித்தியாவைத் தூக்கிக்கொண்டு அழுதபடி நடந்தனர். நித்தியாவோ தன் அழுகையை நிறுத்தியதாக இல்லை. முகாம் ஒன்றில் நித்தியாவோடு இருந்த சுமனும், அவன் மனைவி நிருவும் மகனின் பிரிவால் துயருற்று உணவேதும் இன்றித் துடித்தனர். நித்தியாவோ தனது பெற்றோரின் பிரிவால் சாப்பாடு உண்ணாமல் வாடி வதங்கினாள்.

இப்படியாக பல மாதங்கள் உருண்டோடியது. காணாமல் போனோர் பட்டியலில் நித்தியாவின் பெற்றோரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. எங்கு தேடியும் அவர்களால் நித்தியாவின் பெற்றோரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இனித் தேடுவதற்கு இடமே இல்லை. ஒருவேளை அவர்கள் இறந்திருக்கலாம் என்று அதிகாரிகள் கூறிவிட்டனர்.

இதைக் கேட்ட நித்தியா பைத்தியக்காரிபோல ஏதேதோ புலம்பத் தொடங்கிவிட்டாள். அவளின் துர்ப்பாக்கிய நிலையறிந்த சுமனும், நிருவும் அவளை வைத்தியரிடம் பரிசோதித்து தினமும் மருந்து மாத்திரைகளை கவனமாகக் கொடுத்து வந்தனர். ஓரளவு சுகம் பெற்றாள் நித்தியா. மீண்டும் தனது தாய், தந்தையின் நினைவு வரவே பழையபடி அழ ஆரம்பித்துவிட்டாள்.

தன் மகனை இழந்த சோகத்தில் வாடிய சுமன் குடும்பத்திற்கு நித்தியா தங்களோடு இருப்பது ஓர் ஆறுதலாக இருந்தது. நித்தியாவின் பெற்றோர் இறந்துதான் விட்டார்களோ என்ற ஐயம் சுமனின் மனதில் எழுந்தது. ஏனென்றால் காணாமல் போன பலர் திரும்பி வந்துவிட்டனர். ஆனால் நித்தியாவின் பெற்றோர் வரவில்லை. அதனால் அவ்வாறான ஒரு சந்தேகம் எழுந்தது. தற்போது நிலமை சரியாகிவிட்டதால்



எல்லோரும் தங்கள் சொந்த இடத்திற்கு போகலாம் என்று அறிவிக்கப்பட்டது. சுமனும் மனைவியும் நித்தியாவை அழைத்துக் கொண்டு சொந்த இடத்திற்குப் போனார்கள். அங்கு சுமனின் வீடு தரைமட்டமாய் இருந்தது. ஆனால் செல்லையா செய்த புண்ணியமோ என்னவோ தெரியவில்லை, செல்லையாவின் வீட்டில் பெரிதான பாதிப்புக்கள் இருக்கவில்லை. அதனால் சுமனும் மனைவியும் நித்தியாவின் வீட்டில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் வீட்டிற்கு அண்மையில் ஆலயம் இருப்பதால் நிரு தினமும் நித்தியாவை ஆலயத்திற்கு அழைத்துச் சென்று அவளின் பெற்றோருக்காக செபித்துவிட்டு வருவாள்.

இவ்வாறு அவர்கள் வாழ்ந்துவரும் காலத்தில் வழமைபோன்று நத்தார் பெருவிழா அண்மையில் வர இருந்தது. இரண்டு மூன்று வருடங்களுக்குப் பின் தமது சொந்த மண்ணில் நத்தாரை கொண்டாட மக்கள் ஆவலாய் இருந்தனர்.

ஆனால் சுமனுக்கு மகனின் இழப்பும், நித்தியாவின் பெற்றோரின் இழப்பால் அவள்படும் வேதனையும் ஒரு புறம் மனதை ஆட்டிப்படைத்தது. என்றுமில்லாதவாறு அவன் அன்று வாய்விட்டே அழுதுவிட்டான். அவனின் மனைவி அவனைத் தேற்ற முயன்றாள். அவளால் முடியவில்லை. இருவருமே தங்கள் வேதனையை அழுகை மூலம் தீர்த்துக்கொண்டனர்.

அவ்வேளையில் நித்தியா அழுதழுது களைத்தவளாய் நித்திரை செய்துகொண்டிருந்தாள். அப்போது நிருவிடம் சுமன் கேட்டான், "நத்தாருக்கு இரண்டு நாள்தானே இருக்கு. என்ன செய்யப் போறீங்க? பலகாரம் ஏதும் செய்யவில்லையா? உங்களுக்கு சேலையும், நித்தியாக் குட்டிக்கு சட்டையும் வாங்குவோமா?" என்று கேட்டான். அவனின் மனைவி நிருவோ எதுவும் கூறாமல் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தாள். அவளின் யோசனையை கலைப்பது போன்று, அவ்வேளையில் நித்தியா "அம்மா... அப்பா..." என்று அழுதபடி நித்திரை விட்டெழுந்தாள். துணுக்குற்ற நிரு ஓடிச்சென்று நித்தியாவைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்து, "அழாதைங்க செல்லம்..." என்று கூறியவாறு சுமனின் அருகில் வந்து அமர்ந்துகொண்டாள்.

அப்போது சுமன் நித்தியாவிடம், "நித்தியாகுட்டி கிறிஸ்மசுக்கு பிள்ளைக்கு என்ன வேணும்" என்று கேட்டான். அவளோ "அம்மாவும், அப்பாவும் வேணும்" என்று கூறி அழுதாள். செய்வதறியாத சுமன், "அம்மாவும், அப்பாவும் இயேசப்பாட்ட போயிற்றாங்களம்மா... அவங்க இனி வரமாட்டாங்க செல்லம்!" என்று கூறி முடிப்பதற்குள், "இல்ல... இல்ல... அம்மாவும், அப்பாவும் எனக்கு வேணும்" என்று அவள் அழுதாள். ஒருவாறு அவளைச் சமாளித்த சுமனின் மனைவி வேறு கதை கூறி அவளை சமாதானப்படுத்தினாள். பெற்றோரின் நினைவை எப்படி மறக்க வைப்பது என்று யோசித்த சுமனுக்கும், மனைவிக்கும் தலை சுற்றியது. செய்வதறியாது நின்றனர்.

ஒருவாறு நத்தாரும் வந்தது. இரவு பூசைக்கு போவோம் என்று கூறி சுமனின் மனைவி நிரு பூசைக்கு போவதற்கு தன்னை ஆயத்தப்படுத்தினாள். அப்போது நித்தியா நித்திரையாகிவிட்டதால் சுமன் அவளை ஒருவாறாக எழுப்பி முகம் கழுவி உடை அணிவதற்கு அறைக்குள் வந்தான். எல்லோரும் உடை அணிந்து தயாராகிக்கொண்டிருக்கும் வேளையில் "நித்தியாம்மா, நித்தியாம்மா" என்று குரல் ஒன்று வீட்டிற்கு வெளியே கேட்டது. சுமன் ஆச்சரியத்துடன் "இந்த நேரத்தில் யார் நித்தியாவைத் தேடி வந்தார்கள்?" என்று சற்று யோசித்தபடி நித்தியாவை தூக்கிக்கொண்டு வெளியே வந்தான். பின்னால் சுமனின் மனைவியும் சென்றாள்.

மெதுவாக கதவை திறந்த சுமனுக்கு தன் கண்களையே நம்பமுடியவில்லை! தான் காண்பது கனவா, நனவா என்று புரியாமல் விழித்துக்கொண்டிருக்கையில், "என்ர நித்தியாக்குட்டி, செல்லமே எப்படியம்மா இருக்கிறீங்க என்று அழுதபடி நித்தியாவின் தாய் ஓடிவந்து நித்தியாவைத் தூக்கினாள். தாயைக் கண்டதும் 'அம்மா...' என்று ஆனந்தக் கண்ணீரோடு நித்தியா தாயின் அணைப்புக்குள் தன்னைக் கட்டுப்படுத்தினாள். வாசலில் நித்தியாவின் தாயும், தந்தையும் நிற்பதைக் கண்ட நிரு, "எப்படி இருக்கிறிங்க? வாங்க, வாங்க! நீங்க உயிரோட இல்ல என்று கூறிவிட்டாங்க. எப்படி இங்க வந்தீங்க" என்று கேட்டுக்கொண்டிருக்கையில், "செல்லை - யாண்ணன்...!" என்று கூறியவாறு சுமன் செல்லையாவை கட்டியணைத்து அழுதான்.

அப்போது சுமன், "வாங்க அண்ணன் எல்லோரும் வீட்டுக்க போவம். எங்கட வீடு உடஞ்சு போச்சு அதனாலதான் உங்கட வீட்டில் நித்தியாவையும் வச்சுக்கொண்டு இருக்கிறம். எங்க அண்ணன் இவ்வளவு நாளா இருந்தீங்க? என்று கேட்டார். "அத எப்படி நாங்கள் சொல்லுவம். நித்தியா தொலைஞ்ச வேதனையில தட்டுத்தடுமாறி, திசைமாறி எங்கோ ஒரு காட்டுவழியால போனா, அங்க ஒரு மனிதருமே இல்லாத இடம். எங்கு போவதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும்போது நித்தியா, நித்தியா என்று அழுதழுது, யாருமே இறங்காத பெரிய கிடங்கொன்றில என் மனைவி விழுந்திற்றா. எப்படி அவளத் தூக்கி எடுக்கிறது என்று தெரியாம நான் புலம்பிக்கொண்டிருந்தன். சாப்பாடும் இல்ல தண்ணியும் இல்ல. அந்த வழியால வந்த வேட்டைக்காரன்ர உதவியினால் மனைவியை வெளியே எடுத்து வேறோர் முகாமில வாழ்ந்துகொண்டிருந்தோம். தம்பி, பிள்ளை - யில்லாத கவலையில அவ மனம்குழம்பிவிட்டா. மனநல வைத்தியசாலையில இத்தனை நாளும் இருந்தோம். இப்போது அவ நல்ல சுகம்" என்று தன் கதைகூறி முடித்தார்.

## மனக்குடிலா? மாட்டுக்குடிலா?

செபமாலைக் கன்னியர்,
பட்டிம், மன்னார்.

உலர்ந்துபோன இதயங்களில் ஈரம் மலர, தளர்ந்துபோன நடைகளில் எழுச்சி மலர, குழிவிழுந்த கண்களில் பார்வை மலர, சுருக்கம் விழுந்த முகங்களில் மகிழ்ச்சி மலர, வற்றிப்போன வயிறுகளில் நிறைவு மலர, வெளுத்துப்போன உடல்களில் புதிய சக்தி மலர, உப்புச்சப்பற்ற வாழ்க்கையில் சாரம் மலர, சிறகொடிந்த இளம் பறவைகளின் சிறகுகள் மலர, குடிலிலே குழந்தையாகப் பிறந்தவரைக் கடவுளாகக் காண்போம்.

குடிலிலே இருப்பவர் ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் ஜோதியானவர். அண்டத்தையெல்லாம் பந்தென கைக்குள் அடக்கும் அனாதி கர்த்தரானவர். காலங்களையெல்லாம் இயக்குகின்ற கருணா மூர்த்தியானவர். இவர் மாட்டுக்குடிலில்தான் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கின்றார். ஏன் எங்களுடைய மனக்குடிலில் பிறப்பதில்லை?

"நீ விண்ணிலே இருந்து காட்சி தா. உன்னை அண்ணார்ந்து பார்த்து ஆராதனை செய்கின்றேன். முடியாது என்றால் அழகு சாதனங்களில் வந்துவிடு, அதற்கும் முடியாதென்றால் கட்டிவைத்திருக்கும் கோவிலில் வண்ணக் கோபுரங்களில், சிற்பங்களிலாவது சிலையாக வந்துவிடு" என அழைத்தாலும், அவர் எம் மனக்குடிலில் பிறப்பதற்குத்தான் விரும்புகின்றார். அப்போதுதான் அவர் எம் மனங்களில் உள்ள தூசியைத் துடைத்து நம்மைத் தூய்மைப்படுத்த முடியும். நம்மிடம் உள்ள 'நான்' எனும் ஆணவத்தை அகற்ற முடியும்.

இயற்கை எழில் கொஞ்சும் மலை உச்சிகளுக்கு செல்லும்போது ஆனந்தத்தில் மூழ்கி விடுகின்றோம். அலை வீசும் கடலுக்கு எதிரே நிற்கும்போது ஆழமாக பெருமூச்சு விடுகின்றோம். மனதைக் கொள்ளைகொள்ளும் இசைக்கு செவிமடுக்கும்போது எம்மையே இழந்து விடுகின்றோம். இவையனைத்தும் இறையனுபவமே!

அதுபோல குழந்தை உருவில் குடிலின் மத்தியில் அழுதுகொண்டிருக்கும் அந்தப் பாலனிடத்தில் நம்மால் இறையனுபவம் பெற முடிகின்றதா? எமது தன்னல வேர்களான பகைமை, பொறாமை, பழிவாங்குதல், மன்னிக்கமுடியாமை போன்றவற்றில் எது நம்மில் ஆணிவேராக உள்ளதோ அவற்றில் கோடரியை வைப்போம். வைத்தால் நிச்சயம் நம் மனக்குடிலில் ஆண்டவர் பிறப்பார்.

இன்று நீதியின் சூரியன் உதித்த எழுச்சி நாள். உலக வரலாற்றில் மீட்பு வரலாறு கலந்த நாள். மனிதரை ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்த நாள். கடவுள் தம் ஒரேபேறான மகனை வெளிப்படுத்திய உன்னத நாள். நமக்கு இந்த நாள் எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கவிதைகள்

## இயேசு

வந்தனங்கள் கூறி தொடர்கின்றேன் என் கவியை
வந்துதித்த பாலகனைப் பணிகின்றேன் இந்நாளில்.

மாளிகை கேட்கவில்லை, பளிங்குகள் பார்க்கவில்லை
மாண்புடன் பிறந்தீர் மாட்டுத் தொழுவத்திலே
மண்டபம் தர உமக்கு மனிதர்கள் இருந்தார்கள்
மனித நேயமது மனதிலே இருக்கவில்லை.

பிறந்தீரே பாலகனே வைக்கோலின் நடுவினிலே
மத்தாப்பூ மலர்ந்ததுபோல் நீரும் மலர்ந்தீரே!
இறக்கின்றோம் நாமின்று இரத்த வெள்ளத்தில்
எதிர்பார்த்த உம்வரவை ஏங்குகின்றோம் அமைதிக்காய்

பெண்மணியாம் மரியன்னை மடிதனில் தவழ்ந்தீரே
அரவணைத்தாள் அந்த அன்னை அன்புடனே உம்மை
பெண்மையின்று பேதலித்து புலம்புதைய்யா புவியினிலே
அன்பு மகன் காணாமல்போய் ஆறுமாதம் ஆனதுவே!

அவதரித்த பாலகனே பொழிந்திடுவீர் அன்பு மழை
மாந்தர்கள் மனங்களிலே மகிழ்வோடு பிறந்திடுவீர்
அடக்குமுறை அடியோடு அழிந்துமே போகட்டும்
அமைதியின் தூதனாக வந்திடுவீர் தரணியிலே

*- ஆர். எஸ். நிறோஜினி, வவுனியா*

## வானவர் பிறந்தாரம்மா!

வானம் சிவக்குதே வான்குயில் பாடுதே
வானம் மலர் தூவுதே வாழ்த்துக்கீதம் பாடுதே - ஆ...
வானவர் பிறந்தாரம்மா!

மலர்கள் மொட்டவிழுதே மயிலினம் ஆடுதே
மல்லிகை மணம் பரப்புதே மனிதம் மலருதே . ஆ....
மனித மீட்பர் பிறந்தாரம்மா!

மாரி காலத்திலே மார்கழி மாதத்திலே
மாட்டுக் கொட்டிலிலே மாமரி மடியினிலே - ஆ....
மாபரன் பிறந்தாரம்மா!

ஏழைக்குடிலினிலே ஏழ்மை வடிவினிலே
ஏழைகள் உருவினிலே ஏழைகள் உறவினிலே - ஆ...
வல்ல தேவன் பிறந்தாரம்மா!

## கொஞ்சம் சிரிங்க



கமல் : டேய் மச்சான் மன்னாப் பத்திரிகையில
'கொஞ்சம் சிரிங்க' என்று ஏன்டா கிடக்கு?

விமல் : அதா உன்ர பல்லு கிளீனா இருக்குதா என்று
பார்ப்பதற்குடா
கமல் : ................?

*ஜெ. மரியசுகிர்தா, அந்தோனியார் புரம், மன்னார்.*

கமலா : டாக்டர்..... என் எதிர் வீட்டுக்காரி வாஷிங்
மெஷின் வாங்கியிருக்கா....!

டாக்டர் : இதை ஏன் என்கிட்டே சொல்றே?

கமலா : நீங்கதானே வயிற்றெரிச்சல் இருந்தா
வரச்சொன்னீங்க!

.................................

பாலா : "ஏன்டா சைக்கிள் உயரம்கூட இல்ல நீ
சைக்கிள் ஓட்டறே"

குமார் : ரயில் ஓட்டறவர் ரயில் நீளமாவா இருக்காரு?

*அ. கி. தர்ஷனா, துட்டுவாகை, நேரியகுளம்.*

நண்பன் : என்ன மச்சான் ஏன் சோகமாக இருக்கிறாய்?

கபி : ஒன்றும் இல்ல கொஞ்சம் காசு தேவை
நண்பன் : பாங்கில் ஜாயிண்ட் அக்கவுண்ட் என்றால்
உனக்கு வேண்டும்போது நீ எடுத்துக்கொள்ளலாமே

கபி : இல்லடா மச்சான் அது என் மனைவி, மாமியார்
பெயரில் அல்லவா இருக்கிறது.

*யே. கரோலின், மாவிலங்கேணி, முருங்கன்.*

தவளை நண்பர் : என் பையனுக்கு பிரான்ஸ்ல ரெண்டு
கடை சொந்தமா இருக்கு

மற்ற தவளை : என்ன கடை?

தவளை நண்பர் : வேறென்ன "சாக்கடை" தான்

.................................

மஞ்சு : அது யாரு அம்பிகாதானே போறா?

அஞ்சு : ஆமா

மஞ்சு : கல்யாணத்துக்கப்புறம் அவள் எப்படி
குண்டாயிட்டா பாரு

அஞ்சு : அவ கொடுத்து வச்சவ. கட்டிக்கிட்டது
சமையல் காரனாச்சே

*பா. பிரசாந், உயிர்த்தராசன்குளம்.*



## ஜீவராசிகளின் 'கரோல்' கீதம்

விலங்குகள் மகிழ்வாய்ப் பாடி வந்தோம்
பாலனை தரிசிக்க நாடி வந்தோம்
தாலாட்டுப் பாடி மகிழ வந்தோம்
நண்பர்கள் நாங்கள் கூடிவந்தோம் - (விலங்கு)



பாலனெங்கள் சகோதரர்
பட்சமுள்ள குழந்தையவர்
இரக்கமுள்ள இறைவனவர்
நன்மை செய்யப் பிறந்தவராம் - (பால)

மாட்டுத் தொழுவத்தில் வந்துதித்தார்
தாழ்மையின் கோலத்தில் அவதரித்தார்
நண்பர்கள் நாங்கள் கூடிவந்தோம்
தாலாட்டுப்பாடி சூழநின்றோம்.



அழுக்குத் தோலை உடையவன் 'நான்'
பரட்டை உரோமம் போர்த்தவன் 'நான்'
நேசப் பாலனின் தாயவளை
பெத்லேகேம் நகருக்கு சுமந்தவன் நான்
மேடுகள் மேலும் தாங்கிச் சென்றேன்
பள்ள பாதையின் கீழும் சுமந்து சென்றேன்
எனப் பாடிப் பாடிப் பூரித்தது
செங்கல் நிறத்து கழுதையும் தான்



தீனித் தொட்டியைக் கொடுத்தவன் நான்
தொட்டில் படுக்கையில் துயில்வதற்கே
வைக்கோல் குவியலை தலையணையாய்
கொடுத்தேன் எங்கள் பாலனுக்கு
தேவபிள்ளை துயிலக் காணிக்கையாய்
தொட்டிலை அளித்தேன் நன்றிப் பசு
எனப் பெருமையாய் புகன்றது வெள்ளைப் பசு



ஆகா! அழகாய்ப் பொழுது விடிந்தது
நத்தார் நாளும் மகிழ்வுடன் வந்தது
வெதுப்பாய்த் தூங்கக் கம்பளியை
கண்ணயரக் கொடுத்தவன் நானன்றோ!
தெய்வப் பாலனும் தாயுடன் இதமாக
கம்பளிப் போர்வைக்குள் துயின்றாரே
எனச் சுருள் கொம்பனாம் செம்மறியாடும்
களிப்புடன் கூறித் துள்ளியது!



உயர்ந்த மரக் கூரைதனில்
துணையுடனிருந்த வெண்புறாவும்
களிப்புடன் கூவிப் பாடியது
தொழுது பிணையுடன் கூவியது
பாலனை பாடித் தூங்க வைத்தோம்
எனப் பகர்ந்து களிப்புடன் கூவியது.

*தேவமணி ஆனந்தராஜா, வவுனியா.*

## அன்பர் அவனியிலே

கோமகன் யேசு அன்று குவலயம் மீட்கவென்று
நகைப்பாக வேடம் கொண்டு நானிலம் வந்தாரென்று
வானிலே தாரகைபோல் பூமியிலே வாழ்ந்த கன்னி
மங்கள வார்த்தை கேட்டு மகனாரை கருவாய் ஏற்றார்.

அடிமையென திருவாய் மலர்ந்து
திவ்வியனில் தாயாய் நின்று
திருச்சித்தம் வழிநடந்து சூசை தனை மணமும் செய்து
மீட்புத் திட்டம் தனில் மிகையான பண்புதான் எடுத்து
ஏழை வடிவில் அந்த யேசுவின் தாயும் ஆனாள்.

வார்த்தை கருவாகி வயிற்றிலே உருவாகி
மாசம் பத்தாகி பாச மலராகி தேச விளக்காக
நேசர் அவனி காண காலம் சரியாக
தங்க இடமின்றி தவிக்கும் நிலை அன்று

தாங்க முடியா துன்பப்பட்டு துடிக்கும் மரியுடனே
தவிக்கும் சூசை அங்கே அந்தோ பரிதாபம்
பாவம் புரிந்த மக்கள் பரமன் பிறக்கவிடம்
கொடுக்க மறுத்து நிற்கும் கொடூரம் மறுபுறம்

கோலம் கண்ட ஞாயிறு மெய்மறந்து திகைத்திருக்க
பாலம் வரவுகளை படையாய் முகிலனைத்தும்
முண்டி முன்வந்து உள்ளம் மகிழ்ச்சி பொங்க
உருகி ஆனந்தநீர் சொரிந்து அவனி மழைபொழிந்தது.

மாடடை குடி ஒன்று தஞ்சமாய் வாய்த்தன்று
வானில் சுடர்மின்ன வானோர் இசை பொங்க
பாவம் பறந்தோட பாலனாய் உருவெடுத்து
கோமகன் குடிலினிலே கோவில் கொண்டார் அன்று.

*அ.றெஜிற்றா, பிடாரிகுளம், முருங்கன்.*

## விண்ணக மைந்தன் மண்ணகம் நோக்கி...

விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம் அமைக்க
விண்ணக மைந்தன் மண்ணகம் வந்தார்
வண்டாடும் மலர்போல் அவர் வதனம் இருந்தது
மன்றாடும் மாந்தருக்கு மகிழ்ச்சி அங்கே இருந்தது.

மார்கழிப் பூவாய் மாமரியின் மடியினிலே
மாதவத்தோன் யேசு பாலன் மாட்டுத் தொழுவத்தில்
மாண்புடனே பிறந்துவிட்டார்.

இடையவரவர் இடையே இறைதூதர் தோன்றி
இறையரசின் மைந்தனவர் இகமதிலே தோன்றியதை
இனிதுறவே அறவிக்க இடையரவர் மகிழ்வு கொண்டு
இறைமகனை வழிபட்டார்.

ஏழ்மையின் கோலத்தில் இருகையை நீட்டி
சிரித்த முகத்துடனே சின்னப் பூ மலர்ந்தது
இன்னல்கள் தீர்க்கும் இரக்கத்தின் ஊற்றாக
இரு விழி அங்கே காட்சி கொடுத்தன.



*எஸ். ஜென்ஸி,*
*பிள்ளையார் பிட்டி,*
*ஆண்டாங்குளம்.*

## மன்னா விளம்பரப் பலகை

நுண்ணறிவு அன்புடன் சேர்ந்துவிட்டால் அதனால்
அடைய முடியாதது எதுவும் கிடையாது.

*ஜெ. றொசானி, பிடாரிகுளம், முருங்கன்.*

"கடவுளின் விரல் எழுதிய சிறுகதைதான்
ஒவ்வொரு மனிதனின் வாழ்வும்"

"ஒருவரின் குணநலன்களை அறிய விரும்பினால்
அவருக்கு அதிகாரத்தை கொடுத்துப் பார்"

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம்,*
*நானாட்டான்.*

"நாம் அடைகின்ற மகிழ்ச்சியும் உண்மையானதல்ல,
துயரமும் உண்மையானதல்ல". (விவேகானந்தர்)

"முகத்திற்கு முகம் நேரே சிரிப்பவர் முகஸ்துதி செய்பவன்.
கூனிக் குழைபவன் கூழைக் கும்பிடு போடுபவன்,
இவனெல்லாம் நல்ல நண்பன்போல் தோற்றமளிப்பான்"
(கண்ணதாசன்)

*எஸ். றொக்சி பவித்திரா,*
*ஆட்காட்டிவெளி.*

ஒரு நண்பனைப் பெறுவதற்கு நீ ஒரு நண்பனாய்
இருப்பது ஒன்றே வழியாகும்.

*ஜெ. நெவி, மாவிலங்கேணி, முருங்கன்.*

"சாகத் தயாராக இல்லாதவன்
வாழத் தயாராக முடியாது"

*சு. டிலாணி, வீரபுரம்.*

"சிரித்து வாழ்ந்திடு
ஆனால் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே"

*கா. விவினா டயஸ், தலைமன்னார் மேற்கு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 10

– ஆங்கில மூலம் –

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குரூஸ் FSC

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## ஒரு போர்வீரனின் அமைதியான உணர்வலைகள்

சில நாட்களுக்கு முன்பு நான் பாக்கிஸ்தானில் காராச்சியின் பழைய நகரத்தினூடாக சகோதரர் நோர் மன்றோய் உடன் காரில் சென்றுகொண்டிருந்தேன். அவர்தான் காரை ஓட்டிச்சென்றார். சில வருடங்களுக்கு முன்பு எம். கியூ. எம் இயக்கத்தினரும், ஹக்கீக் முஹஸீர்ஸ் இயக்கத்தினரும் சண்டையிட்ட பிரதேசம். ஆனாலும் மிகவும் ஜன நெருக்கடி நிறைந்த வியாபாரத் தலமாக இருந்தது. அதன் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் ஆயுதம் தாங்கிய போர்வீரர் நிற்பதைக் கண்டு மிகுந்த கவலை அடைந்தேன். ஒவ்வொரு வியாபார ஸ்தலமும் மிக நல்ல முறையில் காவல் செய்யப்பட்டிருந்தது. நான் 35 வருடங்களுக்கு முன்பு கண்ட அமைதியும் சமாதானமும் நிறைந்த கராய்ச்சி நகரமாகத் தோன்றவில்லை. நிலமைகள் முற்றாக மாறியிருந்தன.

அந்தப் பரிதாபகரமான காட்சி எனது சொந்த தாய் நாடாகிய சிறிலங்காவின் கொழும்பு நகரத்தில் எல்லா இடங்களிலும் பாதுகாப்பு காவல்கள் நிற்கும் காட்சியை நினைவுபடுத்தியது.

இந்நாட்களில் சந்தேகத்தின் ஆட்சி மேலோங்கி உள்ளது. நவீன உலகத்தின் எல்லா நாடுகளிலும் இதே நிலைதான் என்று நான் எண்ணுகிறேன். நம்முடைய திறமைமிக்க கல்வியும், ஆன்மீக அமைப்புக்களும் நம்மை எங்கே இட்டுச்சென்றுள்ளன?


எங்களுடைய வாகனம் கராய்ச்சி ஹைதராபாத் பிரதான பாதையை அண்மித்துக்கொண்டிருந்தது. நான் எனது இருக்கையில் நன்றாக சாய்ந்து நினைவுகளில் மூழ்கிவிட்டேன். பாதையின் இருமருங்கிலும் பருத்திச் செடிகளும், கரும்பச்சையான கரும்புத் தோட்டங்களும் இலையுதிர் காலத்தின் இதமான காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தன.

வானத்துப் பறவைகள் ஆனந்தமாக தங்கள் சுதந்திரத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. மிருகங்கள் வயல் வெளிகளில் தன் பாட்டில் அலைந்து திரிந்துகொண்டிருந்தன. மனித இனம் நமது சமுதாயத்தில் கட்டியெழுப்பியுள்ள அடிமைத்தன அமைப்புக்களையும், மனிதனின் கொடிய குணங்களையும் உணர்ச்சியற்ற தன்மைகளையும், அர்த்தமற்ற யுத்தங்களையும் ஸ்ரீலங்காவில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலும் உள்ள நிலைபற்றி ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தேன். எங்களுடைய சகோதரத் தன்மைக்கும், எங்களுடைய விவேகத்திற்கும் ஐக்கியத்துக்கும் என்ன நடந்துவிட்டது? ஜீன் ஜாக்குஸ் றவுஸ்சியூ சமயோகிதமாக கூறினார், "மனிதன் சுயேச்சையாக பிறந்தான்; எல்லா இடங்களிலும் தொடராக" யுத்தங்களும், போதை வஸ்துக்களும் மனிதனால் உண்டாக்கப்பட்ட நாசங்களும் தங்கள் பங்கை பெருந்தொகையாக எடுத்துக்கொண்டன. அதிலும் விசேடமாக கொடூர யுத்தம் மனிதனின் உயர்ந்த குறிக்கோள்களுக்கும் சமாதான கொள்கைகளுக்கும் முழுமாறாக செயல்படுகின்றது.

மொறிசியஸ் நாட்டின் ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகராகிய திரு. ஈஸ்வரன் எனக்குத் தந்த "ஆன்மீக எண்ணங்களைத் தூண்டுதல்" என்ற சிறிய நூலில் இருந்த ஒரு உயிரோட்டமுள்ள என் அடி மனதில் ஆழ்ந்துகிடந்த வாசகங்கள் பளிச்சென்று என் மனதில் தோன்றியது. "ஒரு போராளியின் வேண்டுதல்" அதுதான் அந்த வாசகத்தின் தலைப்பு. இரண்டாவது உலகப் போரின்போது கொல்லப்பட்ட ஒரு போர் வீரன் சிகரெட் பெட்டியின் பின்பக்கம் எழுதிய கவி ஒன்று அவனை கட்டிலில் கிடத்தி இழுத்துச் சென்ற ஒருவரால் கண்டெடுக்கப்பட்டது.

**அவைகள் பின்வருமாறு :**

இறைவா! நான் உம்முடன் ஒருபொழுதும் பேசியதில்லை. ஆனால் இப்பொழுது நீர் எப்படி இருக்கிறீர் என்று நான் சொல்ல வேண்டும் ஆண்டவரே! அவர்கள் எனக்குச் சொன்னார்கள் நீர் உயிர் வாழவில்லை என்று, ஒரு மடையன்போல் நான் அவை எல்லாவற்றையும் நம்பிவிட்டேன். நேற்று இரவு ஒரு வெடித் துவாரத்தின் வழியாக நான் உமது ஆகாயத்தைக் கண்டேன். அதிலிருந்து அவர்கள் சொன்னது ஒரு பொய் என்று நான் எண்ணிக்கொண்டேன். நீர் படைத்தவைகளைப் பார்க்க நான்



நேரம் எடுத்திருந்தால் அவர்கள் உள்ளதை உள்ளவாறு சொல்லவில்லை என்று எனக்குத் தெரிந்திருக்கும். நீர் என்னுடன் கை குலுக்குவீர் என்று நான் ஆவலாய் இருந்தேன். ஆண்டவரே எப்படியாவது விளங்கிக்கொள்வீர் என்று நான் உணருகிறேன். உமது முகத்தைக் காணுவதற்கு நேரம் கிடைக்குமுன் நரகம் போன்ற இடத்துக்கு வந்திருக்க வேண்டியது ஆச்சரியம்தான். சிலவேளை நீர் என் கைகளைத் தொட்டிருந்தால் நல்லது இன்னும் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஆண்டவரே இன்று உம்மைச் சந்தித்ததில் எனக்கு மிகுந்த சந்தோசம். அந்தி நேரம் மிகவிரைவாக இங்கு வருகிறதென்று எண்ணுகிறேன். ஆனாலும் நீர் என் அருகில் இருக்கின்றீர் என நான் அறிந்ததில் இருந்து நான் பயப்படவில்லை. அழைப்பு நல்லது, ஆண்டவரே நான் போகவேண்டும். நான் உம்மை அதிகமாக விரும்புகின்றேன் என்பது உமக்குத் தெரிய வேண்டும். பாரும் இப்பொழுது இது ஒரு பயங்கரமான சண்டையாக இருக்கப்போகிறது. யாருக்குத் தெரியும் இன்று இரவே நான் உமது வீட்டிற்கு வரலாம். இருந்தாலும் நான் முன்பு உம்முடன் நண்பனாக இருக்கவில்லை. ஆண்டவரே நீர் உமது வாசலண்டையில் காத்திருப்பீரா என்று எண்ணுகிறேன். இவ்வளவு நாட்களும் உம்மை நான் அறிந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நல்லது நான் இப்பொழுது போக வேண்டும் ஆண்டவரே. சென்று வருகின்றேன். புதுமை என்னவென்றால் உம்மை சந்தித்ததில் இருந்து நான் சாவதற்கு பயப்படவில்லை."

## உலகிலேயே பெரிய கிறிஸ்மஸ் .....

முதலாம் பக்கத் தொடர்ச்சி

இந்த கிறிஸ்மஸ் மரமானது ஒரு மலையினுமேல் இத்தாலி நகரின் குபியோ நகரைப் பார்க்கின்றவிதமாக அமைக்கப்பட்டுள்ளது. 2,132 அடி உயரமான இந்த கிறிஸ்மஸ் மரம் உலகிலேயே அதி உயர்ந்த கிறிஸ்மஸ் மரமாகும். மக்களின் சர்வதேச அமைதிக்கும், சகோதரத்துவத்திற்குமான சின்னமாக இது விளங்குகிறது என வத்திக்கான் செய்தி வெளியிட்டுள்ளது.


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.



**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/=

கலர் 7,500/=


## போட்டி 98 இற்கான சரியான விடைகள்

1. முதலாம் வானதூதர் எக்காளம் முழங்கினபோது (8:7)
2. கடலின் ஒரு பகுதி இரத்தமாக மாறியது. கடல் வாழ் உயிரினங்களில் மூன்றிலொருபகுதி மடிந்தன.
3. நடுவானில் பறந்துகொண்டிருந்த கழுகு
4. புகையிலிருந்து கிளம்பிய வெட்டுக்கிளிகளுக்கு (9:3-4)
5. யூப்பிரதீசு பேராற்றின் அருகில் கட்டப்பட்டிருக்கும் வானதூதர் நால்வரையும் அவிழ்த்துவிடு (9:13-14)
6. உலகின் ஆட்சி உரிமை நம் ஆண்டவருக்கும் அவருடைய மெசியாவுக்கும் உரியதாயிற்று. அவரே என்றென்றும் ஆட்சி புரிவார். (11:15)
7. அன்னை மரியாள் (12:1-2) 8. மனவுறுதியும், நம்பிக்கையும்
9. கல்வாரிமலைமீது யேசு இருப்பதைக் குறிக்கிறது. (14:1)
10. கடவுளுக்கு அஞ்சுங்கள். அவரைப் போற்றிப் புகழுங்கள் ஏனெனில் அவர் தீர்ப்பளிக்கும் நேரம் வந்துவிட்டது. (14:7)

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 98இற்கான கேள்விகளுக்கு 13 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரிய அதிஷ்ரசாலி:**

*மேரி ஜஸ்மின், இல 24, ஆஸ்பத்திரி வீதி, குடியிருப்பு, வவுனியா.*

### பாராட்டுக்குரிய 10 அதிஸ்ரசாலிகள்

1. அருட்சகோதரி. மேரி மாக்ரட், தி. கு.க. மடம், மன்னார்.
2. ஜெ. சுமணா பிகிறாடோ, இல 201/17, 4ம் வலயம், பள்ளிமுனை.
3. யே. ஜெஸ்மின், பள்ளக்கமம், முருங்கன்.
4. அ. மடுராஜினி, டோ. க. சபை, துள்ளுகுடியிருப்பு, பேசாலை.
5. ச. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்.
6. யே. யோஷித் நிஷாக்குமார், இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
7. எஸ். கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
8. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
9. யோ. மரியம் டர்ஷிகா, நானாட்டான்.
10. வி. வின்சன் மற்றிக், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் போட்டி- 100

கிறிக்கெற் விளையாட்டில் முதன் முதல் சதம் அடித்தவன் எப்படி மகிழ்வான் அதே மகிழ்ச்சி எனக்கும் இப்போது ஏற்படுகின்றது. நூறு மாதங்கள் இதை எழுத முடிந்ததே என்று எண்ணும்போது இறைவனின் கரமே என்னை வழிநடத்தியதாக மகிழ்ந்து நன்றி கூறுகின்றேன்.

இப்போட்டியில் பலர் பங்குகொண்டார்கள் ஆனால் ஒரு நபர் நூறு போட்டிகளிலும் பங்குகொண்டிருப்பாரா என்றால் சந்தேகமே

இதுவும் ஒருவகையில் மறையறிவிப்புப்பணிதான். இதைச் சரியாக செய்வதற்கும் பங்குகொள்வதற்கும் இறையருள் வேண்டும்.

நாம் செபம் சொல்வோம் என்று சொன்னால் நாம் நினைப்பது செபமாலை சொல்வதைத்தான். பரலோக மந்திரம், அருள்நிறைந்த மரியாயே, மன்றாட்டு மாலைகள், மாதாவுக்கும், புனிதர்களுக்கும் என்று நமக்கு ஆக்கித்தரப்பட்டிருக்கும் செபங்கள் எல்லாம் பொது ஆராதனைகளுக்காக வரைந்தளிக்கப்பட்டவையே.

இன்று நாம் செபிப்பது போலவே யூத மக்களும், மரியாள் யேசு இவர்களின் பிறப்புக்கு முன்பும் செபித்தார்கள். இறைவேண்டுதல் செய்தார்கள். பலி ஒப்புக்கொடுத்தார்கள் என்பதும் நமக்குத் தெரியும். இஸ்ராயேலர்களுக்கான செபக்கூடங்கள் ஊர்கள்தோறும் இருந்தன. ஜெருசலேம் நகரம் சலமோன் கட்டிய தேவாலயத்தால் புனித நகராக எண்ணப்பட்டது. முக்கிய பண்டிகைகளுக்கு யூத மக்கள் யூதேயா கலிலேயாவிலிருந்தும் ஏனைய நகரங்களிலிருந்தும் ஜெருசலேமில் ஒன்று கூடினர். ஜெருசலேம் தேவாலயத்தை தம் பெருமைக்கும், பெருமிதத்துக்கும் உரிய ஒன்றாக யூதமக்கள் எண்ணி வாழ்ந்தார்கள்.

கோவில்கள் தொழுகைக்கூடங்கள் இருந்தன என்றால் - மக்கள் வழிபட்டார்கள் என்றாகும். அவர்கள் வழிபாட்டுக்குத் துணை நின்றவை எவை? திருச்சட்டங்களும், ஆகமங்களும் தான். அவற்றில் முக்கிய பங்கேற்றவை திருப்பாடல்கள். இவற்றிலிருந்துதான் இம்மாதத்திற்கான வினாக்கள் தொகுக்கப்படுகின்றன.

**திருப்பாடல் 1முதல் 8வரை**
**பொருத்தமற்ற வாக்கியத்தின்கீழ் கீறிடுக.**

1. நற்பேறு பெற்றவர் யார்?
1.1 பாவிகளின் தீய வழியில் நில்லாதவர்.
1.2 இகழ்வாரின் குழுவில் அமர்பவர்
1.3 பொல்லாரின் சொற்படி நடவாதவர்
1.4 திருச்சட்டத்தைப் பற்றி அல்லும் பகலும் சிந்திப்பவர்

2. நற்பேறு பெற்றோர் எப்படி இருப்பர்?
2.1 நீரோடை அருகில் நடப்பட்ட மரம் போலிருப்பர்.
2.2 பருவ காலத்தில் பலன் தருபவர்.
2.3 என்றும் பசுமையாயிருப்பர்
2.4 தம் செயல் அனைத்திலும் வெற்றிபெறாதிருப்பார்.

3. ஒன்றுகூடிச் சதிசெய்யும் வேற்றினத்தார் பற்றி என் தலைவராம் ஆண்டவர் செய்வதென்ன?
3.1 எள்ளி நகைக்கின்றார்.
3.2 ஏளனம் செய்கின்றார்.
3.3 அவர்களுக்கு உற்சாகமூட்டுகின்றார்.
3.4 சினமுற்று அவர்களை மிரட்டுகின்றார்.

4. பூவுலகை ஆளும் அரசர்களுக்கு சொல்லப்படுவது என்ன?
4.1 உங்கள் ஆட்சிபற்றிப் பெருமைகொள்ளுங்கள்.
4.2 விவேகமாக நடந்துகொள்ளுங்கள்.
4.3 எச்சரிக்கையாயிருங்கள்
4.4 ஆண்டவரது காலடியை முத்தமிடுங்கள்

5. மூன்றாம் திருப்பாடல் எப்போது பாடப்பட்டது?
5.1 தாவீது தன் பகை அரசர்களிடமிருந்து தப்பியபோது.
5.2 தன் மகன் அப்பலோவிடமிருந்து தப்பியோடியபோது.
5.3 தாவீதரசன் தன் மாட்சியோடு அரசாண்டபோது.
5.4 தாவீதரசன் பகைவர்களோடு யுத்தம் செய்யத் தயாரானபோது

6. தாவீதரசன் கடவுளை எப்படியாகக் காண்கின்றார்.
6.1 நீதி அருளுகின்ற கடவுளாக
6.2 நெருக்கடியில் துணைபுரியும் கடவுளாக.
6.3 மன்றாடும்போது பதிலளிக்கும் கடவுளாக.
6.4 தீமைகளுக்கு துணைபோகும் கடவுளாக.

7. கடவுள் முன்னிலையில் எவற்றிற்கு யாருக்கு இடமில்லை.
7.1 தீமைக்கு இடமில்லை
7.2 பொல்லாங்கு செய்வோருக்கு இடமில்லை
7.3 நன்றிப் பாடல் பாடுவோருக்கு இடமில்லை
7.4 ஆணவம் மிக்கோருக்கு இடமில்லை

8. ஆறாம் திருப்பாடலில் ஆண்டவரிடம் தாவீது கேட்பது என்ன?
8.1 ஆண்டவரே என்னைவிட்டு அகன்று போய்விடும்
8.2 ஆண்டவரே எனக்கு இரங்கும்
8.3 ஆண்டவரே என்னைக் குணமாக்கியருளும்.
8.4 ஆண்டவரே என் உயிரைக் காப்பாற்றும்.

9. தான் என்ன செய்திருந்தால் தன் எதிரி தன்னைத் தண்டிக்கட்டும் என்று தாவீதரசன் இறைவனிடம் முறையிடுகின்றார்?
9.1 என் கை தவறிழைத்திருந்தால்
9.2 நான் நீதியோடு அரசாண்டிருந்தால்
9.3 என்னோடு நல்லுறவு கொண்டவனுக்குத் தீங்கிழைத்திருந்தால்
9.4 என் பகைவனைக் காரணமின்றிக் காட்டிக் கொடுத்திருந்தால்.

10. இறைவன் மனிதப்பிறவிகளுக்கு அளித்த நன்மைகள் எவை?
10.1 மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டினார்.
10.2 கடவுளின் கை படைத்தவற்றை ஆளும்படி செய்தார்.
10.3 வானத்துப் பறவைகள், கடல் மீன்கள், உயிரினங்கள் அனைத்தையும் மனிதனுக்குக் கீழ்ப்படுத்தினார்.
10.4 மனிதனைத் தன் மனம்போன போக்கில் வாழவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.113

## திருவெளிப்பாடு 1 முதல் 22 முடிய

உங்கள் விடைகளை பத்திரிகை உங்கள் கைக்கு கிடைத்து ஒரு வாரத்திற்குள் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 37 | . | 11 | 04 | | 19 | | 06 |
| | 17 | | 36 | | | ✱ | | 16 | |
| | ✱ | | | | 23 | | 21 | | 20 |
| 18 | | | | 22 | 32 | 34 | 13 | | |
| 35 | 15 | | 38 | ✱ | | 14 | | | |
| | | 05 | | | | 10 | | 31 | ✱ |
| 27 | | 26 | 08 | | | | 25 | | 24 |
| ✱ | | | | | 09 | | | ✱ | |
| | 28 | | | 33 | ✱ | | 30 | 07 | |
| 02 | | | 29 | | | 12 | | | 03 |

(—— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. பசும் ............. எல்லாமே சுட்டெரிக்கப்பட்டது.
2. தூய்மையற்ற பறவைகள் அனைத்தின் புகலிடமாக—— விலங்குகளின் இருப்பிடமாக ............. விட்டாள்.
4. அவர்கள் ............. உடை உடுத்தி, ஆயிரத்து இருநூற்று அறுபது நாளும்——எனக்குச் சொல்லப்பட்டது.
5. "எனக்குச் செல்வம் உண்டு, ............. உண்டு, ஒரு குறையும் இல்லை" என நீ சொல்லிக் கொள்ளுகிறாய்.
7. நம் கடவுள் ............. முன் அல்லும் பகலும் அவர்கள்மீது ——வெளியே தள்ளப்பட்டான்.
8. அவள் ............. வேதனைகளைக் கண்டு அஞ்சித் தொலைவில் நின்றுகொண்டு,
9. இவர்கள் ............. செய்யப்பட்ட ஆட்டுக்குட்டி வைத்திருக்கும் ——பெயர் எழுதப்படாதோர்.
10. அவற்றின் ............. பெண்களின் கூந்தலையும், பற்கள் சிங்கங்களின் பற்களையும் ஒத்திருந்தன.
12. ............., நான் கதவருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன்.
13. அதற்கு தூய ஆவியார், "ஆம், அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ............. பெறுவார்கள்;"
14. படுகுழியின் வானதூதரே அவற்றுக்கு ............. .
15. அதன்மேல் ஏறியிருந்தவரிடம் ஒரு ............. இருந்தது.
18. .............இறக்கும் தறுவாயில் உள்ளது.
23. தீவுகளெல்லாம் மறைந்துபோயின; ............. களும் காணப்படவில்லை.
27. அப்பெண் செந்நிற கருஞ்சிவப்பு ............. களை அணிந்திருந்தாள்.
35. கேட்கச் ............. யுடையோர் திருச்சபைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும்.

### வலமிருந்து இடம்

3. ".............! உலகில் வாழ்வோர்க்கு கேடு வருக! ஐயகோ!" என்று கத்தக் கேட்டேன்.
6. இருபத்து ............. மூப்பர்கள் அரியணையில் வீற்றிருந்தவர் முன் விழுந்து,——வணங்கினார்கள்.
11. வெற்றிபெறுவோரை என் கடவுளின் கோவிலில் ............. நாட்டுவேன்.
12. ஆட்டுக்குட்டி சென்ற ............. எங்கும் அதைப் பின் தொடர்ந்தவர்கள்;
16. ............. சாம்பிராணிப்புகை இறைமக்களின் வேண்டுதல்களோடு சேர்ந்து——எழும்பிச் சென்றது.
20. நான் என் ............. களுள் இருவரை அனுப்புவேன்.
21. அதனால் அவர்கள் ............. களுக்குப் படைக்கப்பட்டதை உண்டு பரத்தமையில் ஈடுபட்டார்கள்.
22. இறைவாக்கினர்கள், இறைமக்களின் இரத்தக்கறையும், ஏன், மண்ணுலகில் ............. ப்பட்ட அனைவருடைய—— காணப்பட்டது.
23. இதோ, விரைவில் வருகிறேன். உனக்குரிய ............. முடியை யாரும் பறித்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்.
24. ஏனெனில் கடவுளாகிய ஆண்டவர், அவர்கள்மீது ............. வீசுவார்.
25. ............. எனவும் எகிப்து எனவும் உருவகமாக அழைக்கப்படும்——பிணங்கள் கிடக்கும்.
29. ............. பெறுவோரை இரண்டாவது சாவு தீண்டவே தீண்டாது.
31. அரியணையைச் சுற்றி இருபத்து நான்கு அரியணைகள் போடப்பட்டிருந்தன. அவற்றில்——தலையில் பொன்முடி .............யிருந்தார்கள்.
33. அது என் ............. தேனைப்போல் இனித்தது.

### மேலிருந்து கீழ்

1. அது படுகுழி வாயிலைத் திறக்கவே, பெரும் சூளையிலிருந்து ............. எழுதுவதுபோல் அக்குழியிலிருந்து புகை கிளம்பியது.
6. ............. அவர்களுக்கு கடவுளாய் இருப்பேன்;
8. அவருடைய தலைமுடி வெண் கம்பளி போலும் உறை ............. போலும் வெண்மையாய் இருந்தது.
11. ......... ஆவியாரும் ஆட்டுக் குட்டியின் மணமகளும் சேர்ந்து, "வருக! வருக" என்கிறார்கள்.
15. உமது இரத்தத்தால் குலம், மொழி, நாடு மக்களினம் ஆகிய——கடவுளுக்கென்று ............. கொடுத்து மீட்டுக்கொண்டீர்.
19. பின்பு ........... போன்ற ஓர் அளவுகோல் என்னிடம் கொடுக்கப்பட்டது.
26. அரியணையில் வீற்றிருந்தவரது வலக்கையில் ஒரு சுருளேட்டைக் கண்டேன். ............. உள்ளும் புறமும் எழுதியிருந்தது.
28. இதன்பின் நான் ஒரு காட்சி கண்டேன்; விண்ணகத்தில் ஒரு கதவு திறந்திருந்தது. நான் முதலில்——"இவ்விடத்துக்கு ............. வா:
32. அவற்றின் மார்பில் இரும்பாலான மார்புக் ............. அணிந்திருந்ததுபோலத் தோன்றியது.
35. முதலில் நீ செய்து வந்த செயல்களை இப்பொழுதும் .............
36. நகரின் ............. நடுவே பாய்ந்தோடியது.
37. உன் செயல்களையும் ............. உழைப்பையும்—— நான் அறிவேன்.

### கீழிருந்து மேல்

2. ஆகவே மனம் ............. இல்லையேல், நான் விரைவில் அவர்களோடு போர் தொடுப்பேன்.
3. ஆண்டவராகிய இயேசுவின் ............. அனைவரோடும் இருப்பதாக!
5. எல்லாம் ............. கடவுளின் கடும் சீற்றம் என்னும் பிழிவுக் குழியில் திராட்சை இரசத்தை அவர் பிழிந்தெடுப்பார்.
12. மனிதர் மண்ணில் தோன்றிய நாள் முதல் இத்துணை பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டதே .............
17. இறந்தோருள் சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரும் —— வேறொரு நூலும் திறந்து வைக்கப்பட்டது. அது வாழ்வின் .............
18. இதோ! சோதிப்பதற்காக ............. உன்னைச் சேர்ந்தோருள் சிலரை சிறையில் தள்ளவிருக்கின்றது.
23. ............. பொருள் கொண்ட பெயர் ஒன்று அவளது நெற்றியில் எழுதப்பட்டிருந்தது.
28. ............. எடுக்கவும் அதன் முத்திரைகளை உடைத்துப் பிரிக்கவும் தகுதி பெற்றவர் நீரே."
30. மண்ணகத்தின் நான்கு திக்குகளிலும் உள்ள நாடுகளை, அதாவது ............. , மாகோகு என்பவற்றை ஏமாற்றவும், —— அவன் புறப்பட்டுச் செல்வான்.
33. அவர் தம் ............. தூதரை அனுப்பித் தம் பணியாளராகிய யோவானுக்கு அவற்றைத் தெரிவித்தார்.
34. அப்பொழுது தூய ஆவியால் ஆட்கொள்ளப்பெற்ற என்னை அந்த வானதூதர் ............. நிலத்துக்குக் கொண்டுசென்றார்.
38. மறைத்துவைக்கப்பட்டுள்ள மன்னாவை வெற்றி பெறுவோருக்கு அளிப்பேன். வெள்ளைக் ............. ஒன்றையும் அவர்களுக்கு கொடுப்பேன்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 111ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
கே. யோகராஜா,
தலைமன்னார் பியர்,
தலைமன்னார்.

**இரண்டாம் பரிசு:**
சி. நோயல் கிறிஸ்ரி றோச்,
பள்ளிமுனை,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
ந. ஜஸ்மின், பாடசாலை வீதி
முதலியார்குளம்,
செட்டிகுளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 60 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 29 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 111ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. எம். எம். ஜெ. பசில், 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
02. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
03. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
04. ம. யஸ்ரீன் பிரபாகர், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
05. லு. டெஸ்மன் பெர்ணான்டோ, மன்/ பு.சவே. ஆண். தே. பாட.
06. எஸ். ஆனந் டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட். வங்காலை.
07. யோ. டிலைக்சன், அ.மு.க பாடசாலை.
08. லூ. ஆன் மேரி தெரிசிற்றா குரூஸ், 2ம் வட். வங்காலை.
09. வை. அன்சி பெர்ணான்டோ, த.பியர், தலைமன்னார்.
10. அ. க. கீர்த்திகா, 41, புனித மரியாள் வீதி, திருகோணமலை
11. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
12. ச. குமார், பட்டித்தோட்டம், மன்னார்.
13. பி. நாதன் மெல்சி டயஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
14. யே. ஆன் சிந்துஜா, பொன்தீவுகண்டல், முருங்கன்.
15. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
16. யே. வினோதினி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
17. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டன்.
18. என். சி. ஜெக ஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
19. செ. ஜெசில்டா, ஆயர் இல்லம், பட்டித்தோட்டம், மன்னார்
20. செ. யேசுதாசன், முருங்கன் பிட்டி, முருங்கன்.
21. எஸ். மேரி குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட். வங்காலை.
22. பு. சனோஜன், முருங்கன் கமம், முருங்கன்.
23. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்
24. அ. மடுராஜினி, துள்ளுகுடியிருப்பு, பேசாலை.
25. என். ஜெகப்பிரியன், 180, ஒல்லிமோட்டை, மன்னார்.
26. பி. நவரட்ணம், 180, ஒல்லிமோட்டை, மன்னார்.

## இல.111 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒ[1] | ளி | து | கா[15] | யா[2] | ரு | ம் | கு | க் | வா[3] |
| ✱ | யா | சா | எ[4] | ✱ | ஒ[33] | லி | லை | ✱ | ழ் |
| அ[5] | ன் | பு | ன் | க[6] | ட | ல் | பா[12] | ய | க[9] |
| மை | தா[7] | ய் | நா[10] | மி[32] | ல் | சொ[11] | வ | கே[16] | ர் |
| தி[13] | ப | ம் | னே | ✱ | ஓ[8] | டு | ம் | பா | தி |
| தி | க[14] | ரு | ப[17] | டி | று | ண் | ம் | மு | எ |
| ம் | ✱ | வ | ல | செ[30] | வே[31] | உ[27] | லை | நி[26] | ✱ |
| கா[18] | ண | ரு | நீ[28] | வி[21] | ட் | டு | ந[22] | ம் | பி |
| லை | ல் | இ[29] | ரு | ழா | ✱ | ✱ | னி | பூ | ர[24] |
| வ[20] | ந் | து | ம் | ன | இ[19] | டு | தை | ந் | ச[23] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.112ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு ஜனவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா .....

10ஆம் பக்கத்தொடர்ச்சி

நாடு திரும்பிய இவரது பொறுப்பில் பல உயர்ந்த பணிகள் ஒப்படைக்கப்பட்டன. மறைக்கல்வி இயக்குனர், பாப்பரசர் மறைபரப்பு இயக்குனர், அம்பிட்டிய தேசிய குருமட விரிவுரையாளர், நுவரேலிய பிராந்திய குருமுதல்வர், தலவாக்கலை புனித பத்திரிசியார் பாடசாலை தல முகாமையாளர், நுவரேலியா பிராந்திய சமூக பொருளாதார தல அபிவிருத்தி இயக்குனர், குடும்ப அப்போஸ்தல பணி போன்ற பொறுப்புக்களை மகிழ்வுடன் ஏற்று தளராத சேவைபுரிந்தார். இவரது தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட 'அருள் ஊற்று' பத்திரிகையின் ஆசிரியராகவும் இவர் பணிபுரிகின்றார்.

தற்போது ஹற்றன் பங்குத் தந்தையாகவும், நுவரேலியா - ஹற்றன் பிராந்திய குருமுதல்வராகவும் தமது பணியைத் தொடர்கிறார். இவரது வெள்ளிவிழா நிகழ்வு கடந்த 29.08.2011ல் ஹற்றன் பங்கில் சிறப்பாக நடைபெற்றது. இவரது மகத்தான பணியைப் பாராட்டி ஆயர் வியான்னி பெர்னாண்டோ அவர்கள் 'மலையக மாணிக்கம்' என இவரை வாழ்த்தினார்.

கண்டி மறைமாவட்டத்தில் வாழ்ந்தபோதும் இவர் தான் பிறந்த மண்ணை மறக்கவில்லை. போர்க்கால சூழலிலும் எமது பங்குக்கு வருகை தந்து மக்களைத் தரிசித்துச் சென்றார். தாம் அங்கு பணியாற்றிய காலம் தொட்டு, மலையகத்திற்கு சுற்றுலா செல்லும் எமது பங்கு மக்களை மனம்கோணாது உபசரித்து வருகிறார்.

இத்தகைய சிறப்புமிக்க பெருமகனுக்கு கடந்த 19.09.2011ல் அவரது பிறந்த மண்ணாம் பாஷையூரில் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது. எமது அருட்தந்தை அவர்கள் தமது கால் நூற்றாண்டு சேவையைத் தொடர்ந்து ஆற்றவும் நோய் நொடியின்றி வாழவும் இறையருள் வேண்டுகிறோம்.

- *டொணற்றா எஸ்பீரியல், பாஷையூர், யாழ்ப்பாணம்.*

## அன்னை திரேசா சபையினர்மீது.......

1ம் பக்கத் தொடர்ச்சி

கைது தொடர்பான செய்தி அறிந்த இச்சபையின் உயர் தலைவி அருட்சகோதரி பிறேமா அவர்கள் இந்தியாவில் இருந்து உடனடியாக கொழும்புக்கு விரைந்து வந்தார். கொழும்புப் பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகை கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சென்று அவரை வரவேற்று அழைத்துவந்தார். அருட்சகோதரி கைதுசெய்யப்பட்டமை குறித்தும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் பொலிசாரும் நடந்துகொண்ட விதத்தைக்குறித்தும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் வருத்தத்தை கர்தினால் அவர்கள் உயர் தலைவியிடம் தெரிவித்தார்.

## கொழும்பு மறைமாவட்டத்திற்கு .......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏனெனில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் தமிழர் ஒருவர் ஆயர் நிலைக்கு உயர்த்தப்படுவது இதுவே முதற் தடவையாகும். கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க பத்திரிகையான 'ஞான ஒளி' அடிகளாரை '*மாண்புறு தமிழ் மகன்*' என மகுடம் சூட்டி வாழ்த்தியுள்ளது. புதிய ஆயர்கள் பற்றிய விரிவான தகவல்களை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்.

## புனித வின்சென்ட் டி போல் ....

5ஆம் பக்கத் தொடர்ச்சி

குருமுதல்வரின் ஆசி உரையும் இடம்பெற்றது. வன்னிப் போரின் காரணமாக இயங்காமல் இருந்த அடம்பன், ஆண்டாங்குளம், விடத்தல்தீவு, வவுனியா பங்குகள் மீண்டும் புனரமைப்பு செய்யப்பட்டு இணைக்கப்பட்டன. அப்பங்குகளைச் சேர்ந்தவர்களும் நடனம், பாடல், பேச்சு போன்ற நிகழ்வுகளின் ஊடாக தங்களுடைய ஆர்வத்தை எடுத்துக் காட்டியது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மேலும் மன்னார் மத்திய சபையின் தோற்றம், வளர்ச்சி, பணிகள் பற்றிய விரிவான ஆய்வு, அனைத்துக்கும் சிகரம் வைத்ததுபோல் இருந்தது.

மேலும் கொழும்பு புனித வின்சென்ட் டி போல் தேசிய சபையால் மத்திய சபைக்கு வழங்கப்பட்ட நுளம்பு வலைகள் ஒவ்வொரு பந்திகளுக்கும் 3 வலை வீதம் வழங்கப்பட்டது. உயர்தர வகுப்பு படிக்கும் எட்டு மாணவர்களுக்கு கல்வி வசதிக்காக உதவிப்பணமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. உறவுப் பரிமாற்றமாக மதிய உணவும் வழங்கப்பட்டது. இறுதியில் ஆன்ம இயக்குனரால் சபையின் முக்கியத்துவம், கூட்டத்தின் ஒழுங்குமுறைகள் போன்றவை வரையறுத்துக் கூறப்பட்டன. அனைத்தும் இறை ஆசியோடு மங்களகரமாக, மகிழ்ச்சியாக, சிறப்பாக நடந்தேறியது. - **புனித வின்சென்டி போல், மத்தியசபை செயலாளர் வி. கிறிஸ்டி குரூஸ், பேசாலை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 01 1945



உதிர்வு 02 01 2002

**திரு.லோறன்ஸ் ஜெகநாதன் பீரிஸ்**
**பேசாலை**

காலத்தால் மறைத்திடுமோ!
ஞாலத்து உயர் சேவை,
வாழுதற் பொழுதுகளில்
வான் உயர்ந்த பணிசெய்தே
ஞாயிறுபோல் ஒளிர் விட்டாய் பேசாலைதனில்,
தூயவன் பாதத்தினில் அடைந்திட்ட
பத்தாண்டு நினைவுகளில் உறைகின்றோம்
உற்றதும் சொந்தங்கள்.

*என்றும் உங்கள் இனிய நினைவுகளுடன்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்.*


# குருத்துவப் பொன்விழாக் கொடை பெற்ற அருட்பணி சேவியர் குரூஸ் பற்றிய மனப் பதிவுகள்

**அருட்பணி. இராசேந்தரம் ஸ்ரலின், யாழ் மறைமாவட்டம்**

புனித மடுத்தீனார் குருமடத்தில் பயிற்சி பெற்ற காலத்தில் அருட்தந்தை மேரி யோசப் அடிகளார் ஒரு தடவை மூத்த மாணவர்கள் எம்மை அழைத்து அருட் தந்தை சேவியர் குரூஸ் குருமட மாணவர்களுக்கு அனுப்பிய கடிதத்தையும் ரேப் றெக்கோடர் ஒன்றையும் காண்பித்தார். நாம் பாட்டுகள் பழகுவதற்கு அது மிகவும் பயன்பட்டது. மேலும் அங்கு நீண்ட காலம் வாழ்ந்த குருமட மாணவர்கள் தம் முன்னை நாள் அதிபர் சேவியர் குரூஸ் பற்றி உயர்வாகப் பேசுவதைக் கேட்டிருக்கின்றேன்.

மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் ஆன்மீகம்... போன்ற ஒருங்கிணைந்த உருவாக்கத்தில் இவர் கருத்தாயிருந்தார். அத்தோடு பரந்து வாசிக்கும் பழக்கமும் கொண்டவர். சின்னக் குருமட மாணவர்களைப் புனிதர்களின் வரலாற்றையும், சிறு சிறு ஆங்கிலக் கதைப் புத்தகங்களையும் வாசிக்குமாறு தூண்டுவது பற்றியும் அவற்றைச் சுருக்கமாகத் தம்மிடம் கூறுமாறு கேட்பதையும் பற்றி இவரிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் என்னிடம் கூறினார்கள். குருக்களை உருவாக்கும் கலை இவருக்குத் தனித்துவமான கொடையென்றே கூறவேண்டும்.

நானும், தற்போது குருக்களாக உள்ள ரூபன் மரியாம்பிள்ளை, மரிய செபஸ்ரியன், மற்றும் பொதுநிலையினராக உள்ள இம்மானுவேல் யாவரும் சென்னை, பூந்தமல்லி திருஇருதயக் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கற்றுக்கொண்டிருந்தபோது முதல்முறையாக அவரை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. உரோமாபுரியில் தன் மேற்படிப்பை முடித்துக்கொண்டு இலங்கை வரும் வழியில் எம்மைத் தேடிவந்திருந்தார். சாந்தமும் கனிவும் அவரது முகத்தில் தவழ்ந்தது. எம்மோடு அன்பாகப் பேசி நேரம் செலவிட்டது மாத்திரமல்ல, அதிபரின் அனுமதி பெற்று எம்மை சென்னை நகருக்கு அழைத்துச் சென்று இராவிருந்தளித்து மகிழச் செய்தார். இது எனக்கு மறக்க முடியாத ஒரு முதல் அனுபவம். அண்மையில் எனது குருத்துவ வெள்ளி விழா இடம்பெற்றபோது நேரமெடுத்து எனக்கு வாழ்த்துக்கூறிக் கடிதம் எழுதியிருந்தமை மறக்க முடியாத இன்னொரு அனுபவம்.



இவர் ஆழமான ஆன்மீகம் நிறைந்தவர் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். தனக்கு இறைவன் கொடுக்கும் எந்தப் பணியையும் தாழ்ச்சியோடு ஏற்றுச் சிறப்புறச் செய்வது இவரது உயர்நிலை ஆன்மீகத்திற்கு சான்று எனலாம். தன் துன்பத்தை எவரிடமும் முறையிடாது இறைவனிடம் ஒப்புக்கொடுத்து அவரிடமே ஆறுதல் தேடிப் பொறுமையோடு வாழ்பவர்.

நற்கருணை ஆண்டவரிலும், அன்னை மரியாளிலும் நிறைந்த பக்தி கொண்டவர். இளங்குருக்களுக்கு நல்லாலோசனை வழங்கும் ஞானம் மிக்க தந்தையாக மட்டுமன்றி, அவர்கள்மீது நிறைந்த அக்கறை கொண்டவராக விளங்கினார். அந்த வகையில் இவர் இளம் குருக்களுக்கு ஒரு நல்ல முன்மாதிரிகையாக விளங்குகின்றார். எவரும் இவரை எளிதில் அணுகிச் சென்று உறவாட முடியும். அளவான பேச்சு ஆனால் அதில் கருத்தாழம் அதிகமிருக்கும்.

அவரது குருத்துவப் பொன்விழாவிலே அவரது அன்புக்கு நன்றியாக இக்கட்டுரை அமைகின்றது. பொன்விழா நாயகனின் பணியால் இன்னும் பலர் இயேசுவின் அன்பை அனுபவிப்பார்களாக! அடிகளாருக்கு எனது பொன்விழா நல்வாழ்த்துக்கள்!

# புதிய குருக்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

### அருட்சகோதரர் பாலேந்திரன்

அருட்சகோதரர் சந்தியாப்பிள்ளை பாலேந்திரன் (பாலா) அவர்கள் புனித நீக்கிலார் ஆலயம், நாவாந்துறை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி செபஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை மற்றும் பிரான்சிஸ்கா தம்பதிகளின் புதல்வனாக 07.04.1979இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ் குருநகர் புனித ஜேம்ஸ் ம.வி.யிலும் கிளிநொச்சி பற்றிமா ம.வி. யிலும், உயர்கல்வியை வவுனியா புனித அன்ரனிஸ் தனியார் நிறுவனத்திலும் நிறைவுசெய்தார்.

### அருட்சகோதரர் வீனஸ் செபஸ்ரியன்

அருட்சகோதரர் பாக்கியநாதன் வீனஸ் செபஸ்ரியன் அவர்கள் புனித பரலோக அன்னை ஆலயம், நாவாந்துறை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை பாக்கியநாதன் மற்றும் மேரி மெற்றில்டா தம்பதிகளின் புதல்வனாக 18.09.1979இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ் குருநகர் புனித ஜேம்ஸ் ம.வி.யிலும் மன்/தச்சனாமருதமடு அ.த.க. பாடசாலையிலும், உயர்கல்வியை வவுனியா புனித அன்ரனிஸ் தனியார் நிறுவனத்திலும் நிறைவுசெய்தார்.

### அருட்சகோதரர் ஜெபதாசன்

அருட்சகோதரர் செபமாலை ஜெபதாசன் (ஜெபன்) அவர்கள் புனித பரலோக அன்னை ஆலயம், நாவாந்துறை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி அலெக்சாண்டர் செபமாலை, மேரி கற்பலங்காரி தம்பதிகளின் புதல்வனாக 21.01.1980இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ் சார்ள்ஸ் அ.த.க. பாடசாலையிலும், உயர்கல்வியை மன்/பண்டிவிரிச்சான் அ.த.க. பாடசாலையிலும் வவுனியா புனித அன்ரனிஸ் தனியார் நிறுவனத்திலும் நிறைவுசெய்தார்.

### அருட்சகோதரர் மரிசுதன்

அருட்சகோதரர் மரியதாஸ் பியோ மரிசுதன் (றீகன்) அவர்கள் புனித பரலோக அன்னை ஆலயம், நாவாந்துறை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் மற்றும் மார்த்தம்மா தம்பதிகளின் புதல்வனாக 03.09.1980இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் உயர்கல்வியை வவுனியா புனித அன்ரனிஸ் தனியார் நிறுவனத்திலும் நிறைவுசெய்தார்.

### பொதுவான குறிப்புக்கள்

இவர்கள் நால்வருமே அருட்சகோதரர் விமலதாசன் C.R அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரம சிறிய குருமடத்தில் தம் அழைத்தல் வாழ்வை ஆரம்பித்தனர். பின்னர் கண்டி தேசிய குருத்தவக் கல்லூரியில் தமது மெய்யியல் கல்வியையும், இறையியல் கல்வியையும் நிறைவு செய்தனர்.

இவர்களில் பாலா 14.01.2012 அன்று காலை 8.30 மணிக்கு நாவாந்துறை தூய நீக்கிலார் ஆலயத்திலும், வீனஸ், ஜெபன், றீகன் ஆகியோர் 16.01.2012 அன்று காலை 8.30 மணிக்கு நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்திலும் தமது முதற் திருப்பலியை ஒப்புக்கொடுப்பர்.

# பயஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும்

## சில குறிப்புகள்

மரியாம்பிள்ளை இம்மானுவேல் பயஸ் அடிகளார் 04.03.1938ல் கரம்பனில் பிறந்தார். ஆரம்பப் பாடசாலை மற்றும் குருத்துவ கற்கைநெறிகளைப் பூர்த்தியாக்கி 20 மார்கழி 1961இல் உரோமாபுரியில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1962இல் இலங்கை திரும்பிய அவர், நாவாந்துறை, மன்னார் ஆகிய பங்குகளில் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். பின்னர் யாழ்ப்பாணம் சென்றியரசர் கல்லூரியின் மாணவர் இல்லப் பொறுப்பாளராகவும் கல்லூரியின் உதவி அதிபராகவும் பணியாற்றினார். புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றிய பின்னர் நானாட்டான் பங்குத்தந்தையாகப் பணியாற்றி அங்குள்ள 9 துணை ஆலயங்களில் அரும்பணிபுரிந்தார். அதன்பின்னர் சில்லாலை, சங்கானை, மூளாய், இளவாலை போன்ற பங்குகளிலும் குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்திலும் அளப்பரிய சேவையாற்றினார்.

பின்னர் மன்னார் பங்குத்தந்தையாகவும், மன்னார் மறைக்கோட்ட முதல்வராகவும், மன்னார் மறைக்கோட்ட காணிப் பொறுப்பாளராகவும் பணியாற்றியதோடு புதிய மன்னார் மறைமாவட்டம் உதயமாக உழைத்த முன்னோடிகளில் முதன்மையானவராகவும் விளங்கினார்.

கிளி - முல்லை ஒரு புதிய மறைக்கோட்டமாக உருவானபோது அதன் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இவர் இராமநாதபுரத்தில் பத்தாம் பத்திநாதர் ஆலயத்தையும், உரித்திரபுரத்தில் பற்றிமா அன்னை ஆலயத்தையும், 8ஆம் கட்டை ஸ்கந்தபுரத்தில் ஆரோக்கிய அன்னை ஆலயத்தையும் , 153ஆம் கட்டையில் குழந்தை இயேசு ஆலயத்தையும், 155ஆம் கட்டையில் புனித அந்தோனியார் ஆலயத்தையும் கட்டியெழுப்பினார்.

யாழ் மனித முன்னேற்ற கரித்தாஸ் செடேக் நிறுவனத்தில் 11 ஆண்டுகள் சமூகப்பணியாற்றியபின்னர், திரும்பவும் கிளிநொச்சிக்கு சென்று கத்தோலிக்க மேம்பாட்டு நிலையத்தையும், தங்குவதற்கான தற்காலிக மண்டபத்தையும் சிறிய ஆலயத்தையும் அமைத்தார். குருக்கள் தங்கிச்செல்வதற்கான வசதிகளையும் தியான இல்ல வசதிகளையும், அமைத்துக்கொடுத்த பின்னர் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் பங்குத்தந்தையாக பணியாற்றினார்.

எழுத்துப் பணியில் ஆர்வம்கொண்ட இவர், 3 வருட ஞாயிறு வார சிந்தனைகளை, பாதுகாவலன் பத்திரிகையில் எழுதி பின்னர் அவற்றை மூன்று ஆண்டகளுக்குமான மூன்று நூல்களாக அச்சேற்றினார். வேதாகமத்தின் 5 புத்தகங்களை விளக்க உரைகளுடன் 5 பாகங்களாக இறுவெட்டில் வெளியிட்டார்.

அருளாளர் யோசவ்வாஸ் புனிதர் பட்டக் குழுவில் யாழ் மறைமாவட்ட பொறுப்பாளராக இருந்து, இவர் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது. 70களின் ஆரம்பத்தில் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தின் முன்றலில் யோசவ்வாஸ் முனிவரின் கலாச்சார முறையில் அமைந்த சுருபம் ஒன்றினை நிறுவிய பெருமை இவரையே சாரும்.

# திருமறைக்கலாமன்றம்

## கலைப்பணியில் 46வது ஆண்டு நிறைவு

திருமறைக்கலாமன்றத்தின் 46வது ஆண்டு நிறைவு தினம் 03.12.2011 சனிக்கிழமை இலங்கையின் பல மாவட்டங்களிலும் அமைந்துள்ள பிராந்திய மன்றங்களில் சமய வழிபாடு, ஒன்றுகூடல், இரத்த தானம் வழங்கல், மரம் நடுகை, தானம் வழங்கல், கலை நிகழ்வுகள் என பல்சுவை நிகழ்வுகளுடன் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

மன்னார் திருமறைக்கலா மன்றத்திலும் இறைவழிபாட்டுடன், ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றது.

"நாம் ஒரே குடும்பம்" என்னும் மகுடத்தின்கீழ் திருமறைக் கலாமன்றததின் இருபது மன்றங்கள் இன, மத, மொழி வேறுபாடுகளற்று இயங்கிவருகின்றன. பேராசிரியர், கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளாரினால் யாழ் மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு, தென் இலங்கை வரை பரந்து, விரிந்து, வியாபித்து தனக்கென ஓர் இடத்தை இந்த அமைப்பு பெற்றுள்ளது.

46 ஆண்டுகள் இம்மன்றம் உறுதியாய் நிலைநிற்பதற்குக் காரணம் இயக்குனர் நீ. மரியசேவியர் அடிகளாரின் அரும்பெரும் கலைப்பணியாகும். அவரின் வழிகாட்டுதலில் பல, மூத்த கலைஞர்களும், வளர்ந்துவரும் கலைஞர்களும் திருமறைகலாமன்றத்தின்



மரிய சேவியர் அடிகள் பண்பாடுகளை கடைப்பிடித்து அர்ப்பணிப்பு நிறைந்த தியாக சிந்தையோடு உறுதியாக செயல்பட்டுவருகின்றனர்.

இந்த நாள் மன்றத்தை கட்டியெழுப்பிய சிற்பி, இயக்குனர் பேராசிரியர், வணக்கத்திற்குரிய நீ. மரியசேவியர் அடிகளார் அவதரித்த நாளுங்கூட. இவரின் பணி சிறக்கவும், நீடிய ஆயுள் பலத்துடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

அத்தோடு இந்நினைவு நாளை முன்னிட்டு வவுனியா புனித. அந்தோனியார் ஆலய மண்டபத்தில் 04-12-2011 ஞாயிற்றுக்கிழமை இலங்கையில் சகல திருமறைக்கலாமன்றங்களின் இணைப்பாளர்களும், தொண்டர்களும் கலந்துகொண்டு காலையில் ஒன்று கூடல்களையும், கடந்தகால அனுபவப் பகிர்வினையும், எதிர்காலத் திட்டமிடலையும், கலந்துரையாடல்களையும் நடாத்தினர். மாலையில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

*- ஜோண்பொஸ்கோ (J.p)*
*இணைப்பாளர்,*
*திருமறைக்கலாமன்றம்,*
*மன்னார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா









## திருத்தந்தையின் புதன் மறையுரையைக் கேட்க ஆயிரக்கணக்கான மக்கள் வாராவாரம் ஒன்றுகூடுகின்றனர்



திருத்தந்தை ஒவ்வொரு புதன் கிழமையும் மூவேளைச் செபத்தை வத்திக்கானில் கூடிவரும் மக்களுடன் சேர்ந்து செபித்து அவர்களுக்கு மறையுரையாற்றுவது வழக்கம். திருத்தந்தையின் இந்த புதன் மறையுரையைக் கேட்கவும் அவரை நேரடியாகக் காணவும் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் வத்திக்கானுக்கு ஆயிரக்கணக்கில் வருகை தருகின்றார்கள்.
இந்த புதன் மறையுரையின்போது அந்த வாரத்தின் முக்கிய நிகழ்வுக்கு ஏற்றதாக திருத்தந்தை தனது மறையுரையை ஆற்றுவார்.

அஞ்சாதீர்கள்!
இதோ உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்! (லூக்.1: 10)
சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடரொளி உதித்துள்ளது. (எசாயா 9: 2)



## மடுத்திருப்பதியில் நடைபெற்ற டிவைன் தியானக் குழுவினரின் இறைவார்த்தைத் தியானம்



இந்தியாவின் கேரளா மாநிலத்தில் உள்ள சாளக்குடி டிவைன் தியான இல்லத்தின் தமிழ் பிரிவைச் சேர்ந்த குழுவினர் கடந்த நவம்பர் மாதம் 9 - 13ந் திகதி வரை மடுத்திருப்பதியில் புதிதாக அமைக்கப்பட்ட தியான இல்லத்தில் இறைவார்த்தைத் தியானத்தை நடாத்தினார்கள். தமிழ் பிரிவின் துணை இயக்குனர் திரு. பீச்சுக்கூனன் தலைமையில் இந்தக் குழுவினர் வருகை தந்திருந்தனர். இலங்கையின் தென் பகுதியில் இருந்து ஏறக்குறைய 250 பேரும், மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த மக்கள் ஏறக்குறைய 250 பேரும் இத்தியானத்தில் பங்கேற்றனர்.

அருட்பணி. டக்ளஸ் மன்னார் மறைமாவட்ட பங்குகளில் இருந்து பணியாளர்களை ஒன்றுசேர்ப்பதில் பெரும் பங்காற்றினார். அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளையின் வழிகாட்டலில் அருட்பணி. றூபன் பெனாண்டோ இத்தியானத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.




மடுத்திருப்பதியில் நீர்விநியோகத் திட்டத்தை நீர்வழங்கல் அமைச்சரும் மன்னார் ஆயர் அவர்களும் திரைநீக்கம் செய்து ஆரம்பித்துவைப்பதையும், மடுப்பரிபாலகர் எமில் அடிகளார் செபவழிபாடு நடத்துவதையும் படங்களில் காணலாம்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 22 |
| 08 | 11 |
| 1963 | 2010 |



### அமரர் திரு. செபஸ்தியான் சவிரி

அன்புத் தந்தைக்கு ஒருவரி! விண்ணகத்தில் விதையாய் வீழ்ந்து - மண்ணில் விருட்சமாகி எம் அன்னைக்கு அன்புக் கணவனாகி பாசமுடன் எமை வளர்த்தீர் மன்னார் முருங்கனிலே சின்னச்செட்டியாய் வாழ்ந்து செல்லமாய் எமைக் காத்தீர் மரமாக நாம் வளர்ந்து கனி தருமுன்னே காலனவன் எமைவிட்டு பிரித்ததேனோ? கலங்கி நிற்கின்றோம், கதியற்றுப்போனோம் ஆறவில்லை எம் துயர் என்றோ நாள் வரும் அன்று உம்பெயர் காத்து கௌரவத்துடன் வாழ்ந்து முகமுகமாய் உமைக் காண்போம் எனக் காத்திருக்கின்றோம்.
உம் ஆன்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தகவல் : மனைவி, பிள்ளைகள்


## உங்கள் அன்புக்குரியவர்களுக்கு

பயனுள்ள புதுவருட அன்பளிப்பு வழங்குவதைப்பற்றி சிந்திக்கின்றீர்களா?

### அப்படியானல் இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

**உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் அன்புக்குரியவர்கள் மன்னாவை மாதா மாதம் பெற்று பயனடைய நீங்கள் வழிசமைக்கலாமே!**

உங்கள் அன்புக்குரியவரின் முகவரியை தெளிவாக எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 800ஐயும், வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 3000ஐயும் அனுப்பவும்.

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ, அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ, அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம்.

காசோலை மூலம் அனுப்புவதாயின்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd. Mannar.
பணம் பெறுபவர் பெயர் : The Editor - MANNA.
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782
என்று குறிப்பிடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள கறிற்றாஸ் – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.